
ஜன. 02 - 08, 2005 Jan. 02 - 08, 2005 24 பக்கங்கள் 16.00

2/-1-2005

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



# பேரழிவு!

# 'சுனாமி'

''காலை 8 மணி இருக்கும். எனது ஹோட்டலின் மேல்மாடியிலிருந்து கடலைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் கடந்த 6 வருடமாக வழக்கமாக பார்த்து ரசித்த கடல் கொஞ்சம் வித்தியாசமாக இருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

நிலாவெளி பிரதேச கடலுக்கே உரித்தான




— உல்லாசப் பிரயாண காலத்துக் குரிய — அமைதியாக தவழ்ந்து வரும் அலைகளும் அங்கு இல்லை. மாரி காலத்தில் அடித்து புரண்டு ஆரவாரித்து பொங்கிவரும் பேரலைகளையும் நான் காணவில்லை.

ஆனால், நிரம்பி ததும்பி நிற்கும் நீர் நிலை ஒன்றைப் போல் — சற்று பழுப்பு நிறத்துடன் அமைதியாக இருந்தது கடல். ஆனால், ஏதோ ஒரு வித்தியாசத்தை என்னால் உணர முடிந்தது.

அண்ணாந்து பார்த்தால் நீலவானம். கிழக்கில் உதித்த சூரியன் நல்லதொரு பொழுது விடிவதை காட்டியது. எனவே, என்றுமே இல்லாத அந்த பழுப்பு நிறக் கடல், நெஞ்சிலே ஆற்றொண்ணா கோபத்தை வைத்து — அமைதியாக முகம் காட்டும் நசுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தினரைப் போல் ததும்பிக் கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## திடீரென மறைந்த கடல்

பழுப்பு நிறத்தின் காரணம் கூட ஓரளவு புரியக் கூடியதாக காணப்பட்டது. கடல்பாசி அடியில் உள்ள தழை குழைகள், வண்டல் என்பன மேல் மிதந்து கொண்டிருந்தன. அப்பொழுது திடீரென்று கடல் நீர் பின்வாங்கி சமுத்திரத்தினுள் சென்று விட்டது போன்றிருந்தது. கடல்இருந்த இடத்தில் ஓர் உதைபந்தாட்ட திடல் அளவு வெட்டவெளி. உள்வாங்கிப்போனகடல்எங்கே? என்னவாயிற்று? என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது எங்கேயோ ஒரு தூரத்திலிருந்து கடல் ஓடிவந்தது.




வந்த கடல் தரையருகே ஓரடி — ஈரடி உயரத்துக்கு எழும்பி தரையைத் தொட்டுக் கொண்டிருக்கையில் அடுத்த அலை வந்தது. வழக்கமான நுரையை அலையில் காணவில்லை.

அந்த அலை முதலாவது அலையைவிட இன்னும் ஓரடி அதிகமாக எழும்பி நானிருந்த ஹோட்டல் அருகே விழுந்து பரவியது.

## கடலா, அரக்கனா?

என்ன நடக்கின்றது என்று நான் யோசிக்குமுன்னரே ஒரு பெரும் இரைச்சல் சப்தம். நிமிர்ந்து பார்த்தேன். அது என்ன? கடலா? கடல் அரக்கனா? கடலிலிருந்து ஏதாவது இராட்சத ஜந்தா? பெரியதொரு இராட்சத அலை கடலில் இருந்து 20 அடி உயரத்தில் எழும்பி கரையை நோக்கி வந்து கொண்டிருந்ததைக் கண்டேன்.

அது வந்த வேகம். தொடர்ந்து வந்த இரைச்சல் — திடீரென்று இருட்டுப் பட்டது போன்ற பகல்வேளை — எனது நாடிகள் அடங்கிவிட்டன.

எப்படியாவது தப்பவேண்டும். இல்லாவிடில் இந்தக் கடல் அரக்கன் என்னை விழுங்கி விடுவான் என்று நினைத்து — ஹோட்டல் மாடியின் பின்புறம் ஓடினேன். அதற்குள் வேகமாக அந்தக் கடல் இராட்சதன் ஹோட்டல் முன் பகுதியை உடைத்து உள்ளே வந்து கொண்டிருக்கும் சப்தம் கேட்டது.

இனி எனக்கு ஆண்டவன் தான் துணை என்று எண்ணி — அம்பாளே என்னைக் காப்பாற்று என்று அந்த இரண்டாவது மாடியிலிருந்து குதித்தேன். குதிக்கும் போது எனக்குப் பின்னால் அந்த இராட்சத அலையும் மோதி என்னை அப்படியே தூக்கி எறிந்தது போல் ஒரு உணர்வு. கண்விழித்து பார்த்த போது — ஒரு கால் மைல் தூரத்தில் கம்பி வேலியில் யேசுபிரான் போல் அறையப்பட்டு காயத்துடன் இருந்தேன். திரும்பிப் பார்த்தால் நான் இருந்த ஹோட்டல் உடைந்து சிதைந்து சின்னாபின்னமாக இருந்தது. நானிருந்த இடத்திலிருந்து முழங்காலுக்கு மேல் கடல் நீர் இருந்தது. நான் இருந்த இடத்தை நோக்கி — திரும்பவும் கடல் வருவதும் போவதுமாக இருந்தது. ஆனால், முன்னர் காணப்பட்ட ஆக்கிரோஷமோ, உக்கிரமோ அலைகளில் இல்லை. ஒரு மாதிரி — என்னை விடுவித்து உயிர் பிழைத்தேன்.''

இது நிலாவெளி கடற்கரைப்பகுதியில் ஒரு அழகான ஹோட்டலை கட்டி கடந்த ஆறு மாதகாலமாக நடத்தி வந்த எனது நண்பர் சந்தித்த நடந்து முடிந்த கடந்த வார இயற்கை அனர்த்தத்தின் நேரடி அனுபவம்.

எனது நண்பர் அம்பாளின் அருளினால் உயிர்தப்பினார். ஆனால், எத்தனை ஆயிரம் பேர் இன்று அதிர்ஷ்டமோ — அருளோ கிடைக்காமல் உயிர் விட்டனர்.


## ஜப்பானியருக்கு பழக்கப்பட்ட சுனாமி

கடந்த வாரம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தை — கடல்கொந்தளிப்பு, இராட்சத அலை என்று பல்வேறு பெயரிட்டு அழைத்தாலும் அதனை விஞ்ஞானிகள் 'சுனாமி' TSUNAMI என்று அழைப்பார்கள்.

'சுனாமி' என்பது ஒரு ஜப்பானிய சொல். இரண்டு எழுத்துக்களால் உருவான சொல். 'சு' என்றால் துறைமுகம், 'நாமி' என்றால் அலைகள். துறைமுகத்தில் ஏற்படும் அலைகள் என்பதே இதன் கருத்து.

ஜப்பானை கரையோரப் பகுதிகள் யாவும் சிறுசிறு துறைமுகங்களே. ஜப்பானில் அதிகம் எரிமலைகள் உள்ளன. இந்த எரிமலைகள் குமுறும் போது ஏற்படும் அதிர்வுகளால் ஜப்பானின் அண்டிய பகுதிகளில் பேரலைகள் ஏற்பட்டு — இந்த சிறு துறைமுகங்களில் பாதிப்பு ஏற்படுத்துகின்றது.

இதனால் இப்படி எழும் பேரலைகளுக்கு — துறைமுக அலை — சுனாமி என்று பெயர் சூட்டப்பட்டது. பின்னர் ஜப்பானில் மட்டுமல்ல எங்கும் ஏற்படும் — பேரலைகளுக்கு — அழிவைத்தரும் இராட்சத அலைகளுக்கு 'சுனாமி' என்ற பேரே வழங்கப்படலாயிற்று.




## சுனாமி அலைகள் எப்படி ஏற்படுகின்றன?

இந்த சுனாமி அலைகள் தான் எங்கேயோ ஆரம்பித்து — எத்தனையோ மைல் களை கடந்து வந்து — எமது சின்னஞ் சிறு இலங்கையில் மட்டுமல்ல — சுற்றி வர உள்ள — தெற்காசிய நாடுகள் அனைத்திலும் அழிவுகளையும் பேரழிவுகளையும் ஏற்படுத்தின.




'சுனாமி' அலைகள் எப்படி ஏற்படுகின்றன? பூமி ஒரு காலத்தில் ஒரு அக்னி கோளமாக இருந்தது என்பதை நாம் அறிவோம். கொஞ்சம் கொஞ்சமாக பூமி குளிரத் தொடங்கி — பின்னர் அதன் மேற்பரப்பு மனிதர் வாழக்கூடிய நிலமாகவும், ஆழ்ந்த கடல்கள் உள்ள பள்ளத் தாக்குகளாகவும் மாறியது. என்றாலும் — பூமியின் உட்பகுதி இன்னும் அக்னிக் கோளமாகவே உள்ளது.

பூமியின் மேற்பரப்பு காலம் செல்லச் செல்ல — உடைந்து கண்டங்களாக மாறியது.


இப்படி உடையும்போதும் — உடைந்து விலகிச் செல்லும் போதும் — பூமியின் அடியில் உள்ள பாறைகளிலும் விரிசல்கள் தோன்றின. இந்த விரிசல்கள் மூலமாக உட்பகுதியில் உள்ள அக்னி குழம்புகள் வெளிவந்து எரிமலைகளாக பரிணமிக்கின்றன.

அதுபோல் பூமியின் அடியில் தரையானது தட்டுத் தட்டுகளாக உள்ளது. ஒரு கண்டத்தின் தட்டு — கண்டத்தை விட்டு வெளியே சமுத்திரத்தின் அடிவரை நீண்டிருக்கும். இப்படியாக உள்ள தட்டுகள் ஒன்றோடு ஒன்று உரசி — மேலேயோ, கீழேயோ செருகப்படும் போது ஏற்படும் அசைவு பூமி அதிர்வாக வெளிவருகிறது. இப்படியாகத்தான் ஆசியா கண்டத்தின் தட்டும் ஆஸ்திரேலியா — ஆசியா தட்டும் செருகப்பட்டதனால் சமீபத்தில் பெரிய அளவிலான பூகம்பம் சுமத்திராவில் ஏற்பட்டது.

## சமுத்திர அடியில் இருந்து 10 கி.மீ. ஆழத்தில்

ஆனால் இந்த செருகலோ சமுத்திர அடிமட்டத்திலிருந்து 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நடைபெற்றது. இந்த செருகல் நடைபெற்ற இடத்தை EPICENTER பூகம்ப மத்தி என்று அழைப்பர்.

இந்த செருகல் ஏற்படும் போது — ஒரு தட்டு கீழேயும் மறுதட்டு மேலேயும் அசைவுறுகிறது. அப்பொழுது கீழே செருகப்படுகின்ற தட்டிற்கு மேலேயுள்ள அவ்வளவு எடையான கடல் நீரும் சமநிலையிலிருந்து கீழே இறங்குகின்றது. இதனால் சமநிலையை மீளப் பெற்று நீர் மட்டத்தை பேண — நீர் அசைவுகள் நடைபெறுகின்றன.



இந்த நீர் அசைவுகள் அலைகளாக பரிணமிக்கின்றன. இந்த அலைகள் பல மடங்கு சக்தி வாய்ந்தவை. குளத்தில் கல் எறிந்தால் எப்படி அலை அலைகளாக புறப்பட்டு கரையை சேர்கின்றனவோ அது போல் இந்த அலைகளும் ஆரம்பித்த இடத்திலிருந்து வட்ட வட்டமாக செல்ல ஆரம்பிக்கின்றன. இவை சுற்றுவட்டாரத்திலுள்ள தரைகளை நோக்கி செல்கின்றன.

## மணிக்கு 600 மைல் வேக

இந்த அலைகள் தான் 'சுனாமி' என்ற இராட்சத கடல் அலைகளின் ஆரம்பம். இவை ஒன்றன் பின் ஒன்றாக மணிக்கு 450 — 600 மைல்கள் வேகத்தில் சமுத்திரத்தில் பயணிக்கின்றன. கடலில் இருப்பவர்களுக்கு, கப்பல்களுக்கு இந்த அலைகளின் தாக்கம் தெரிவதில்லை. ஏனென்றால் இவற்றின் அலை நீளம் நீளமானது. அதாவது ஒரு அலைக்கும் அடுத்து வரும் அலைக்கும் உள்ள தூரம் மிகவும் நீண்டது. அதுபோல் அலை

**—அருள்—**

அசைவு உயரமும் AMPLITUDE ஒரு சில அடிகளே.

எனவே விமானத்திலிருந்து பார்த்தாலும் 'சுனாமி' அலைகள் பயணிப்பதைக் கண்டறிய முடியாது. இதனால் தான் 'சுனாமி' இராட்சத அலைகள் வருவதைக் கண்டறிந்து சொல்வது கடினமாகிறது. ஏதோ ஒரு அனுமானத்தில் — பூமியதிர்வு ஏற்பட்டால் 'சுனாமி' அலைகள் ஏற்படலாம் என்று ஊகித்து பூமி அதிர்வுக்கு அருகில் உள்ள பிரதேசங்களில் 'சுனாமி' அபாயம் பற்றி அறிவிக்கப்படுகிறதே தவிர — நிச்சயம் 'சுனாமி' அலைகள் ஏற்படும் என்று உறுதியிட்டு கூறமுடியாது.

## 100 அடி வரை உயர்ந்து வரும் அலை

சுனாமி அலைகள் கரையை நெருக்க நெருக்க அவற்றின் அலை நீளம் குறைந்து வேகம் குறைகிறது. ஆனால் அவற்றின் உயரம் சிலவேளைகளில் 100 அடிவரை உயருகின்றது. ஆனால் 10 அடி தொட்டு 20 அடி உயரமுள்ள சுனாமி அலைகள் கூட பாரிய பலத்த சேதங்களை தரவல்லன.

சுனாமி அலைகள் ஏற்பட பூமி அதிர்வுகள் மட்டும் காரணம் அல்ல. நிலச்சரிவுகள், எரிமலை குமுறல்கள், பூமியில் பாரிய விண்கற்கள் விழுவதால் ஏற்படும் அதிர்வுகள் கூட சுனாமி அலைகளை உருவாக்கும்.

கரையை நெருங்க நெருங்க ஒவ்வொரு அலைகளுக்கும் இடைப்பட்ட நேரம் 5 நிமிடத்திலிருந்து 90 நிமிடம் வரை வித்தியாசப்படலாம்.

முதலாவது வரும் சுனாமி அலை அவ்வளவு சக்தி வாய்ந்தது அல்ல. பெரியதும் அல்ல. மூன்றாவது நான்காவது சுனாமி அலையே பிரம்மாண்டமானது. 20—25 அடி.

(15 ஆம்பக்கம்பார்க்க)

### சுனாமி அலைகள் வருவதை அறிவது எப்படி

பூமி அதிர்வுகள் 20 செக்கன்களுக்கும் அதிகளவில் ஏற்பட்டால் அல்லது பூமி அதிர்வின் அளவீடு 6.5 ரைட்டர் அளவு அல்லது அதற்கு அதிகமாயிருந்தால் சுனாமி அலைகள் ஏற்படும் சாத்தியம் உண்டு.

இப்படிப்பட்ட அதிர்வுகளை அடுத்து

அ) கரையோரப்பகுதிகளில் கடல் நீரின் வற்றுப்பெருக்கு அதிகமாக இருத்தல்.

ஆ) வழக்கமான உருண்டு வரும் கடல் அலைகளோ, அல்லது ஆங்கில எடுத்து 'V' வடிவிலான அலை அமைப்புகளோ இல்லாதிருத்தல்.

இ) திடீர் திடீரென ஆர்ப்பரித்து குமுறி எழும்பும் அலைகள். இந்த கடல் நீரில் பாசி, வண்டல்கள் நிரம்பியிருத்தல்.

என்பவை சுனாமி அலைகளின் வரவினை அறிவிக்கும் அபாய அறிவிப்புகளாகும்.

### இப்படி பயங்கர அலைகள் வருவது தெரிந்தால் செய்ய வேண்டியவை.

அ. கரையோரப்பகுதியிலிருந்து — கடல் மட்டத்திலிருந்து — 100 அடி உயரமான ஒரு மேட்டு இடத்திற்கு விரைவாக சென்று விடவேண்டும்.

ஆ. இப்படியான பாதுகாப்பான இடம் இல்லாவிடில் — குறைந்தது இரண்டு மைல் தூரம் கரையைவிட்டு உள் பிரதேசங்களுக்குள் தஞ்சம் அடையவேண்டும்.

இ. இப்படியான பாதுகாப்பான இடங்களை குறைந்தது 15 நிமிடகால அளவில் அடையக் கூடியதாக இருக்க வேண்டும்.

ஈ. அவசர தேவைக்கான பொருட்கள் என்று — ஒரு பற்றரியுள்ள டோர்ச் லைட், தீப்பெட்டி, மெழுகுதிரிகள், ஒரு மாற்றுடுப்பு, காய்ச்சல் தலைவலிக்கு மாத்திரைகள் — குடிப்பதற்கு தண்ணீர் போத்தல் என்பவற்றை தயாராக எடுத்துச் செல்ல வேண்டும். காலில் கடினமான சப்பாத்து அணிய வேண்டும். சுனாமி அலைகளில் காயப்பட்டவர்கள் அநேகர் — கண்ணாடி, கம்பித் துண்டுகள் கால்களில் வெட்டியதால் பாதிக்கப்பட்டவர்களே.

உ. பூமி அதிர்வுகள் ஒன்று மட்டும் ஓரிடத்தில் ஏற்படுவதில்லை. தொடர்ந்து ஒரு சில மணித்தியாளங்களுக்கு ஒருக்கால் வரிசையாக ஏற்படும். எனவே இந்த பாரிய அலைகளும் — அடிக்கடி ஏற்படலாம். எனவே சுனாமி அலை வந்து போய்விட்டது இனி வராது என்று அடுத்த நிமிடமே கரைக்குச் செல்லாதீர்கள்.

# கவிதைப் பூங்கா

### வருகிறேன்

அருகில் வருகிறேன்
தென்றலாய்
உன்
சேதி கேட்டு...
நீ சோகத்தின்
உச்சியிலும்
வாழ்வின்
பூர்வீகத்திலும்
இருந்தழைப்பதால்
வசந்தமாய் வருகிறேன்.
தோற்றுவிடுதலும்
ஒருவகையில்
வெற்றிதான்.
அதுவே
இறை தீர்ப்பு
என்கிறது
என் அகராதி!
அழாதே
நீ அழும் சத்தம்
அகிலத்துக்கே
கேட்கிறது...
இன்னும் தென்றல்
உன் வாசல் வரும்
கனவுகளாகவோ
கற்பனையாகவோ அல்ல
புத்தகத்தை
மூடிவிடு
புதிய
அத்தியாயங்கள்
ஆரம்பமாகும்.
தென்றல்
தூரத்திலில்லை.
சன்னல்களை
திறந்துபார்
அதன்வழியே
வருகிறான்
ஆறுதல் சொல்ல!

*ஆதம்.எம.நயீம்,*
*மருதமுனை-03.*

### நினைவே நீதான்

எல்லா இரவுகளும்
விடிவது கதிரவனால்
ஆனால்...
என் இரவுகள்
விடிவது-உன்
கண்களினால்.
என் இதய விலாசம்
நீ..
என் வீட்டு
விலாசத்தையா
விசாரிக்கிறாய்?
தூக்கத்தைக் கலைத்து
ஏக்கத்தை ஏற்படுத்தி
உறக்கத்தை
கலைத்துவிட்ட
மருண்ட விழி மானே
நீ அருகில் இன்றி
நித்தம் கனவில்
கரைகிறது இரவு.
காதோடு மடலாக
உன்னோடு
உறவாடக் காத்திருக்கும்
நிமிடங்கள்
தொல்லை தருகின்றன.
உயிர்த்திருக்கும்படியாய்
உன் சுவாசத்தின்
ஒரு துளி போதும்.
உன் பார்வையை
என் மேல்
படர வை.
என் மணிக்கொடியே!

*ரி.சதீஸ்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

### மாலைப்பொழுதில்

மனதில் சில கனவுகள்...
நீண்ட இரவுக்கான
ஒத்திகை...
இரவுக்கும் பகலுக்கும்
இடையில்
ஒருசில மணித்தியாலங்கள்...
கண்ணீரில்
கரைகிறது இதயம்.
விழிகளில்
வடிகிறது உதிரம்.
இவைகளின்
வரவுகளில்
உன் ஞாபகங்கள்...
சில வினாடிகளில்
வருகின்றன...
செல்கின்றன...
நீ எப்போது வருவாய்
என்னிடம் அல்ல
என் கனவுகளில்...?

*வி.விஜேந்திரா,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

### மரணம்

தாகித்த குடல்
நனையவில்லை
இன்னும்
தண்ணீரால்...
பாதியுடன் இருக்கிறது
பசித்த வயிறு.
இடை நடுவே
எத்தனையோ
எதிர்பார்ப்புகள்...
சொன்ன
சில வார்த்தை
சொல்லவென
பல வார்த்தைகள்...
ஆரம்பமாகுமுன்னே
முடிவடையும் ஆசைகள்...
நிஜங்கள்
நொறுங்கிப்போகும்
ஒரு நிமிடம் அது!

*ஜவாஹிர்,*
*ஹொறவப்பொத்தானை.*

### கனவுத்தோழி

தூக்கம் கலைந்தேன்...
கண்ணீரில் கரைந்தேன்...
கனவோடு வந்து
கவி பாடி
கொண்டிருந்தவள்
நான்
விழி திறந்த போது
வழி தவறிப்போனாள்.

*ஆர்.பிரகாஷ்,*
*ஒட்டுசுட்டான்.*

### ஆண்

காதல் எனும் வலையில்
சிக்க வைத்து
முடிவில் நீ யார் என
வினாத் தொடுப்பவன்.

*எஸ்.வைசாலி,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

### யுத்தம் நடத்தும் புத்தாண்டு

யுத்தம் நெய்திடும்
புத்தாண்டு
முத்தம் கொடுக்கும்
நான் முளைக்குமா?
அனர்த்தம் பெய்திடும்
புத்தாண்டு
அமைதியில் நனையும்
நான் விளையுமா?
துட்பம் கொய்யும்
புத்தாண்டு
உலகில் சிரிக்கும்
நான் உதிக்குமா?

*நல்லை அமிழ்தன்.*

### காதல்

இன்பத்தில் துன்பம்
கூடி விளையாடுவது
காதல்...
ஊடலுடன் கூடல்
சேர்ந்து உறவாடுவது
காதல்...
புன்னகையும்
கண்ணீரும்
கவிபாடிக்கலப்பது
காதல்.
நான் என்பதும்
நீ என்பதும் அன்றி
நாம் என்பதே
உண்மைக்காதல்.

*அ.ராஜீவ் கிருபா,*
*நாச்சிக்குடா.*

### காதல் கடிதம்

கலப்பட உலகில்
காதல் கடிதங்களின்
விலை அதிகம்.
வாசிப்பதற்கு
இனிமை
என்பது சதவீதம்
பொய்
இவை கலந்த
அருமையான
பொருள்
ஏமாற்றி
விற்கப்படுகிறது
பெண்களுக்கு

*ஈ.யாதன்*
*சப்ரகமுவ பல்கலைக்கழகம்.*

### பூகோள புதிர்கள்

உலகம்
உருண்டுபோகின்றது
அதில்
உண்மைகள் யாவும்
சுருண்டு போகின்றன.
பாருலகில்
பெருகி வரும்
பற்பல
கண்டுபிடிப்புகள்
மூளைச்சலவைகள்
யாவும் முந்தையோரின்
தடமழித்து
சிந்தனைச்சுவட்டில்
சிற்பமாகின்றன.
மேற்கத்தேயக் கருத்துகள்
மனிதனை
மிருக மயப்படுத்தி
மனிதப் பண்பையும்
மானிட உறவையும்
கொல்கின்றன.
வாதங்கள் இன்று
எதிரும் புதிருமான
பூகோள
புதினங்களாகின்றன.
சர்வதேச விருட்சத்தில்
தேசியம் நகரம் கிராமம் என
படர்ந்த விழுதுகள்
புரிந்துகொள்ள முடியா
புதிர்களாகின்றன.
இப்போதெல்லாம்
மனித
முரட்டுக்கரங்களில் தான்
உலகமே
உறங்குகின்றது.
அது
ஊமை விழி கசிய
இன்று அபயம் கோரி
இரங்குகின்றது.

*இர்ஷாத் ஹாபில்,*
*ஏறாவூர்.*

### அமைதிச் சூழலில்

காற்று வீச
கிளைகளுடன்
மரம் குதூகலிக்கிறது
தான் இருக்கும்
தரையின் தன்மையறியாது!

*சி.நிரஞ்சன்,*
*நாவலப்பிட்டி.*

### கண்டுவிட்டேன்

ஒவ்வொரு தேனியும்
சொல்லிக்கொள்கிறது
உன் பேச்சில் தெறிக்கும்
ஒவ்வொரு துளி
எச்சிலிலும்
தேன்துளி இருப்பதாய்!
ஆனால்
என்னோடு நீ பேசும்
ஒவ்வொரு
வார்த்தையிலும்
கண்டுகொள்கிறேன்
அதில்
உள் மனதை
அரிக்கும்
நஞ்சமிலம் இருப்பதை!

*க.சிவானந்தம்,*
*பூநகர்.*

### பிரியமானவளே

என் உணர்வுகளை
உசுப்பிவிட்டு
உன் உணர்வுகளை
ஏன் அடக்குகிறாய்?
என்னை
வெறுப்பதாய் காட்டி
உன்னை நீயே
ஏன் இழக்கிறாய்?
உன் உரிமைகளை
உதறிவிட்டு
என் உணர்வுகளை
ஏன்
உதாசீனப்படுத்துகிறாய்?
என் இதய
அறைகளை
இடிப்பதாய் நினைத்து
உன் உயிரை
ஏன் மறுக்கிறாய்?
என்னை
காதல் வலைக்குள்
வீழ்த்திவிட்டு
ஏன் நீ
சிக்கலுக்குள்
மாட்டிக்கொள்கிறாய்?
என் நித்திரையை
வாங்கிவிட்டு
கனவில் மட்டும்
ஏன் வந்துபோகிறாய்?

*ரகுபாரதி,*
*கம்பர்மலை.*

### நினைவுச் சோகங்கள்

காதல் கப்பை
இதயத்தை விட்டு
கரையோரம்
தள்ளிவிட்டேன்
அவளின் ஞாபக
அலையோ
சுழன்று சுழன்று
மனசுக்குள் எழுந்தது.
மனம்
அவள் பக்கம்
நாடியது.
அவளின் நினைவின்றி
இறுதி வார்த்தைகள்
ஒதுக்கிவிட்ட
சோகங்கள்
தாங்கவில்லை
மனசுக்குள்
அழுதேன்
அவள் நினைவை மட்டும்
அகற்ற முடியவில்லை.

*ஜெ.எம்.பைறாஸ்,*
*பாலமுனை.*

அந்தச் சம்பவத்தைக் கேட்ட நேரத்தில் இருந்தே அழுதழுது கன்னமே வீங்கி இருந்தது ப்ரியாவுக்கு. ஈஸ்வரன் இப்படியெல்லாம் செய்வான் என்று கனவில் கூட அவள் நினைக்கவில்லை. "போயும் போயும் சீ... அவனுக்கு கவிதா அக்கா தான் கிடைச்சாளா? அதுவும் ஆறேழுவயது அவளுக்கு அதிகம். நினைக்கவே என்னமோ பண்ணுதே! நானும் இத்தனை நாட்கள் காதலித்தேன்! நான் போதாது என்று கவிதா அக்காவையும் காதலித்திருக்கிறானே? காதலித்ததோட விட்டானா! அவள் வைத்திலையும் பிள்ளையைக் கொடுத்து விட்டானே பாவி..."

வாய்க்கு வந்தவாறு அவள் ஈஸ்வரனைத் திட்டிக் கொண்டிருக்க அவ்விடம் வந்து நின்றான் ஈஸ்வரன்.

ஈஸ்வரனைக் கண்ட ப்ரியாவின் நெஞ்சம் அனலாய்க் கொதித்தது "ப்ரியா ஆத்திரப்படாமல் நான் சொல்லுறதைக் கொஞ்சம் காது கொடுத்துக்கேள்!"

"சீ..... பேசாதையடா நீ.....என் பெயரை உச்சரிக்கும் தகுதி இப்போது உனக்கில்லை. நீ... நீ... என் காதலனா? எப்படி எல்லாம் ஆசைவார்த்தை பேசி என்னைக் காதலித்துவிட்டு கடைசியில் இப்படி என்னையே ஏமாற்றி விட்டாயேடா? எப்படியடா என்னை ஏமாற்ற உனக்கு மனசு வந்தது"

ஈஸ்வரன் கண்கள் கலங்கிய நிலையில்,

"அப்படி எல்லாம் நினைக்காதே ப்ரியா.

அப்படி நீ பேசாதே ப்ரியா. நான் தாங்க மாட்டேன் ப்ரியா."

"என்ன? அப்படி எல்லாம் நினைக்காதே என்கிறாய்? காதலிக்க ஒருத்தி. ஆசையைத் தீர்க்க ஒருத்தி. கல்யாணம் கட்ட ஒருத்தி. இது தான் ஆண் வர்க்கத்தின் வாலிப விளையாட்டா? நீங்கள் திருந்தவே மாட்டீர்களா? அன்பை எதிர்பார்க்காது அழகையல்லவா எதிர்பார்க்கிறீர்கள்"

ஈஸ்வரனை மட்டுமல்ல, ஆண் வர்க்கத்தினரையே கேவலமாக ஏசினாள் ப்ரியா.

"ஏன்? ப்ரியா இப்படி கேவலமாக ஏசுகிறாய்?"

ஈஸ்வரன் சொன்னதைக் கேட்க ப்ரியாவுக்கு மூக்கு நுனியில் கோபம் வந்தது.

"அப்போ! எப்படி என்னை ஏசச்சொல்கிறாய்? ஓ... கெட்ட வார்த்தையாலே ஏசச் சொல்கிறாயா? இனியும் நீ... இந்த இடத்திலேயே நின்றாய் என்றால் அந்த வார்த்தையும் என் வாயால் வந்து விடும். தயவு செய்து இவ்விடத்தை விட்டு போய் விடு"

ஈஸ்வரன் மீதுள்ள கோபத்தை வார்த்தை வடிவில் வெளிக்காட்டி கத்தினாள் ப்ரியா.

* * * *

ஈஸ்வரன் அங்கிருந்து சென்றுவிட்டான். கவிதாவின் தந்தை ஆரோக்கிய நாதர் மகனை ஏசிக்கொண்டிருந்தார்.

"டேய் வினோதன் நீ என்ட மகனாடா. கவிதாவின் தம்பி தானாடா நீ. எங்கேயோ அனாதையாக இருந்தவனை வீட்டுக்கு அழைத்து வந்து இனிமேல் இவனும் உங்கள் பிள்ளைகளில் ஒருவன் என்று அறிமுகப்படுத்தி. மகன் என்றும் சொல்ல வைச்சிட்டேயடா? இவனையா என் பிள்ளை என சொல்லச் சொன்னாய். அக்கா.. அக்கா என்று தினமும் வாய் நிறைய கூப்பிடுவானே! கடைசியில் இப்படி ஒரு விபரீதத்தை அவளுக்கு கொடுத்திட்டானே. பாவி பாவி நாசமாய்போவான். பெண்பாவம் பொல்லாதது. அவன் நல்லாயிருக்க மாட்டான்.

"அப்பா ஈஸ்வரனைத் திட்டாதீங்க. நீங்க திட்டினால் நிஜமாக பலித்திடுமப்பா."

வினோதன் கூறியதைக் கேட்டு மேலும் ஆரோக்கிய நாதருக்கு ஆத்திரம் கூடியது. இதனைக் கவனித்த கவிதாவின் தாய் காமாச்சி "நீங்க இப்படியே பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. முதல்ல கவிதாவைப் பற்றி சிந்தித்து நல்லதொரு முடிவு எடுங்க" என்று நைஸாகச் சொல்லிவிட்டு தன் வேலையை கவனிக்கத்தொடங்கினாள்.

மனைவியின் பேச்சுக்கு இணங்க சிந்தித்தார் ஆரோக்கிய நாதர். ஒரு மணித்தியாலம் கழித்து முடிவு ஒன்று எடுத்தார். தான் எடுத்த முடிவினை மனைவியிடம் தெரியப்படுத்தினார். மனைவி காமாச்சியும் அதற்கு பூரண சம்மதம் கொடுத்தாள்.

ஈஸ்வரன் – கவிதா கல்யாண திகதியும் குறிக்கப்பட்டது. கல்யாண தேதி குறிக்கப்பட்ட செய்தி அறிந்து ஈஸ்வனும் கவிதாவும் இடிந்து போய் நின்றனர்.

நாட்கள் வாரங்களாகின. வாரங்களோ மாதங்களாகின. மாதங்களும் இரண்டைக் கடந்தன. திருமண நாளுக்கு இரண்டே இரண்டு நாட்களே எஞ்சி இருந்தன.

ப்ரியாவின் அண்ணன் பாலேந்திரனும் லண்டனிலிருந்து இலங்கை வந்திருந்தான். பாலேந்திரனின் வரவை அவனது வீட்டில் எவருமே எதிர் பார்க்கவில்லை. திடீரென பாலா வீட்டுக்கு வந்ததையிட்டு வீட்டில் அனைவருமே அதிர்ச்சி அடைந்தனர். சொல்லாமல் கொள்ளாமல் வெளி நாட்டிலிருந்து பிள்ளை வீட்டுக்கு வந்தால் எந்தப் பெற்றோர்தான் அதிர்ச்சியடைய மாட்டார்கள்? வீட்டுக்கு வந்த தன்னை பெற்றோர் அன்போடு வரவேற்பார்கள் என்று எதிர்பார்த்தான் பாலா.

ஆனால்...?

அதற்கு எதிர் மாறாக இருந்தது. பாலா வீட்டில் நிற்பதைக் கண்டு, பாலாவின் தந்தை வாசுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"டேய் பாலா வீட்டுக்கு திரும்பி வரவா உனக்கு இருபது லட்சம் காசு செலவழித்து உன்னை வெளிநாட்டுக்கு அனுப்பியது! உனக்கு அறிவில்லையா? நீ திருந்தவே மாட்டாயா?" பாலாவை ஆத்திரம் தீரும் வரை திட்டினார் வாசு.

"என்னப்பா வீட்டுக்கு வந்த பிள்ளையை இப்படியா திட்டிறது?"

"அக்கம் பக்கம் உள்ளவங்கள் எல்லாம் வேடிக்கை பார்க்குதுகள் சத்தம் போடாதீங்க" பணிவான வேண்டுகோள் விடுத்தாள் வாசுவின் மனைவி சரஸ்வதி.

"உன் செல்லத்தை நீதான் கட்டி அணைச்சுக்கோ!" மனைவியிடம் சொல்லியவாறு வீட்டைவிட்டு வெளியேறினார் வாசு.

பாலா வந்த செய்தி கேட்ட ப்ரியா மறு நிமிடம் வீட்டுக்கு ஓடோடி வந்தாள். வீட்டுக்கு வந்ததும் பாலா இருக்கும் அறைக்குள் நுளைந்தாள். பாலாவைக் கட்டிப்பிடித்து அழத்தொடங்கினாள். அண்ணா ஈஸ்வரன் என்னை ஏமாற்றி விட்டான்."

"கவிதாவுக்கும் ஈஸ்வரனுக்கும் கல்யாணம் நடக்காது"

"என்னண்ணா சொல்கிறாய்?"

அதிர்ச்சியடைந்தவளாய் கேட்டாள் ப்ரியா. ஆமா ப்ரியா உனக்கும் ஈஸ்வரனுக்கும் தான் கல்யாணம் நடக்கும்."

"நிச்சயமாகவா அண்ணா?"

"சத்தியமா ப்ரியா. நீ எதைப் பற்றியும் கவலைப்படாமல் சந்தோஷமா இரு"

தங்கைக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக பாலாவின் வார்த்தைகள் இருந்தன. என்றாலும் ப்ரியாவின் மனசு அமைதி அடையவில்லை.

"ஈஸ்வரன் எனக்கு கிடைக்காது போனால் உன் தங்கை உயிரோடிருக்க மாட்டாள்."


"அப்படியெல்லாம் ஒரு போதும் நினைக்காதே ப்ரியா".

"அண்ணா, நான் சொன்னா சொன்னது தான். என் முடிவில் எந்தவொரு மாற்றமும் இல்லை."

விடுக்கென சொல்லிவிட்டு கண்களில் கண்ணீர் சிந்திய வண்ணம் தன் அறைக்குள் புகுந்து கொண்டாள் ப்ரியா.

திருமண நாளும் வந்தது. திருமண வேலைகள் நடந்த வண்ணம் இருந்தன. மார்கழி 2ஆம் திகதி கவிதாவின் வீடோ திருவிழாக் கோலம் பூண்டு காட்சி அளித்தது.

தாலி கட்டும் நேரமும் நெருங்கியது. மணவறையில் மணமகளாய் வீற்றிருந்த கவிதாவின் கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.



# நெறஞ்ச மனசு

அந்த சமயத்தில் பட்டு வேட்டி சட்டை உடுத்துக் கொண்டு புது மாப்பிள்ளை போல அவ்விடம் வந்து நின்றான் பாலா.

பாலாவைக் கண்ட கவிதாவுக்கோ, எல்லையில்லா மகிழ்ச்சி.

ஓடிவந்து பாலாவை கட்டிப்பிடித்து வீறிட்டு கதறி அழத்தொடங்கினாள் கவிதா. திருமணச் சடங்குக்கு வந்தவர்களோ கவிதாவின் செய்கை கண்டு திகைத்து நின்றனர். 'கணவனாகப் போகிறவன் அங்கே இருக்க இன்னொரு ஆணோடு வெட்கமில்லாமல் கொஞ்சிக் குலாவுறாளே! இவள் எல்லாம் ஒரு பெண்ணா!'

கவிதாவை கேவலமாகத் திட்டத் தொடங்கினர்.

ஓரமாக நின்று பார்த்துக் கொண்டிருந்த ஆரோக்கியநாதனால் கோபத்தை அடக்கமுடியவில்லை. மகளெனக்கூடப் பார்க்காது கவிதாவை தன் பக்கம் இழுத்து கன்னத்தில் பளார் பளாரென அடித்து விட்டார்.

கவிதாவுக்கு அடி விழுவதை பொறுத்துக் கொள்ள முடியாத பாலாவால் மேலும் பேசாமல் இருக்கமுடியவில்லை.

"இனி ஒரு அடி கவிதா மீது பட நான் ஒரு போதும் அனுமதிக்கமாட்டேன்."

"நீ யாரடா அடிக்காதே என்று சொல்ல. அவள் என்ட மகள். அவளை அடிப்பேன், கொல்லுவேன் அதைக் கேட்க யாரடா நீ" ஆத்திரத்தில் கத்தினார் ஆரோக்கிய நாதர்.

"கவிதா என்ர மனைவி! அவள் வயித்தில வளருற குழந்தைக்கு நான்தான் தகப்பன்."

அங்கிருந்தவர்கள் எல்லோரும் திகைத்து சிலைபோல் வாய் பிளந்து நின்றனர்.

"அப்போ ஈஸ்வரன் தானே கவிதாவின் வயித்தில வளருற குழந்தைக்கு அப்பன் என்று சொன்னது!" பாலாவைக் கேட்டாள் காமாச்சி.

"நான் செய்த தவறை மறைக்கவே தான் தவறு செய்ததாக எல்லோரிடமும் கூறியிருக்கிறான் ஈஸ்வரன்."

"ஐய்யய்யோ ஈஸ்வரனை எல்லோரும் தப்பா நினைச்சிட்டோமே" மனம் வருந்தினாள் காமாச்சி.

"ஈஸ்வரா எங்களை மன்னிச்சிடப்பா! உன்ர நெறஞ்ச மனசை புரிஞ்சிக்காமல் எல்லோரும் உன்னை ஏசிட்டோம்"

"அம்மா பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதீங்க. நான் உங்க மகன். கவிதா அக்காவின் தம்பி வினோதனின் ப்ரண்ட் பாலா செய்த தப்புக்கு நான் பழிசுமக்காவிட்டால் எங்கள் குடும்பத்தின் மானம் காற்றில் பறந்திருக்கும் அதனை மனசில் கொண்டே நான் பழியை ஏற்றுக் கொண்டேன்."

ஆரோக்கிய நாதரோ ஈஸ்வரனைக் கட்டி அணைத்து உன்னை என்ட மகனா அடைஞ்சதில் நான்தாண்டா பாக்கியசாலி"

"இல்லையப்பா நீங்க, அம்மா, அக்கா, வினோதன் என்ற உறவு கிடைச்சதில் நான்தான் பாக்கியசாலி"

"உன்னைக் கண்டவாறு திட்டிவிட்டேனடா"

"அதற்கென்ன அப்பா! என்னை திட்டுறதுக்கும் அடிக்கிறதுக்கும் உங்களுக்கு உரிமையுண்டு. அதைவிட தந்தை மகன் உறவுக்குள் சின்னச் சின்ன மோதல்கள் ஏற்படுவது சகஜம் தானே!"

ஈஸ்வரனின் நெறஞ்சமனசைக் கண்டு மனம் நிறைவடைந்தார் ஆரோக்கியநாதர்.

ப்ரியாவின் அருகினில் சென்ற ஈஸ்வரன் "ப்ரியா, என்னைக் காதலித்த நீ கூடவா என்ட மனசை புரிஞ்சுக்கவில்லை. உண்மையிலையே என்னை நீ காதலித்தாயா என்பது கூட இப்ப சந்தேகமாக இருக்கு ப்ரியா".

கன்னத்தால் கண்ணீத் துளிகள் வழிந்தோட ப்ரியாவைப் பார்த்துக் கேட்டான் ஈஸ்வரன்.

"ஈஸ்வரா அப்படி எல்லாம் நினைக்காதே என்ட புனிதக்காதல் மீது சந்தேகப்படாதே. பெண்புத்தி பின் புத்தி என்பார்கள். அது இதுதானா?"

"ஈஸ்வரா என்னை மன்னிச்சிடு. உன்ட மனசை புரிஞ்சுக்க தவறி விட்டேன். இனிமேல் அப்படியொரு தவறு விடமாட்டேன்."

"சரி சரி அழாதே ப்ரியா. உன்னை மன்னிச்சு காதலியாய் ஏற்றுக்கொண்டேன். இப்பவும் ம்... என்று இருந்தால்... கொஞ்சம் சிரி ப்ரியா" சிரித்துக் கொண்டே ஈஸ்வரன் கன்னத்தில் முத்தமிட்டாள் ப்ரியா.

நம் சமுதாயத்தில் இப்படியொரு பையனா? நினைக்கவே அதிசயமாக இருக்கிறது. திருமணச் சடங்குக்கு வந்திருந்தவர்கள் ஈஸ்வரனைப் பாராட்டு மழையால் நனைத்தே விட்டனர்.

"பிரிந்திருந்த காதலர்கள் கொஞ்சிக் குலாவியது போதும். தாலிகட்டு முகூர்த்தம் முடியப்போகுது. இனியும் தாமதிக்கக் கூடாது." உரத்த குரலில் கூறினார் வாசு. கவிதாவுக்கு மட்டுமல்ல, ப்ரியாவுக்கும் கல்யாணம் பெரியவர்களால் தீர்மானிக்கப்பட்டது. மறு நிமிடமே! பாலா– கவிதா, ஈஸ்வரன்– ப்ரியா கல்யாணம் இனிதே நிகழ்ந்தேறியது.

'அண்ணா நீ சொன்னதைப் போலவே செய்து காட்டிவிட்டாய். தாங்ஸ் அண்ணா'. ப்ரியா மனதினுள் நினைப்பதை அவளின் பார்வையிலிருந்தே புரிந்து கொண்டான் பாலா.

வரும் ஜென்மத்தில் என்றாலும் ஈஸ்வரா நீ என்ட உடன் பிறப்பாய் பிறக்க வேண்டும். கவிதா மனதால் ஈஸ்வரனுக்கு வாழ்த்து மலர் தூவினாள். இரு இளம் திருமண தம்பதியினரும் தாம்பத்திய வாழ்வுக்குள் மகிழ்வுடனே புகுந்து கொண்டனர்.

(யாவும் கற்பனை)

# இயற்கையின் சீற்றம் ஏற்படுத்திய அவலம்










வண்ணமுகில் சோலையில் உங்கள் சகல டிஜிடல் புகைப்படத் தேவைகளும் ஒரே கூரையின் கீழ்.....

NORITSU

**Correction of Backlit Scenes**




**Correction of Flash Photography**




**MODERN STUDIO, ENLARGEMENTS UPTO 12" x 18", ALBUM MAKING, LAMINATING, FRAMING, FILM ROLLS, CAMERAS, PICTURE RESTORATION, BATTERIES. ETC.**

**Correction of Underexposed and Overexposed Negatives**




**Sharpness Enhancement**




**PRINTING FROM DIGITAL CAMERA, CD, FLOPPY, CAMERA PHONES, TRANSFER TO CD'S ETC.**

Sold & Serviced by:
Millers Ltd.,
50, York Street,
Colombo - 01.



வண்ணமுகில் சோலை,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

Kodak EXPRESS
QUALITY MONITORING SERVICE

## 13 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

> தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.
>
> நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

# தொடரும் தவிப்பு

"ஆமா! நல்ல நேரம் பார்த்த சீண்டுறதுக்கு. சரி. மொதல்ல இருந்து சொல்லு என்ன நடந்துச்சுன்னு?"

"எனக்குக்கூட கொஞ்சம் தயக்கம்தானக்கா. எப்படிப் பேசுவாரோ என்னமோன்று. அலுவலகத்துலதான் போய் பார்த்தேன். உள்ளேயிருந்து வெளிய வந்தவரு என்னைப் பார்த்தவுடனே சிரிச்சுக்கிட்டே வாங்கன்னு சொன்னாரு. அப்பதான் எனக்கு நிம்மதியாச்சு. ஒரு தகவலும் இல்லைன்னுதான் நேர்ல பார்க்க வந்தேன்னு சொன்னேன். நீங்க அறிவு பிரச்சினையில துக்கமா இருந்தீங்க. அதான் இந்த நேரத்துல கலியாண விசயமா தொந்தரவு பண்ண யோசனையா இருந்துச்சுன்னு சொன்னாரு. அதை கேட்டவுடனதான் நிம்மதியாச்சு. கலியாணத்தை எப்ப வெச்சுக்கலாம் என்ன ஏதுன்னு பேசிட்டு, அவர்களையும் நம்ம வீட்டுக்கு வர சொல்லிட்டு வந்தேன்" – என முடித்தார்.

அப்படி அன்று இராஜா முடிவெடுத்திருக்காவிட்டால்.... நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. இராஜா கும்பத்தினரும் பெரியாரியல் வாதிகள்தாம். ஆனால் திராவிடர் கழகத்தை விட்டு விலகியவர்கள். அதனால் திருமண முறை பற்றி கேள்வியே எழவில்லை. ஒரே பிரச்சினை பொருளாதாரம்தான்.

திருமணம் உறுதியானவுடன், அறிவுக்கு வழக்குப் போடுவதில் பிரச்சினையிருக்காது என்ற நினைப்பில் வழக்கறிஞரிடம் சொன்னார். அதற்கான ஏற்பாடுகளில் வழக்கறிஞர்களுக்கே இருமுறை பணம் கொடுக்க வேண்டி வந்துவிட்டது. திருமணத்திற்குள் அறிவைப் பூந்தமல்லி சிறைக்கு மாற்றிவிட்டனர். ஒவ்வொரு முறை அறிவைக் காணச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவே அதிகம். அதோடு அவனுக்கு வேண்டிய பொருட்களை வாங்கிக் கொடுப்பது என்று நாளுக்கு நாள் செலவுகள் அதிகமாயின. குயில்தாசனின் ஆசிரியர் வேலை வருமானத்தில் சேமிப்பு என்று பெரிதாக இல்லை. இருந்ததும் இப்போது கரையத் தொடங்கியது. சொந்த விடு ஆசையில், அதுவும் கடன் வாங்காது கட்ட வேண்டுமென்ற நினைப்பில் மாதா மாதம் சம்பளம் கைக்கு வந்தவுடன் சிமெண்டை வாங்கு, செங்கல்லை வாங்கு என்று வருடக்கணக்காக கொஞ்சம் கொஞ்சமாக, பார்த்துப் பார்த்து ஆசையாய் கட்டிய வீடு ஒன்றுதான் சொத்து.

வீட்டை அடமானம் வைத்து அன்புக்குச் செய்ய வேண்டியதைச் செய்தனர். மாப்பிள்ளை இராஜாவே தன் செலவில் திருமணத்தை நடத்திக் கொண்டார்.

அப்படி ஒரு தங்கமான மாப்பிள்ளை இராஜா. அன்று முதல் இன்றுவரை மாப்பிள்ளையாய் இல்லாது மகன்போல குடும்பத்தோடு ஒன்றி எல்லாப்பிரச்சினைகளிலும் தாங்கி நிற்பவர்.

இராஜாவைப் பற்றி நினைக்கையிலேயே மனம் நெகிழ்கிறது அற்புதத்திற்கு. மீண்டும் அருளைப் பற்றிய கவலை தலைத்தூக்கியது. 'இதே மாதிரி அருளுக்கும் நல்ல மாப்பிள்ளையா கிடைக்கணுமே!....'

இப்படி யோசித்தவாறே கண்ணயர்ந்துவிட்டார் அற்புதம். நடத்துனர் வந்து சோலையார் பேட்டை வந்துவிட்டது என எழுப்பும் வரை நல்ல உறக்கம்.

வீடு வந்து சேர்ந்தவுடன் குயில்தாசன் இரவு தங்கியது எங்கே என்ன என்று எதுவும் கேட்டுவிடக்கூடாதே என்று உள்ளுக்குள் உதறியது அற்புதத்திற்கு. எப்போதும் அப்படி கேட்கக் கூடியவர் இல்லைதான். எனினும் இன்று பார்த்து கேட்டுவிட்டால்..... பேருந்து நிலையத்தில் தங்கியதைச் சொன்னால் மிகவும் மனவருத்தமடைவாரே. நல்லவேளை குயில்தாசன் ஒன்றும் கேட்கவில்லை, வழக்கம்போல். குயில்தாசனுக்குத் தன் மனைவி மீது அத்தனை நம்பிக்கை.... எந்தச் சூழ்நிலையிலும் சமாளித்துக் கொள்வார் என்று.

கால்களில் சக்கரம் கட்டியது போன்ற வாழ்க்கை அமைந்துவிட்டது அற்புதத்திற்கு, புதுச்சேரியில் இருந்து திரும்பியவுடன் 2 நாளில் அறிவைப் பார்க்க சேலம் பயணம். நடுவில் ஒருவாரம் சோலையார் பேட்டையில் இருந்தார். அடுத்து மீண்டும் அறிவைப் பார்த்து திரும்பியவுடன் சென்னைக் குழுக் கூட்டத்திற்கு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்யத் துவங்கினார்.



கூடியிருந்தோரிடம் துண்டேந்தி......

சென்னைப் பயணம் என்றாலே சுமை அதிகமாகி விடும். சென்னையில் செய்வதற்காக விட்டு வைத்த வேலைகள் அத்தனையும் ஞாபகப் படுத்தி அதற்கான குறிப்புகள், பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வதே பெரிய வேலை. முக்கியமாக நகல் எடுக்க வேண்டியவை, தட்டச்சு செய்ய வேண்டியவை, நெடுமாறனிடம் கொடுக்க வேண்டியவை, வழக்கறிஞரிடம் கூற வேண்டியவை என அந்தப் பட்டியல் நீளும்.

அறிவு பூந்தமல்லி சிறையிலிருந்த வரையில், அறிவுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டியப் பொருட்களோடு, இந்தப் பொருட்களையும் தனியாளாக சுமந்து சென்றவர்தானே. சில நேரங்களில் நகல் பளு அதிகமாயிருக்கும் போதுதான் அதிக வேதனை. வெயிலோ மழையோ தூக்கி சுமந்தே தீர வேண்டும்.

அற்புதத்தின் கைப்பையில் ஒரு சிறிய குடை வைத்திருப்பார், சமயத்திற்கு உதவுமே என்று. ஆனால், ஒருமுறைகூட அதைப் பயன்படுத்தியதில்லை. ஒரு கையில் குடையைப் பிடித்தால் பின் பொருட்களை எந்தக் கையால் சுமப்பது? இருப்பது இரு கைகள்தாமே. ஆனால், இன்னும் இரண்டு கைகள் இருந்திருந்தாலும் அவர் குடையைப் பயன்படுத்தியிருப்பாரா என்பது சந்தேகம்தான்.

அத்தனையும் சுமந்து கொண்டு பேருந்து மாறி பேருந்து ஏறி சிறைக்கு வந்து சேருவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும் அற்புதத்திற்கு. ஆரம்பகாலத்தில் சிறைக்குச் சற்று அருகிலேயே இருந்த பேருந்து நிறுத்தம், பின்னர் காவல்பலப்படுத்தப்பட்டவுடன் கிட்டத்தட்ட ஒரு கி.மீ. தள்ளிப் போனது. அதோடு இரண்டு காவல்சாவடிகள் வேறு. இத்தனையும் தாண்டி அந்தச் சுமைகளைத் தூக்கிக் கொண்டு நடந்து செல்லும் வேதனை.

சில சமயங்களில் ஏதாவது காரணங்கள் சொல்லி கரையான்சாவடி சிறை நிறுத்தத்திற்கு பதில் அதற்கு முந்திய நிறுத்தத்திலேயே பேருந்தை நிறுத்தி விடுவதும் நடக்கும். இல்லையேல் சுற்றுப் பாதையில் சென்று கரையான்சாவடி சாலையும் சுற்றுப்பாதையும் சந்திக்கும் இடத்தில் இறக்கிவிடுவார்கள். அம்மாதிரி நேரங்களில் கூடுதலாக 2 கி.மீ. தூரம் சேர்த்து மொத்தம் கிட்டத்தட்ட 3 கி.மீ. நடக்க வேண்டியிருக்கும். கைகளே இற்றுப்போய் விடுகிறது போன்ற வலி ஒரு புறம். சுட்டெரிக்கும் வெயில் மறுபுறம். இவற்றிற்கு நடுவே நடந்து சிறையை அடைவதற்குள் முழுவதுமாக சோர்ந்துவிடுவார்.

பின்கழுத்தில் துவங்கி முதுகுத்தண்டில் அழுத்தமாய் இறங்கும் அந்த வலி, சுமையை இறக்கி வைத்த பின்னும் பல மணிநேரங்கள் நீடிக்கும். மனு கொடுத்துவிட்டு அழைக்கப்படும் வரை காத்திருக்கும் நேரம் தான் ஓய்வு.

இத்தனையும் தாண்டி ஒரு வழியாக சிறைக்குள் சென்றால் சோதனை என்ற பெயரில் காவல்துறையினர் படுத்தும்பாடு அடுத்து. பெரும்பாலும் அவர்களுடன் சண்டையிடாமல் உள்ளே சென்றதில்லை அற்புதம். எப்போதும் கொண்டு செல்லும் சாதாரணப் பொருட்களைக் கூட அனுமதிக்கமாட்டோமென வேண்டுமென்றே சில சமயம் தடுக்கும்போது அற்புதத்திற்கு மிகுந்த கோபம் வந்துவிடும். அந்த பொருள் தன் கைக்கு வந்து சேராமல் அந்த இடத்தை விட்டு நகரமாட்டார். 'அதைக் கொடுத்தால் அறிவைப் பார்க்க உள்ளே செல்வேன். இல்லையென்றால் பார்க்காமலே சென்று விடுகிறேன்' என சண்டையிட்டு அதிகாரிகள் வந்து சமாதானம் செய்து பொருட்களை கொடுக்கும் வரை விடமாட்டார். அறிவே ஒரு முறை இது குறித்து அம்மாவிடம் வருத்தப்பட்டிருக்கிறான்.

ஏன்மா இப்படி சண்டை போடறீங்க? மத்தவங்களை பார்க்க வர்றவங்கல்லாம் அமைதியா வந்துட்டுப் போறாங்க. நீங்க மட்டும் ஏன்மா இப்படி? எல்லாரும் ரொம்ப பேசுராங்க. அதிகாரிகளே கூட உங்கம்மா வந்தாலே சண்டைதான்னு ஒரு மாதிரியாக பேசுராங்க. கூட இருக்கிறவர்களும் கூட அம்மாட்ட சொல்லக் கூடாதான்னு கேட்கிறாங்க.

அற்புதம் அறிவை நேருக்கு நேராக நிமிர்ந்து பார்த்து, அமைதியாக ஆனால் அழுத்தமாகக் கூறினார். "இங்க பாருஅறிவு மத்தவங்கல்லாம் பார்த்துப் பேசிட்டு போக மட்டும்தான் வர்றாங்க. ஆனால் நான் வேலை செய்யிறதற்கு வாரேன். இன்றைக்கு பொலிஸ்காரங்க சொல்ரபடி கேட்டு கொஞ்சம் விட்டுக் கொடுத்தோம்னா நாளைக்கு நீ சொல்ற வேலை எதையுமே நான் செய்ய முடியாது. அதனால் ஆயிரம் பேர் ஆயிரம் சொன்னாலும் நீ இதல்லாம் கண்டுக்காத. வருத்தப்படாத.

(தவிப்புத் தொடரும்....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# மேலும் 50 குளோனிங் பூனைக்குட்டிகள்

குளோனிங் முறையில் முதன் முதலாக 'டோலி' என்ற ஆட்டுக்குட்டி உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து குளோனிங் முறையில் எலி, கன்றுக்குட்டி, குரங்கு, முயல் ஆகியவையும் உருவாக்கப்பட்டன. மனித குளோனிங் முறைக்கும் இது வழி வகுத்ததுடன் இது தொடர்பாக சர்ச்சையும் எழுந்தது.



இந்த நிலையில் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு பெண்மணி 17 ஆண்டுகளாக செல்லமாக வளர்த்து வந்த பூனை ஒன்று இறந்துவிட்டது. இதைத் தொடர்ந்து அந்தப் பூனையின் செல்களைப் பயன்படுத்தி அதே போன்ற பூனையை உருவாக்கித்தரும்படி டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவ நிறுவனத்தை அவர் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து 'ஜெனட்டிக் சேவிங்ஸ்' என்ற அந்த நிறுவனம் குளோனிங் முறையில் அதே போன்ற ஒரு பூனையை உருவாக்கி உள்ளது.

அந்த குளோனிங் பூனைக்குட்டிக்கு இப்போது வயது 9 வாரம் ஆகிறது. 'லிட்டில் நிக்கி' என்று அதற்குப் பெயரிட்டு இருக்கிறார்கள்.

இந்த குளோனிங் பூனைக்குட்டியை உருவாக்க அந்த பெண் 50 ஆயிரம் டொலர் விலை கொடுத்திருக்கிறார். இதே போல தங்கள் பூனைகளைப் போன்ற குளோனிங் பூனைக்குட்டிகளை உருவாக்கித் தருமாறு 50பேர் அந்த நிறுவனத்தைக் கேட்டு இருக்கிறார்கள்.

அடுத்த ஆண்டுக்குள் இந்த 50 குளோனிங் பூனைக்குட்டிகள் தயாராகிவிடும். வர்த்தக ரீதியில் குளோனிங் பூனைக்குட்டி உருவாக்கப்பட்டு இருப்பது அமெரிக்காவில் இதுவே முதல் தடவை.


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# குடாநாடு: வரலாறுகாணாத மனித அழிவு

2004 டிசம்பர் 26 விடியாமலே போயிருக்கலாம் இலங்கையில் பெரும் மனித அவலத்தைப் பதிவு செய்த நாள். இலங்கையின்



தமிழர் தாயகமான வடக்கு–கிழக்கு கரையோரங்கள் பெருமளவில் 'சுனாமி' என்ற கடல் கொந்தளிப்பினால் அழிக்கப்பட்டு விட்டன.

அழிவுகளைச் சந்தித்த மாவட்டங்களில்

> கடல்கொந்தளிப்பின் காரணமாக குடாநாட்டில் உயிரிழந்த மக்களின் தொகை உத்தியோகபூர்வமாக கிடைக்காதபோதிலும் இதுவரை உயிரிழந்தும் மற்றும் காணாமல் போனோர் 2100 வரை எனவும் தெரிவிக்கப்படுகிறது.
>
> பலநூற்றுக்கணக்கானோர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். 13 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ளன. பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் இழக்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் கலாசார தலைநகரான யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கரையோரக் கிராமங்கள் இராட்சத கடல் அலைகளினால் அள்ளுண்டு போயின. ஆயிரக்கணக்கான மனித உயிர்களையும் சேர்த்தே காவு கொண்டு விட்டது இந்தக் கடல் கொந்தளிப்பு.

யாழ். குடாநாட்டின் அனைத்துப்பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த அனர்த்தம் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமத்தின் வடக்கு–மேற்கு கரையோரங்களையும் தாக்கி பல உயிர்களை காவு கொண்டுள்ளது.

## 30 அடி உயர்ந்து பாய்ந்து வந்த அலைகள்

வடமராட்சிப் பகுதியின் கரையோரப்பிரதேசங்களே பெருமளவில் சிதைந்து போயுள்ளன. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, வடமராட்சிகிழக்கு பகுதிகளில் சுமார் 30 அடி உயரத்துக்கு மேல்கடல் அலைகள் பாய்ந்து வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

விடுதலைப் போராட்ட காலத்தில் கூட ஒவ்வொரு கட்டத்திலும் ஆக்கிரமிப்புப்படைகளின் அழிப்புக்குள்ளாகும் குடாநாட்டின் முக்கிய பகுதியாக வடமராட்சி இருந்து வந்தது. விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலப் போராளிகளின் பிறப்பெடுப்பு வடமராட்சியாக இருந்ததே ஆக்கிரமிப்புப் படைகளுக்கு உறுத்தலாக இருந்தது.

அதனால் இப்பகுதியில் பல அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பெரும் அழிவுகளுக்கு முகம்கொடுத்தாலும் இச் சமாதானக் காலத்தில் தான் ஓரளவு நிம்மதியாக இருந்தமக்களுக்கு பெரும் 'மரணவலி' யை இயற்கை கொடுத்துள்ளது.

## வல்வெட்டித்துறை சந்தித்த அழிவு

அழிவுக்குள்ளான பகுதியைத் தொகுத்துப்பார்த்தால், வல்வெட்டித்துறையில் ஆலடிச்சந்தைப்பகுதியே பாரிய அழிவுகளை எதிர்கொண்டுள்ளது. இங்கு பலநூறு மீன்பிடிவள்ளங்களையும், குடிமனைகளையும் கடலடித்துச்சென்று விட்டது. கூடவே நூற்றுக்கணக்கான மனித உயிர்களையும் தான்.

பருத்தித்துறையின் கற்கோவளம், பொலிகண்டி, வியாபாரிமூலை, தொண்டமனாறு, மணல்காடு உட்பட கரையோரக்கிராமங்களே கடல் அலையால் அள்ளுண்டு போனவையாகும்.

வடமராட்சி கிழக்கில் அம்பனை, குடத்தனை, நாகர்கோவில், குடாப்பரப்பு, செம்பியன்பற்று, கண்டலடி, மருதங்கேணி போன்றவையும் அழிந்துபோய் ஆயிரத்துக்கு மேற்பட்ட உயிர்களை அள்ளிச்சென்றுள்ளது. பெண்களும், சிறுவர்களும் தான் அதிகளவில் உயிரிழந்துள்ளார்கள்.

> கடல் கொந்தளிப்பினால் வடமராட்சி மற்றும் வலிகாமம் வடக்கின் கரையோர இராணுவ வேலிகள் சிதைக்கப்பட்டதுடன் இராணுவ முகாம்கள், இராணுவக் காவலரண்கள் என்பன கடல் நீரினால் அடித்துச்செல்லப்பட்டு விட்டன. பல கிலோமீற்றர் நீளமான இராணுவ காவலரண் வேலிகள் அள்ளுண்டு போயுள்ளன.
>
> மணல்காடு, நாகர்கோயில், பலாலி, காங்கேசன்துறை, மாதகல், காரைநகர், கிளாலி என குடாநாட்டைச் சுற்றியுள்ள பெரும்பாலான இராணுவ காவலரண்கள் அழிந்துபோயுள்ளன. இதேவேளை மணல்காடு பாரிய இராணுவத்தளம் முற்றாகத் தரைமட்டமாகியுள்ளது. பல கோடிருபாய் பெறுமதியான இராணுவத் தளபாடங்களும் கடல் நீருடன் அள்ளுப்பட்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தின் உண்மையான உயிரிழப்புகள் பற்றிய விவரம் எதுவும் கிடைக்காத போதிலும் இரு அதிகாரிகள் உட்பட 50 படையினர் உயிரிழந்து விட்டதாக படைத்தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது. பெரும்பாலானோர் காயங்களுக்கும் இலக்காகியுள்ளனர்.
>
> நாகர்கோயில் பகுதியில் சர்ச்சைக்குரியதாக இருந்த புலிகள் மற்றும் இராணுவத்தின் முன்னணி காவலரண்களும் அழியுண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
>
> இதேவேளை, புலிகளின் கரையோரக் காவல் நிலைகளும் நீரில் மூழ்கிவிட்டன. உயிரிழப்பு விவரத்தை உறுதிப்படுத்த முடியவில்லை.

எங்கும் மரண ஓலங்கள் கேட்டுக் கொண்டே இருக்கின்றன. யார் யாருக்கு ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

## மீட்பு நடவடிக்கையில் அனைத்துத் தரப்பினரும்

உயிரிழந்தவர்களின் சடலங்களையும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களையும் மீட்கும் நடவடிக்கையில் பொதுமக்கள், விடுதலைப் புலிகள், படைத்தரப்பு, யாழ். பல்கலைக்கழக




மாணவர்கள் என அனைத்துத் தரப்பும் ஓயாமல் ஈடுபட்டிருந்தனர். பெரும் அழிவுக்குள்ளான வடமராட்சி கிழக்குப் பகுதியில் புலிகளின் படையணிகள் கேணல் தீபன் தலைமையில் தீவிரமாகமீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

பலநூறு சடலங்கள் மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலை, சாவகச்சேரி வைத்தியசாலை, யாழ். போதனா வைத்தியசாலை, கிளிநொச்சி வைத்தியசாலை ஆகியவற்றுக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. அதேவேளை, காயமடைந்த பலநூறு பேர் இந்த வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்த அனர்த்தத்தால் மாபெரும் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கான நிவாரணங்கள் முழுமையாக உடனடியாகக் கிடைக்கவில்லை. சிறியளவிலேயே உள்ளூர் அமைப்புகளால் வழங்கப்பட்டு வருகின்றது. அரசிடமிருந்து உடனடியாக உதவிகள் கிடைக்கவில்லை.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட அப்பகுதியை சேர்ந்த ஒரு வயோதிபர் தெரிவிக்கையில், "யுத்த காலத்தில் எம்மீது குண்டுகளைப் போட்ட வேகத்தின் ஒரு பகுதியேனும் எமக்கான நிவாரண உதவிகளில் இல்லை" — என்றார்.

வடமராட்சியில் குறைந்தது இரண்டாயிரம் பேர்வரை உயிரிழந்து அல்லது காணாமல் போய் உள்ளனர் என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

## தொடரும் இழப்புகள்

கடந்த 20 வருடப்போரினால் பெரிய மனித உயிரிழப்புகள், உடமை இழப்புகள், இடம்பெயர்வுகளை சந்தித்த யாழ்ப்பாணம் வரலாறு காணாத இன்னொரு இழப்பைச் சந்தித்துவிட்டது. இதிலிருந்து மீள்வது என்பது உடனடியாகச் சாத்தியமில்லாத ஒன்று. யாழ் குடா மட்டுமன்றி தமிழர் தாயகமே அவலத்தைச் சந்தித்து நிற்கிறது.

சர்வதேசம் நேரடியாக எமது தாயகத்துக்கான உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

போர் அழிவுகளில் இருந்து மீண்டுவந்த எம்மக்களுக்கு 'பட்டகாலிலே படும்' என்பது போல் அழிவிழுந்துகொண்டே இருக்கின்றது.

'போராட்ட காலத்தில் சொல்லப்பட்ட கூற்று தமிழர்களின் பலம் என்பது எவ்வளவு இழப்புகளைச் சந்தித்தும் உறுதி குலையாமல் இருக்கின்றமையாகும் என்று கூறப்பட்டது. ஆனால், தமிழர்களின் பலவீனமும் அதுவாகவே ஆகிவிட்டது. அதாவது தொடர்ந்தும் இழப்புகளை தமிழர்கள் சந்தித்துக்கொண்டே இருப்பது.

வாழ்வதற்கே போராடியவர்களின் வாழ்க்கையில் சோதனை இன்னமும் தீரவில்லை. அழிவினைச் சந்தித்துள்ள மக்களுக்கு ஆறுதல் கூறி ஆற்றக்கூடிய சம்பவங்கள் அல்ல இவை. வரலாற்றில் தமிழர்கள் சந்தித்த கொடுமையான, துயரமான இழப்புகளில் ஒன்றாக பதிவாகிறது. விடைபெற்றுச்சென்றுள்ள 2004ஆம் ஆண்டு அவலத்தையும் கூடவே சேர்த்துத்தந்துவிட்டுச் செல்கிறது.

( இ. பிங்கலன் )

பலரது பாராட்டையும் பெற்ற
மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை விணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனேசுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவதாக எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்திலும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை விணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளால் குணமடைந்து பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

டிசம்பர் 20 – 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEL No. 5368426, 364427, Cell. 0722 910798
Hot Line: 0777 569205

வவுனியாவில்...

ஜனவரி 02 – 03 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222674
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

ஜனவரி 08 – 12
A. S.N. சுற்றுலாவிடுதி
398/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No.021 2223181
021 222 3.99

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

தபால் மூலம் கல்வி

BRIGHT நிறுவனத்தின் தபால் மூலம் கல்வி எனும் திட்டத்தின் கீழ் Spoken English, Spoken Singhala, Business English, Method of computerized Book - Keeping & Accountancy கணனியின் உதவியுடன் கடைக்கணக்கு எழுதும் பயிற்சி, பாலர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி, Nursery Teacher Training Course, சட்டக்கல்வி, பத்திரிகையாளர் பயிற்சி நெறி, குடும்ப நல வாழ்க்கை நெறி

மேலதிக விபரங்களுக்கு முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

Bright Training Centre,
P.O.Box - 162,
Colombo.

G.A.Q விண்ணப்பப்படிவம்

பேராதனை பல்கலைக்கழக (வெளிவாரி) பட்டப்படிப்புகள் G.A.Q பரீட்சைக்கான பதிவுகள் 31. 01.2005 வரை செய்து தரப்படும். (மேலதிக விபரங்கட்கு 100/= பெறுமதியான தபால் கட்டளை The Director B.T.C எனும் பெயருக்கு Kotahena Post Office இல் மாற்றக்கூடியதாக காசுக்கட்டளையுடன் சுயவிலாசமிட்டப்பட்ட முத்திரையுடன் அனுப்பிவைக்கவும்.

Bright Training Centre,
P.O.Box - 162,
Colombo.

சுடர் ஒளி

ஜனவரி 02 – 08, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஒன்றிணைந்து செயற்படுபோம்

சுனாமி கடல் கொந்தளிப்பினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நம்ப முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

சுமாத்திராவுக்கு அருகில் கடலில் ஏற்பட்ட பூகம்பத்தினால் கடல் கொந்தளித்து இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் அனைத்திலும் பேரழிவை ஏற்படுத்தி இருக்கிறது.

பல்லாயிரக் கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டுவிட்டன. அதற்கு மேலானோர் காயங்களுக்குள்ளாகி இருக்கின்றனர். பல இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இத்தகைய பூகம்பங்கள் ஏற்பட்டு பெருமளவு உயிர்ப்பலிகள் எடுக்கப்பட்ட சம்பவங்கள் சர்வதேசரீதியாக அதிகம் இடம் பெற்றுள்ள போதிலும் இலங்கையைப் பொறுத்த மட்டில் இத்தகைய பேரழிவு இலங்கை மக்களுக்கு முதல் அனுபவமாகவே தெரிகிறது.

கடல் அலைகள் சுமார் 40 அடி வரை உயர்ந்து நொடிப்பொழுதில் கரையோரக் கிராமங்களை அள்ளிச் சென்றுள்ளன.

ஆயிரக்கணக்கானோர் கடல் அலைகளினால் அள்ளுண்டு சென்றுள்ளதால் காணாமற்போனோர் எண்ணிக்கையும்—

ஏராளமானோர் குடும்பமாகவே பலியாகி இருப்பதால் அடையாளம் காணப்படாத சடலங்களின் எண்ணிக்கையும்— அதிகரித்து வருகின்றது. சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும் ஆபத்து இருப்பதால் அடையாளம் காணாத சடலங்களை உடனடியாக புதைத்துவிட வேண்டிய அவசியமும் இருந்து வருகிறது.

ஒருபுறம் இந்த அவல நிலை தொடர மறுபுறத்தில் அனர்த்தத்தில் தப்பிப் பிழைத்தவர்களின் நிலையும் மிகவும் மோசமாக— பரிதாபகரமாக இருக்கிறது.

இந்த அனர்த்தத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள் வடக்கு கிழக்கின் கரையோரப் பகுதிகள் தான். பூகம்பத்தினால் ஏற்பட்ட கடல் அலைகளினால் இப் பகுதிகள் நேரடியாகத் தாக்கப்பட்டுள்ளன.

உடன் பிறப்புகளை, உற்றாரை, உறவினர்களை, தங்கள் பிள்ளை குட்டிகளைப் பறிகொடுத்து உடமைகளை இழந்து அடுத்த வேளை உணவுக்கு வழி இன்றி சொல்லொணாத் துயரத்தில் இந்த மக்கள் இருந்து வருகின்றனர்.

கடல் அலைகளினால் அழிக்கப்பட்ட இந்த மக்களின் உயிர்களையும், உடமைகளையும் நாம் மீட்டுவிட முடியாது. ஆனால், இந்த மக்களின் துயர்களை பகிர்ந்து கொள்ளவும், சோகத்தில் இருந்து இந்த மக்கள் மீள்வதற்கு உரிய தெம்பூட்டலை அவர்களுக்கு தரவும் முடியும். அதுமட்டுமல்ல அவசர நிவாரண உதவிகள் இந்த மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

நாட்டின் தேசிய பேரழிவு என்று ஜனாதிபதி இதனால் பிரகடனம் செய்துள்ளார்.

ஆனால், பேரழிவு இடம்பெற்று மூன்று நாட்கள் கழிந்த நிலையிலும் (இதை எழுதும் வரை) மக்களுக்கு எந்தவிதமான அரச உதவிகளும் கிட்டவில்லை.

ஜனாதிபதி லண்டனில் இருந்து நாடு திரும்ப முன்னர் பி.பி.ஸி செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில், "எந்த வேறுபாடுகளும் இன்றி நாட்டின் ஏனைய பகுதிகளில் பாதிப்புற்றோருக்குக் கிடைக்கும் அனைத்து உதவிகளும், வசதிகளும், கவனிப்பும் இவர்களுக்கும் (புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு) கிடைக்கும்" என்று உறுதி தெரிவித்திருந்தார். ஆனால், உடனடி உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை..

ஆகவே, இன, மத, மொழி பேதமற்ற முறையில் சகல சமூகங்களினதும் கரங்கள் மனிதாபிமானப பணிகளுக்காக இணைந்து செயற்பட வேண்டும். இயற்கை விடுத்துள்ள இந்த சவாலை எதிர்கொள்ள ஒன்றிணைய வேண்டியது அனைவரினதும் கடமை.

பேரழிவுகளுக்குள் ஆழ்ந்துவிட்ட நாட்டையும், மக்களையும் மீட்டெடுக்க ஒத்துழைப்பையும், உதவிகளையும் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

# பேரழிவுடன் விடைபெற்ற 2004

உலக வரலாற்றில் என்றுமே எவராலும் மறக்க முடியாத ஓர் இடத்தைப் பிடித்துவிட்டது 2004 ஆம் ஆண்டு.

பேரழிவுகளையும் சீரழிவுகளையும் எற்படுத்தி அழிக்கமுடியாத சுவட்டைப்பிடித்துவிட்டு ஓடி மறைந்துவிட்டது.

உலக மக்கள் அனைவரும் ஒவ்வொரு வருடப்பிறப்பின் போதும் பழையன கழிதலும், புதியன புகுதலும் யதார்த்தம் என்று கருதுகின்றனர்.

அதேபோல் நேற்றுவரை நடந்தவற்றை எல்லாம் கெட்ட கனவு போல் மறந்துவிடுவோம். நாளை முதல் நடப்பவை எல்லாம் நல்லவையாக அமையட்டும் என்று பிரார்த்தனையில் ஈடுபடுவதும் வழமை.

ஆனால் 2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சம்பவங்களை அப்படி மறந்துவிட முடியுமா? இல்லை மறக்கத்தான் முடியுமா? இவை காலத்தால் அழிக்க முடியாதவை.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல் பொருளாதார தாக்கங்களுக்கு மத்தியில் இந்த அனர்த்தங்கள்தான் பெரிதும் வஞ்சித்து விட்டன.

### அரசியல் சூதாட்டம்

அரசியலைப் பொறுத்தமட்டில் 2004 ஆம் ஆண்டு அரசியல் அதிகாரங்களுக்காக இடம்பெற்ற ஒரு சூதாட்டமாக அமைந்துவிட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பெரும்பான்மை அரசாங்கத்தை அதன் ஆட்சிக்காலம் முடியும்வரை ஒருபோதும் கலைக்கமாட்டேன் என சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்த ஜனாதிபதி திடீரென நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டதன் மூலம் அரசியல் சூதாட்டத்தில் முதலாவது காயை நகர்த்தினார். ஜே.வி.பியினர் பண்டாரநாயக்க பரம்பரையின் ஜென்ம விரோதிகள் என்றும் தனது கணவர் விஜயகுமாரதுங்கவை கொலை செய்தவர்கள் என்றும் ஆணித்தரமாக கூறிவந்தவர் ஜனாதிபதி.

தனது தகப்பனாரை கொன்றவர்களுடன் கூட்டே வேண்டாம் என ஜனாதிபதியின் பிள்ளைகள் அடம்பிடித்தனர். ஆனால், அதிகார வெறி பாசத்தை துச்சமாக ஒதுக்கித் தள்ளிவிட்டது. தம்பியாரின் துணையுடன் தமது குடும்பத்தின் ஜென்ம விரோதிகள் எனக்கருதப்பட்ட ஜே.வி.பியினருடன் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிக்கா செய்து கொண்டதும் இந்த 2004 ஆம் ஆண்டில்தான்.

இதனால் ஏற்பட்ட நன்மைகளைவிட தீமைகளே அதிகம். சிறுபான்மை தொங்கு நாடாளுமன்ற அரசை அமைத்தார் சந்திரிகா.

தனது நாடாளுமன்ற பலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக அமைச்சுப்பதவிளையும், பிரதி அமைச்சுப்பதவிகளையும் வழங்கி ஆட்பிடித்தார். இதனால் கட்சித் தாவல்களும், பல்டிகளும் சர்வசாதாரணமாகிவிட்டன.

விசேடமாக எதிர்க்கட்சியின் பலத்தை சிதறடிக்க வேண்டும் எனதிட்டமிட்டு செயற்பட்டார் ஜனாதிபதி.

குறிப்பாக ஆறுமுகன் தொண்டமானின் தலைமையிலான இ.தொ.கா.வை- ஐ.தே.க. யிடமிருந்து பிரித்து முத்து சிவலிங்கத்தை அமைச்சராக்கினார். செல்லச்சாமிக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்கினார்.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வலது கைபோல் இருந்தவர் ரோஹித்த போகொல்லாகம. அவரையும் ஒரு அமைச்சராக்கி தன்வசப்படுத்திக் கொண்டார். அதோடு நின்றுவிடவில்லை. ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் கட்சியையும் உடைத்துச் சின்னாபின்னமாக்கிவிட்டார்.

கடந்த ஆண்டில் அரசியல் பல்டிக்கு பிள்ளையார் அணியைப் போட்டு முதல் பல்டி அடித்தவர் ஹுசைன் பைலா. பின் பல்டி பைலா என செல்லமாக அழைக்கப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து அவரது சகாக்களான அன்வர் இஸ்மாயில், ரிஷாத்பதியுதீன், நஜீப். ஏ. மஜீத், அமீர் அலி ஆகியோரும் அமைச்சர்கள் ஆனார்கள்.

எதிர்க்கட்சியின் பலத்தை சிதைத்து ஆட்சியைக் கைப்பற்றும் தந்திரோபாயம் இந்த 2004 ஆம் ஆண்டிலேயே உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது.

### அரசியல் பழிவாங்கல்கள்

இவை எல்லாவற்றையும் விட முன்னாள் அமைச்சரான ரவிகருணாநாயக்கவை கைதுசெய்ய முற்பட்டதும், பின் அவர் முன் ஜாமீன் வைத்து தலையை தப்ப வைத்துக் கொண்டதும் இந்த ஆண்டில் தான்.

என்றாலும் மற்றும் இரு சிரேஷ்ட அமைச்சர்களான கண்டி மாவட்ட எம்.பி. அப்துல்காதர், நுவரெலியா மாவட்ட எம்.பி. எஸ்.பி. திஸநாயக்க ஆகியோர் வகையாக மாட்டவைக்கப்பட்டனர்.

முன்னாள் அமைச்சர் அப்துல்காதர் 25 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பின் பிணையில் விடுவிக்கப்பட்டார். இவருடைய எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது.

ஆனால், எஸ்.பி. திஸநாயக்க வெளிப்படுத்திய ஒருவாய் வார்த்தைக்காக இரண்டு வருட கடுழிய சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார்.

இவை எல்லாம் 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அதியுயர் அரசியல் பழிவாங்கல்கள் என்றே கருதப்படுகின்றன.

### கேலிக்கூத்தாக்கப்பட்ட நாடாளுமன்றம்

நாடாளுமன்றம் தேசிய கௌரவம் மிக்க அதியுயர் பீடமாக அமைந்துள்ளது. ஆனால், இந்த அரசியல் வாதிகளால் இந்த நாடாளுமன்றம் கேலிக்கூத்தாக்கப்பட்டது. சபாநாயகர் தேர்வின் போது ஆளும்கட்சி உறுப்பினர்களும், அமைச்சர்களும் சபையை சந்தைக்கடையாக்கி இருந்தனர். அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே வாக்குப் பெட்டியின் மீது ஏறிநின்று ஆடினார். நாட்டின் முதல் பிரஜையான ஜனாதிபதி கூட எழுந்துநின்று கௌரவமளிக்கும் பௌத்தபிக்குமார் ஆளுங்கட்சி உறுப்பினர்களால் துகில் உரியப்பட்டார்கள். தாக்கி அகௌரவப்படுத்தப்பட்டனர். முதன் முறையாக பிரதி அமைச்சர் ஒருவர் செங்கோலைத்தூக்கிக்கொண்டு சபையை விட்டு ஓடி விட்டார். இதனையே ஆளும்கட்சி உறுப்பினர்களும் ஒரு சமயத்தில் திருப்பிச்செய்து காட்டி விட்டனர். இந்த கைங்கரியங்கள் எல்லாம் இடம்பெற்றதும் இந்த 2004 ஆண்டிலேயே.

2004 ஆம் ஆண்டில் நாடாளுமன்றில் தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதாநாயகர்களாகவே திகழ்ந்தனர். தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்களின் குரல்கள் ஓங்கி ஒலித்தன.

ஆளும்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் செங்கோலைத்தூக்கிக் கொண்டு அங்கல் ஓட்டம் ஓடினார்கள்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களோ அப்புனித செங்கோலைத் தொடாமலே நாடாளுமன்றத்தை ஸ்தம்பிக்கச் செய்து விட்டார்கள். செங்கோல் ஆட்சி நடக்கும் இடத்தில் செங்கோல் ஒரு கேடா என்று சிந்திக்க வைத்து சாதனை படைத்த ஆண்டு 2004.

### நாடாளுமன்றில் ஈகச்சுடர்

தமிழீழத்திலும், சர்வதேச நாடுகளிலும் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் மாவீரர் தினம் கொண்டாடுவதும், ஈகச்சுடர் ஏற்றுவதும் வழமை.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 21 பேர் ஸ்ரீலங்கா நாடாளுமன்றக் கட்டடத்தில் அதுவும் நாடாளுமன்றத்தின் பிரதான நுழைவாயில் முன் ஈகச்சுடர் ஏற்றி தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளையும், மாவீரர் தினத்தையும் ஒன்றாகக் கொண்டாடினர். இது இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் 2004 நவம்பர் 26 ஆம் திகதி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வேண்டிய ஒன்று.

அதுபோன்று சகுணம் பார்க்கப் போகும் போது பூனையை மடியில் கட்டிக் கொண்டு போவதாக ஒரு கதை உண்டு. நமது ஜனாதிபதியும் சமாதானப் பேச்சை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டு ஜே.வி.பியினரைத் தோளில் சுமந்து கொண்டு தடுமாறுகின்றார். இந்த தடுமாறத்துக்கு அடித்தளம் இட்ட ஜனாதிபதி புலிவாலைப் பிடித்த நிலையில் இருக்கிறார். விட்டால் பதவிக்கு ஆபத்து, விடாவிட்டால் சமாதானத்துக்கே ஆபத்து. இக்கட்டான நிலைக்கு ஜனாதிபதியை இட்டுச் சென்றதும் 2004 ஆம் ஆண்டு தானே.

### இயற்கை அனர்த்தங்கள்

அரசியல், சமூக, பொருளாதார தாக்கங்கள் இப்படி என்றால் இயற்கை அனர்த்தங்களும் எம்மை விட்டு வைக்கவில்லை.

கடும்மழை, மண்சரிவுகள், வெள்ளப் பெருக்குகள் எனத் தொடர் தாக்கங்கள் ஒரு பக்கம், மறுபக்கத்தால் மழை இல்லை, கடும் வரட்சி எனத் தாக்கங்கள் பல.

எமது நாட்டின் கிழக்கு மாகாண மக்கள் என்ன பாவம் செய்தார்களோ தெரியாது. மரத்தில் இருந்து விழுந்தவனை மாடேறி மிதித்த கதைதான் கிழக்கு மாகாண மக்களின் நிலை.

2004 டிசம்பர் நடுப்பகுதியில் தொடர்ச்சியாக ஏற்பட்ட கடும் மழையினால் மட்டக்களப்பு மாவட்டம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. பல கிராமங்கள் பாதிக்கப்பட்டன. பல ஆயிரம் பேர் அகதிகளாகினர். இவர்களின் நிலையோ பரிதாபம். பிரதமர் உட்பட பல அமைச்சர்கள் சென்றனர்; பார்த்தனர். உதவுவோம் என்று உறுதி அளித்தனர். ஆனால், இன்றுவரை எந்த நிவாரணமும்

இரா. புத்திரசிகாமணி

அரசிடம் இருந்து கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

தட்டுத்தடுமாறி அயலவர்களினதும், தொண்டர் நிறுவனங்களினதும், தனியார்களினதும் உதவிகளுடன் மட்டக்களப்பு மக்கள் படிப்படியாக மீண்டும் தமது வீடுகளுக்குக் குடியேறத் தலைப்பட்டனர்.

இத்தனை அவலங்களுக்கும் மத்தியில் அகில உலகமும் நத்தார் பண்டிகையை டிசம்பர் 25 ஆம் திகதி வெகு கோலாகலமாகக் கொண்டாடியது.

முதல்நாள் கடவுள் வழிபாடு, உறவினர்களுடன் கொண்டாட்டம் என களைத்துப் போன மக்கள் நிறைவான மனதுடன் சனியன்று அமைதியாகவே நித்திரை கொண்டனர்.

ஆனால், ஞாயிறு காலை ஏற்பட்ட அனர்த்தம் எவராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

### சுனாமி ஏற்படுத்திய பேரழிவு

2004 ஆம் ஆண்டு ஞாயிறு 26 ஆம் திகதி காலை 8.20 மணி. பல ஆயிரம்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# 2006 சட்ட சபைத்தேர்தலை குறிவைக்கும் ஜெயலலிதா

லோக்சபாவிற்கு ஏப்ரலில் நடந்த தேர்தலில் வரலாறு காணாத தோல்வி கண்ட முதல்வர் ஜெயலலிதா. இப்போது அதிகம் பேசாமல் செயலில் தனது செல்வாக்கை அதிகரிக்கும் முயற்சியில் தீவிரமாகியுள்ளார்.

தி.மு.க. - காங்கிரஸ் கட்சிகளிடையேயான கூட்டணியை நிரந்தரமாக விடாமல் தடுக்கும் முயற்சிகளையும் முடுக்கிவிட்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்-தி.மு.க.- ம.தி.மு.க-பா.ம.க. கூட்டணி அப்படியே தொடர்ந்தால் ஜெயலலிதா அரசியலுக்கு முழுக்குப் போட வேண்டியது தான் என்பது அவருக்கு நன்கு தெரியும். இதனால் எப்படியாவது இக்கூட்டணியை உடைக்கும் முயற்சிகள் திரை மறைவில் அரங்கேறுகின்றன.

வைகோவை சிறையிட்டதனால் ம.தி.மு.க. ஒருபோதும் இனி ஜெயலிதாவுடன் கூட்டுச்சேராது என்பது தெரிந்தவிடயம். ஆனால் பாட்டாளி மக்கள் கட்சி காலத்துக்குக் காலம் அணிமாறும் கட்சி என்பதால் பா.ம.கவையோ காங்கிரஸையோ தி.மு.க கூட்டணியிலிருந்து பெயர்த்து எடுப்பதே ஜெயலலிதாவின் நோக்கம்.

முதலில் காங்கிரஸை தன்பக்கம் இழுக்கவும் அதன் தொடர்ச்சியாக மதசார்பற்றவராக தன்னைக் காட்டிக் கொண்டால் கம்யூனிஸ்ட் கட்சிகளும் தி.மு.க அணியைவிட்டு வெளியேறி தன்பக்கம் வரும் எனவும் அவர் கணக்குப்போட்டுள்ளார். ஏற்கனவே இந்துமதசார்பு சட்டங்கள் பலவற்றை அவர் ரத்துச் செய்துள்ளார்.

'காஞ்சி மடாதிபதியை சிறையிட்டுள்ளேன். நான் இந்துமதவாதி எனில் பிழை செய்த இந்துமத தலைவரான மடாதிபதியை தப்புவித்திருப்பேனே' என பிரசாரம் செய்யவும் தயாராகிவருகிறார். இவை மூலம் மதசார்பற்றவர் என காட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.



ஜெயலலிதா -கருணாநிதி-

மேலும் காங்கிரஸுக்குள் உள்ள தனது துதிபாடிகளை ஏவி வாசனையும் இளங்கோவனையும் கவிழ்க்கவும் முயன்றுவருகிறார்.

காங்கிரஸ் - தி.மு.க கூட்டணி உண்டாக மூல காரணம் வாசனும் இளங்கோவனுமே. எனவே இவர்கள் த்மிழக காங்கிரஸ் தலைமையில் உள்ளவரை, தான் நினைப்பது நடக்காது என்பதை ஜெயலலிதா அறிந்துள்ளார். தமிழக காங்கிரஸில் அவரது அடிவருடிகளாக உள்ள முன்னாள் மாநில காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, முன்னாள் மத்திய அமைச்சர் பிரபு போன்றோரை தூண்டிவிட்டுள்ளார் அவர். இவர்கள் இருவரும் 1991ஆம் ஆண்டுக்குப்பின் தொடர்ச்சியாக 3தடவைகள் தத்தமது லொக்சபா தொகுதிகளில் தோற்றவர்கள். இம்முறைதான் தி.மு.க. கூட்டணி உண்டான புண்ணியத்தில் தங்கள் தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளனர்.

எனினும் இவர்களின் ஜெயலலிதா ஆதரவுப் பின்னணியை அறிந்துள்ள சோனியா, இவர்களுக்கு மத்திய அரசில் இணை அமைச்சர் பதவிகூட வழங்கவில்லை. ஜெயலலிதாவின் பரமவைரியான முன்னாள் மாநில தலைவர் இளங்கோவனுக்கு அமைச்சர் பதவி தந்துள்ளார்.

இவ்வாறு அதிருப்தியடைந்திருக்கும் தங்கபாலு, பிரபு ஆகியோரை தூண்டி தமிழக காங்கிரஸை உலுக்கும் முயற்சியில் ஜெயலலிதா ஈடுபட்டுள்ளார். தமிழக காங்கிரஸ் தலைவரை மாற்றவேண்டும்; அப்பதவிக்கு தேர்தல் நடத்தவேண்டும் என தங்கபாலு கோஷ்டி கோஷமிட்டு வருகிறது. தமிழக காங்கிரஸ் தலைமையை தனக்கு சாதகமாக மாற்றிவிட்டால் திமுக- காங்கிரஸ் உறவை தகர்த்துவிடலாம் எனவும் ஜெயலலிதா கனவு காண்கிறார்.

இது தவிர வீரப்பன் கும்பலை அழித்ததை தனது பெரு வெற்றியாகவும் ஜெயலலிதா காட்டிவருகிறார். சினிமாத் துறையில் திருட்டு விசிடிகளை ஒழிக்கத் திட்டங்களை வகுத்ததால் அவரது எதிரிகளான ரஜனிகாந்த், விஜயகாந்த் போன்றோர் உள்ளிட்ட சினிமா நடிகர் சங்கத்தினர் ஜெயலலிதாவுக்கு பொன்னாடை போர்த்தி விழா நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கடந்த தேர்தலில் தலைகுப்புறக் கவிழ்ந்த ஜெயலலிதா சற்றே தலைநிமிர்வது போல தோன்றுகிறது. இவற்றுக்கு மேலதிகமாக பலமான தி.மு.க கூட்டணியை உடைப்பதே அவரது இப்போதைய நோக்கம்.

அவ்வாறு செய்து வெற்றி கண்டால் 2006இல் மீண்டும் ஆட்சியை தக்க வைத்துக்கொள்ளும் கனவிலும் அவர் உள்ளார்.

எஸ்.சுரேந்திஜித்





## NATIONAL CHILD PROTECTION AUTHORITY

No. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka. Telephone : 94-2778911-14 Fax : 94-2778915
E-mail: ncpa@childprotection.gov.lk
Website: http:/www.childprotection.gov.lk


உங்கள் பிள்ளையின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க அர்ப்பணிப்புடன் செயல்படுவது போல் அயலாரின் பிள்ளைகளையும் நேசித்து நடவுங்கள்.

கல்வி, சுகாதாரம், போஷாக்கு, விளையாட்டு, சொந்த விருப்பங்கள் ஆகியவற்றின் மீது அதிக அக்கறை காட்டுங்கள்.

நாளாந்தம் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியுடன் இருங்கள்.

உங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளின் தாக்கங்களை பிள்ளைகள் மீது சுமத்தி விடாதீர்கள்.

எப்போதும் அவர்களுக்கு இடமளித்து நடந்துகொள்ளுங்கள்.



–தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.

தலைவர்–பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா

குறிப்பு : குமுதுமாலி மத்துமகே

# பித்தன் பதில்கள்

ஏ.கே. வடினோத்— தாவடி.

கேள்வி:- பித்தா! திருமண வாழ்க்கை சுமையா? சுவையா?



பதில்:— சுமையான சுவை.

செ.தர்ஷினி— வண்ணார்பண்ணை.

கேள்வி:- பித்தா! தற்போது யுத்தமும் இல்லாமல்- சமாதானமும் இல்லாமல் இருக்கும் இந்தக் காலப்பகுதியை என்னத்துடன் ஒப்பிடலாம்?

பதில்:— மோதல்கள்— முட்டல்கள்—சிறு சிறு தாக்குதல்கள் என்பவற்றை வைத்துப் பார்க்கும்போது இது திருமண எழுத்துக்கும் திருமணத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதி. ஏராளமான எதிர்பார்ப்புகளுடன் பயந்தபடி இருக்கிறோம். எப்போ பெரிய தாக்குதல் நடைபெறுமோ?

ச.பஞ்சலிங்கம்— மட்டக்களப்பு.

கேள்வி:- வெளிநாட்டிலே இருக்கும்போது எனது மகள் தனக்கு மாப்பிள்ளை பார்ப்பதாயின் சமைக்கத் தெரிந்த மாப்பிள்ளையாகப் பார்க்கச் சொல்கிறாளே ஏன்?

பதில்:— வெளிநாட்டிலே அப்படித்தான். சமைப்பது... தோய்ப்பது என்பனதான் ஆண்கள் செய்யும் வேலை. மற்ற எல்லா வேலைகளையும் பெண்கள் செய்வார்கள். கவலை வேண்டாம்.

வ.தனஞ்சயன்—மயிலிட்டி.

கேள்வி:-அடிமைக்கு உதாரணமாக யாரைக்கூறலாம்?

பதில்:—சீதனம் வாங்கி கல்யாணம் முடிக்கும் அனைவரையும்.

செ.தனுஷியா—ஆலடி.

கேள்வி:- சீதனம் வாங்காத ஆண்களைப் பற்றி?

பதில்:—மனைவிக்குத் தியாகி, பெற்றோருக்குத் துரோகி, அயலவர்களுக்கு நோயாளி, மாமன் மாமியாருக்கு ஏமாந்த சோணகிரி.

து.வயிரநாதன்— கோப்பாய்.

கேள்வி:- பித்தா! விடுதலைப்புலிகளை அழிக்கவென சில ஆயுதக்குழுக்கள் அலாய்ப் பறக்கின்றனவே... அவர்களால் புலிகளை அழிக்க முடியுமா?

பதில்:— முடியாது என்பது மட்டுமல்ல. முடிந்தாலும் அவர்கள் நிச்சயமாக அழிக்கப்போவதில்லை. ஏனென்றால் விடுதலைப்புலிகள் இருப்பதால்தான் அவர்களின் வண்டி ஓடுகிறது. அவர்களை அழித்துவிட்டால் ... அதன் பின் இவர்களை எந்த நாயும் தேடாது.

தெ.கமலா— மறவணி.

கேள்வி:- பெண்ணினம் விடுதலை பெற வேண்டுமானால் என்னமாதிரியான போராட்டங்களில் ஈடுபட வேண்டும்?

பதில்:— அம்மணி. அடக்கப்பட்டோர் அல்லது அடக்கப்படுவோர் தான் அடக்குவோர் அல்லது ஆட்சி செய்வோருக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும். அடக்குவோருக்கும் ஆட்சி செய்வோருக்கும் ஏன் விடுதலைப்போர்?

இ.மன்மதன்— தெஹிவளை.

கேள்வி:- பித்தா! இப்போதைக்குப் பேச்சு தொடங்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லவே இல்லையா?

பதில்:—பேச்சுக்கான பேச்சுக்களே இன்னும் தொடங்கவில்லை. இந்த இலட்சணத்தில் ஒரு பேச்சுத் தேவையா? பேச்சு என்ற பேச்சுக்கே இப்போதைக்கு இடமில்லை என்பதை ஒரு பேச்சுக்காக உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

செ.வல்லிபுரம்- மணல்காடு.

கேள்வி:- பித்தா! குளோனிங் முறை வெற்றியளித்துவிட்டதால் இனிமேல் ஆண்களின் தேவை பெண்களுக்கு இருக்காதா?

பதில்:—உயிரைப் பெற மட்டுமே குளோனிங். உணர்ச்சிகளை வடியவைக்க ஆண்கள் தேவை.

ஐ.துளசி— யாழ்ப்பாணம்.

கேள்வி:- பித்தா! எத்தனை நாள்தான் மனைவியின் கையால் அடி வாங்குவது? பேசாமல் மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறையிட்டுப் பாருமேன். ... கைமேல்பலன் கிடைக்கலாம்.

பதில்:—இல்லை.கையால் பலன் கிடைக்கும் என்ற பயத்தில் நான் அப்படி முறையிடவில்லை.

வ.ஐங்கரன்— வாழைச்சேனை.

கேள்வி:- பித்தா! யாரை நம்பக் கூடாது?

பதில்:— அழுகிற ஆணை— சிரிக்கிற பெண்ணை.

வை.ஐயாதுரை— செம்மணி.

கேள்வி:- பித்தா! பேயைப் பார்த்திருக்கிறீரா?

பதில்:— குடித்தனமே நடத்துகிறேனே...



செ.செல்வி— வாகரை.

கேள்வி:- பித்தா! நீர் உமது மனைவியிடம் உண்மை பேசினால் இவ்வளவு அடி வாங்க வேண்டி வராதே?

பதில்:— அம்மணி! பொய் பேசியே இவ்வளவு அடி விழுகிறதே! உண்மை பேசினால் யம்மா...தாங்குமா?

கி.விக்ரமன்— தாழையடி.

கேள்வி:- பெண்களுக்கு அனுபவப்பட்ட பின்புதான் புத்தி வரும் என்கிறார்களே உண்மையா?

பதில்:— பல பெண்களுக்கு சத்தி வந்த பின்னர்தான் புத்தி வருகிறது.

கு.துஷ்யந்தன்— தெஹிவளை.

கேள்வி:- பித்தா! வீட்டுச்சாப்பாடா- கடைச்சாப்பாடா உடம்புக்கு நல்லது?

பதில்:— வீட்டுச்சாப்பாடு எப்போதும் சூடாக இருக்கும்— எப்போதும் கிடைக்கும். உடம்புக்கும் நல்லது. வெளிச்சாப்பாடு சூடு கம்மி, நேரத்துடன் போனால் தான் கிடைக்கும். உடம்புக்கும் கெடுதல்.

ச.வாசுகி— தெல்லிப்பளை.

கேள்வி:- பித்தா! பஸ்களில் சில ஆண்கள் இடியரள்களாக மாறி பெண்களை இடித்துத் தள்ளுகிறார்களே. இவர்களை என்ன செய்யலாம்?

பதில்:— நீங்கள் அடியாள்களாக மாறி அவர்களைப் பதம் பார்க்கலாம்.

எஸ்.தனுஷன்— கிராண்ட்பாஸ்.

கேள்வி:- பித்தா! என்னிடம் மட்டும் உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் மிகவும்ரசிப்பது எதனை? உயர்ந்ததையா? தாழ்ந்ததையா?

பதில்:— ஐயா நான் உயர்ந்தது,தாழ்ந்தது, உருண்டது,திரண்டது,சிறுத்தது, பெருத்தது, வளைந்தது, நெளிந்தது என்று அனைத்தையும் ரசிப்பேன்.



சை.தாரணி—கிளிநொச்சி.

கேள்வி:- பித்தா! அண்மையில் நடந்த கொடுமையான அழிவுகளைப்பற்றி?

பதில்:— அந்த அவலத்தை நேரிலே பார்க்கக் கிடைத்தது. அநியாயம் செய்தவர்களை ஆண்டவன் அழிப்பான் என்கிறார்கள். ஆனால், பச்சைப் பிஞ்சுகளை பிணமாகக் கொண்டு வந்து அடுக்கிய போது... இவர்கள் என்ன செய்தார்கள் ஏன் இந்தக் கொடுமை என்றிருந்தது. எத்தனையோ திட்டங்கள், எத்தனையோ எண்ணங்களுடன் காலையில் எழுந்த ஆயிரக்கணக்கானவர்கள் ஐந்து நிமிடத்தில் — பிணமாக— அவர்களைத் தேடி உறவுகள் அலைந்த அலைச்சல்... பெற்றோர்களை இழந்து விட்டு— தேடியழுதபடி அலைந்த சிறு பிள்ளைகள்.. பிணக்குவியல்கள் — காயப்பட்டவர்களின் ஓலங்கள்..ஏன் எங்களுக்கு மட்டும் இப்படி நடக்கிறது அப்பா... ஏதோ சமாதான சூழ்நிலை ஏற்பட்டு வீடுகளுக்குத் திரும்பி கட்டிய பூச்சுக்கள் காயவில்லை, அடித்த வர்ணங்கள் கரையவில்லை. மீண்டும் அகதிகளாகி ஏதிலிகளாகி... பாடசாலைகள், கோவில்களில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம்... இது இன்றோ— நாளையோ அழிந்துவிடக்கூடியவடுவல்ல. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் வரலாற்றில் ஆழமாக வீழ்ந்து விட்ட அழியாத வலி. இறந்தவர்களுக்கு அனுதாபப்படுவோம்— இழந்தவர்களுக்கு ஆறுதல் தருவோம். மீண்டும் கட்டி எழுப்ப ஆதரவு தருவோம்.

இ.அறிவழகன்— முல்லைத்தீவு.

கேள்வி:- பித்தா! 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்ற பழமொழியை உமது மனைவியிடம் எடுத்துக் கூறலாமே?

பதில்:— கூறினேன். ஆனால், அவள் மனைவி சொல்லே மந்திரம் என்றும் பழமொழி இருப்பதாகச் சொல்கிறாள்.



து. விக்ரநாத்— மல்லாவி.

கேள்வி:- பித்தா! பெண்ணும் பேயும் ஒன்று என்கின்றானே என் நண்பன். உண்மையா?

பதில்:— ஆம். உண்மைதான். ஏனென்றால் இரண்டிடமும் மாட்டிக்கொண்டால் மீள்வது கஷ்டம்.

## பித்தனின் கேள்வி

கேள்வி:-வெள்ளை நிறமுடைய பெண்கள் கறுப்பு நிறமுடைய ஆண்களை அதிகம் காதலிக்கிறார்களே? ஏன் பித்தா?

## வாசகர்கள் பதில்கள்

எஸ். கஜானன்— இளவாலை.

ஒவ்வொருவரும் தங்களிடம் இல்லாததைத்தானே தேடுவார்கள்?

எஸ்.மோகனதாஸ்— முறிகண்டி.

எப்படியான காதலிக்கும் கறுப்பு நிற பூட்டுத்தான் பாதுகாப்பும்— வடிவும்.

சகிலா — சாவகச்சேரி.

காதல் நிறம், அழகு, மொழி, மதம் பார்த்து வருவதில்லை என்பது உமக்குத் தெரியாதா?

கஷ்தூரி— யாழ்ப்பாணம்.

வெள்ளை நிறமுடைய ஆண்கள் கறுப்பு நிறமுடைய பெண்களை ஏன் காதலிக்கிறார்களோ அதே பதில்தான் இதற்கும்.

பிரசன்னா— கொழும்பு.

நிறத்தில் என்ன இருக்கிறது? எமது வாழ்க்கை ஓடிக்கொண்டிருப்பதே பாசத்தில் தான். மனதுக்குப்பிடித்தவனின் அன்பு இருந்தாலே போதும் ஒரு பெண்ணுக்கு. அவள் எதையுமே துணிந்து சாதித்து விடுவாள்.

து.குருமூர்த்தி— விஸ்வமடு.

கேள்வி:- பித்தா! எனக்கு 6 பிள்ளைகள் பிறந்துவிட்டன. எனவே, நான் குடும்பக்கட்டுப்பாடு செய்யலாம் என நினைக்கிறேன். அதற்கு என்ன செய்யலாம்?

பதில்:— எதுவுமே செய்யாமல் சும்மா இருந்தாலே போதும்.



செ.தர்மினி—கரவெட்டி.

கேள்வி:- பித்தா! நரக வாழ்க்கை நான் கிடைக்குமென்றால் கவலைப்படுவீரா? சந்தோஷப்படுவீரா?

பதில்:—எதுவுமே படமாட்டேன். ஏனென்றால் தற்போதைக்கு அது ஒன்று புதிதாகத் தெரியாதே?

அ.வர்ணன்—சிலாபம்.

கேள்வி:-பித்தா! அறிவு-அழகு-அன்பு இந்த மூன்றும் உள்ள ஒரு பெண்ணைத் தான் கலியாணம் முடிப்பதென்ற முடிவுடன் இருக்கிறேன். கிடைப்பாளா?

பதில்:— இந்த மூன்றையும் அந்தப் பெண்ணும் கேட்டால், உமக்கு வாழ்க்கையிலே திருமணமே நடக்காமல் போகக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம். கவனம்.





பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அரியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான யதார்த்தமான— பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜனவரி09 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



கேள்வி:— பித்தா! 2005 ஆம் ஆண்டு இலங்கைக்கு எப்படி நல்ல காலமா?

பதில்:—நான் என்ன சோதிடம் பார்க்கும் ஆளா என்ன?

ஏன் உமக்கு ஏதும் பிரச்சினையா நாட்டு நிலையைப் பார்க்கப் புரியவில்லையா?

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.

இலக்கியப் பொழில்

# இராவணன் இராட்சதனா?

இராவணன் இராட்சதனா? தொடரின் முதலாவது பகுதி இலக்கியப் பொழிலில் இவ்வாரம் பிரசுரமாகிறது. இரண்டாவது - இறுதிப்பகுதியை அடுத்த வாரம் படியுங்கள்.

சொல்லேருழவன்
ம.க.அ.அந்தனிசில்

'புழைசெறி கழைகுழலிசை பொழி பொதியம்!' இவ்வாறு பொதிகை மலையின் எழில் தமிழில் ஏற்றிச் சொல்லப்படுகிறது. பொதிகை மலையில் வானுயர் மூங்கில் மரங்கள் ஏராளம். அந்த மூங்கில்களில் வண்டுகள் துளைத்த துளைகளுக்குள் தென்றல் நுழைந்து வெளியேறும்போது குழலிசை போன்ற இனிய ஓசை கேட்குமாம்.

குன்றாப் புகழ் படைத்து ஓங்கிய தமிழ் உச்சத்திலிருந்த குன்று பொதிகை. அப் பொதிகை மலையில் ஊற்றெடுத்து திருநெல்வேலியின் (பாண்டிய நாடு) கடலில் சங்கமிக்கும் ஆற்றின் பெயர் 'தன் பெருநை' என்பதாம். அப்பெயரை தொல்காப்பியத்தில் காணலாம். அந்த ஆற்றின் பெயரை வால்மீகி முனிவர் வட மொழியில் தம்ரபர்ணி என்கிறார்.

தமிழ் வழங்கிய நிலத்தின் எல்லைகள் யாவை?

'வேங்கடம் குமரி தீம்புனற்
பௌவமென் றிந்நான் கெல்லை
தமிழது வழக்கே'

என்கிறார் சிகண்டி முனிவர்.

அதாவது வடக்கே வேங்கட மலையும் தெற்கேகுமரி மலையும்கிழக்கேநதியும்மேற்கே கடலும் தமிழ் வழங்கிய நிலத்தின் எல்லைகள் என்பது இந்நூற்பாவின் பொருள்.

தொல்காப்பிய பாயிரத்தில் 'வடவேங்கடம் தென்குமாரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' என்று சொல்லப்பட்டிருப்பதிலிருந்து தமிழின் எல்லை வடக்கே வேங்கட மலையும் தெற்கே குமரிமலையும் என்றாகிறது.

ஆனால், சுவாமி விபுலானந்தர் 'தமிழுக்கு எல்லை (வடக்கு எல்லை) இமயம்' என்று கூறியிருப்பதிலிருந்து பாரிய உண்மை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

சிகண்டி முனிவரின் கூற்றிலிருந்து பழைய தமிழகத்தின் முப்புறமும் கடல் சூழ்ந்திருக்கவில்லை என்பதற்கு கடற்கோள்களாலுண்டான தாக்கங்களே காரணமெனலாம்.

சுவாமி விபுலானந்தரின் கூற்றிலிருந்து வேங்கட மலைக்கும் அப்பால் இமயம்வரை தமிழ் வழங்கி வந்ததென்ற உண்மையின் பின்னணியையும் நாம் அறிந்து கொள்வது அவசியம் அல்லவா? சுவாமி விபுலானந்தர் இராம கிருட்டின மடாலய துறவற கடமைகளுக்காக இமயமலைச்சாரல்வரை சென்று வாழ்ந்து 'பிரபுத்த பாரத' (விழிப்புற்ற இந்தியா) எனும் ஆங்கிலப் பத்திரிகையை நடத்தி வந்தவேளை மொழி இசை வரலாறு தொடர்பான ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டிருந்தபோதே தமிழ்மொழிக்கு வடக்கெல்லை இமயம் என்ற உண்மையை கண்டறிந்தார்.

இவ்வுண்மை 1925 ஆம் ஆண்டு சிந்து வெளியில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியினால் மேலும் உறுதி செய்யப்பட்டது. அங்கு 5000 ஆண்டுகளுக்கு (கி.மு. 3000) தமிழர் வாழ்ந்துள்ளமை வரலாறு.

## இமய மலை

இமயமலையும், ஆல்ப்ஸ் மலையும் இடைக் காலத்திலேயே தோன்றின. தெற்கே குமரிக் கண்டம் கடல்வாய்ப்பட்ட காலத்திலேயே, முதலாம் கடற்கோளின் பின் வடக்கே பனியாற்றுப் பகுதியில் இமயமலை தோன்றியது. ஆதலின் இமயமலை தோன்ற முன்னரே வடக்கே பனியாறுவரை தமிழ் வழங்கி வந்திருக்கிறதென்பது மேலுமொரு உண்மையாகும். பனியாறு இருந்த காலத்தில் ஆரியர் இங்கு வரவில்லை. இமயமலை தோன்றி பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே ஆரியர் இமயமலையின் ஹைபர் கணவாயூடாகவும் பிறமலை இடுக்கு ஊடாகவும் வடக்கே உட்புகுந்தனர். அவர்கள் வரும்வரை வடமொழி தோன்றியிருக்கவில்லை. வடமொழி தோன்றிவளர்ச்சியுற்ற பின்னரே வால்மீகி முனிவர் இராமாயணத்தை எழுதினார்.

## ராமாயண

வடமொழியில் 'அயண' என்றால் வரலாறு என்று பொருள். 'ராமாயண' என்றால் இராமரின் வரலாறு என்றாகும். ஆதலின் அது ஓர் வரலாற்று நிகழ்வேயன்றி வேறல்ல.

பிரபல சரித்திராசிரியரான சேர்வில்லியம் ஜோன்ஸ் இராம இராவணயுத்தம் சுமார் கி.மு.1810 இல் நிகழ்ந்திருக்கலாமெனக் கூற, இந்திய சரித்திராசிரியரான எஸ்.என். வையாஸ் அந்தயுத்தம் ஏறத்தாழ கி.மு. 1600 இல் நிகழ்ந்திருக்கலாமெனக் கூறுகிறார். (India In The Ramayana Age' Delhi, 1967, P.7)

வால்மீகி முனிவர் இராமாயணத்தை கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் எழுதினாரென் பொதுவாகச் சொல்லப்பட்டிருப்பினும் அதன் சில பகுதிகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுவரை எழுதப்பெற்று சேர்க்கப்பட்டிருக்கலாமென ஆராய்ச்சியாளர்கள் சாற்றுகின்றனர்.

வால்மீகி இராமாயணத்தில் கிட்கிந்தா காண்டத்தில் பாண்டியரின் இராசதானியான கபாடபுரம் சொல்லப்படுகிறது. அங்குதான் இடைத் தமிழ்ச்சங்கம் (இரண்டாம் தமிழ்ச்சங்கம்) நிறுவப் பெற்றிருந்தது.



ஆதலின் முதற் கடற்கோளின் பின்னரே இராம இராவண யுத்தம் நடைபெற்றிருக்கலாமென கருத இடமுண்டு.

சிங்கள பௌத்த வரலாற்று நூலான மகாவம்சத்தில் இராவணனின் கொடுமைகளாலேயே முதற்கடற்கோள் தோன்றியதாக சொல்லப்பட்டிருப்பதில் எள்ளளவும் உண்மையும் இல்லை. ஏனெனில் இராவணன் காலத்திற்கு முன்னரே முதற்கடற்கோள் நிகழ்ந்ததென்பதே உண்மை. அது மட்டுமன்றி கபாடபுரத்தில் பாண்டியர் ஆட்சி செலுத்தி வந்த காலத்தில் இலங்கை நிலப் பரப்பில் இராட்சதர் வாழ்ந்தார்களா? இராட்சதர் என்பது 'ராக்ஷஸ' என்ற வடமொழிப் பெயரின் தமிழ்மயப் படுத்தப்பட்ட பெயராகும். ராக்ஷஸ என்றால் அசாதாரண பருத்த, கொழுத்த, நெடிய உடலமைப்புகளையும் குரூர சிந்தனை செயற்பாடுகளையும் கொண்ட அரக்கர் என்று பொருள். அரக்கர் என்பதும் கற்பனைப் பெயரே! அதாவது ஆங்கிலத்தில் GIANT (ஜயன்ட்) என்பது போல. உண்மையில் திராவிடர்களே வால்மீகி இராமாயணத்தில் இராட்சதர்களாக காண்பிக்கப்பட்டனர் என்க. இராவணன் கருமைநிற மேனியுடையவன் என்பது வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இராமர் இலட்சுமணனைப் பொறுத்து யாம் அதிகம் சொல்லத் தேவையில்லை. வால்மீகி முனிவர் இவர்களை மிக உச்சத்தில் வைத்துச் சொல்லியுள்ளார். இவர்கள் ஆரியர் என்பதே அதற்கான காரணமாகும்.

கதாகாலட்சேபம் செய்யும் பலரும் இராம இலட்சுமண பரதன் யாவரையும் ஆரியரல்ல என்றே கூறுவர். ஆனால், தன் அண்ணனான இராமன் ஆட்சிபீட மேறுவதற்கு பெரும் இடையூறாக விருந்த தனது தாயான கைகேகியிடம் பரதன் ஆரிய பண்பின் மேன்மையை வலியுறுத்தியதிலிருந்து அவர்கள் யாவரும் ஆரியரென்பது எல்லோர்க்கும் தெள்ளெனப் புலனாகும். வால்மீகி இராமாயணத்தை முழுமையாகக் கற்பின் இதுபுரியவரும்.

ஆக, இராம இராவணப்போர் என்பது ஆதியில் நடைபெற்ற பாரிய ஆரிய திராவிடப் போர் என்பதே உண்மையாகும்.

தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், பர்மா, மலாயா, ஜாவா, சுமித்திரா போன்ற பிரதேச மக்கள் இராம இராவண போர் பற்றி கேள்விச் செவிவாயிலாக அறிந்து வைத்துள்ளனரென்றால் முற்காலத்தில் அப்போர் எவ்வளவு பிரபல்யம் பெற்றிருந்ததென்பது சொல்லாமலே புரியும்.

இப்போரின் பின்னணியில் காலங்காலமாக மக்களிடையே வழங்கிவந்த மரபுக் கதைகளை மையமாகக் கொண்டே வால்மீகி முனிவர் இராமாயணத்தை எழுதினார்.

இப்போர் ஆரம்பமாவதற்கு இராவணனின் ஒரே தங்கையான சூர்ப்பனகையை காரணமாகக் காண்பிக்கும் வால்மீகி முனிவர் சீதையின் கடத்தலை வைத்து போரை நியாயப்படுத்துகிறார்.

எந்தவொரு அரசனும் தன் சகோதரியை மாற்றார் அவமானப்படுத்தினால் தாங்கிக் கொள்வானா? வால்மீகி இராமாயணத்தில் இராம இலட்சுமணர் சூர்ப்பனகையை தண்டகாருண்ய காட்டில் வைத்து அடித்து அனுப்பியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தனது தங்கையை தன்னாட்சிப்பிராந்தியமான தண்டகாருண்யம் காட்டில் வைத்து அடித்து அவமானப்படுத்தியதற்காகவே சீதையைக் கடத்தி இராமனை அவமானப்படுத்த இராவணன் நினைத்தானென்றால் அதற்கு வால்மீகி முனிவர் கற்பித்திருக்கும் காரணம் மிக்க வியப்பானதுதான்.

அதாவது சூர்ப்பனகைக்கும் காமவெறி; இராவணனுக்கும் காமவெறி என்பதாக. இவற்றைச் சொல்லியே கதையை விரித்துச் செல்கிறார் வால்மீகி முனிவர். ஆரிய திராவிடப் போரானது எதிர்கால சந்ததியினர் அறியாவண்ணம் திசை திருப்பப்பட்டுள்ளது என்பதற்கு இது போதாதா?

இலங்கையின் நிலப்பரப்பு தொடர்பாக இலங்கைக்கு வந்திராத வால்மீகி முனிவர் எப்படி அறிந்திருநதார? மன்னாரிலிருநது தென்னிலங்கைகுச் செல்லும் பாதையை அவர் அறிந்திருக்கிறார். அப்பாதை வழியே செல்பவர்கள் அரிஸ்த்த மலையை (அரித்த மலையை) தாண்டிச் செல்ல வேண்டுமென்பதையும் அவர் அறிந்திருந்தார்.

அரித்த மலை தற்போது ரித்திகல என வழங்கப்படுகிறது. அவர் குறிப்பிடும் 'சுவேலா' எனும் பெயர் கொண்ட மலை எதுவென கூற இயலாது. அது பிற்காலத்தில் பெயர் மாறியிருக்கலாம். தவிரவும் வால்மீகி முனிவர் பெயர்களை வடமொழி மயப்படுத்திச் சொல்லியிருப்பதால் உண்மையான பெயர்களை அறிந்து கொள்வது சிரமம் தான். மலைப் பிராந்தியமான நுவரெலியாவில் பேதுறுதாலகால மலையுண்டு. அம் மலையில் மூன்று உயரிய சிகரங்கள் உண்டு. வட திசையில் நின்று அம்மலையை நோக்கும் போது அதன் மூன்று சிகரங்களும் தெரியக் கூடியதாகவிருக்கும். அதனையே வால்மீகி முனிவர் 'திரிகூட மலை' என்று குறிப்பிட்டார் போலும். பழங்காலத்தில் வட இந்தியாவிலிருந்து மாணிக்கக் கற்களை நாடி இலங்கையின் மலையகத்திற்கு வந்து போன வியாபாரிகளே இவ்விபரங்களை கொண்டு சென்றனரென்க.

மேலும் தமது இரத்தினக்கல், முத்து, பவள வியாபாரத்தை பல வியாபாரிகள் படையெடுத்து குழப்பிவிடக்கூடாதென்பதற்காக இலங்கைத் தீவில் பேய்களும், பூதங்களும் வாழ்வதான 'பூச்சாண்டி' கதைகளையும் இந்த வியாபாரிகளோ பரப்பி விட்டனர். அவ்வாறே பாளி நூலான தீபவம்சமும், இலங்கையில் முற்காலத்தில் பிசாசுகளும் இராட்சதர்களும் வாழ்ந்ததாகக் கூறுகிறது. மகாவம்சமும் அதையே வேறு வடிவில் கூறுகிறது. இவை ஒருபுறம் இலாபநோக்கிற்காகவும், மறுபுறம் வேறு சிலரால் திராவிடரின் ஆதிவரலாற்றை மறைப்பதற்காகவும் கையாளப்பட்டவை.

வால்மீகி இராமாயணத்திலும் பௌத்த வரலாற்றைச் சொல்லும் இலங்கையின் பாளி நூல்களிலும் சித்திரிக்கப்பட்டிருக்கும் இராட்சதர்கள் மற்றும் மாயா ஜால பிறவிகள் போன்றோர் இலங்கையில் மட்டுமல்ல உலகில் எப்பாகத்திலும் எக்காலத்திலும் வாழ்ந்ததில்லை. இவை மானிடவியலுக்கு மாறுபாடான செய்தியாகும். ஆதலின் மானிடர்களையே வால்மீகி முனிவர் மாயா ஜால பாத்திரங்களாகப் படைத்தாரென்பதே உண்மை. இவை பிற்கால சந்ததியினரின் கண்களில் மிளாகாய்ப் பொடிதூவும் கைங்கரியமே அன்றி வேறல்ல. இது அஞ்ஞானத்தின் இரகசியமுமாகும்.

## இராமாவதாரம்

ஆதியில் வால்மீகி முனிவர், வசிட்ட முனிவர், போதாயன முனிவர் ஆகிய மூவருமே வடமொழியில் இராமாயணத்தை எழுதியிருந்தனர். இவர்களுள் வால்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தை முதனூலாகக் கொண்டுதான் கவியரசர் கம்பர் தனது 'இராமாவதாரம்' எனும் நூலினை எழுதினார். அதுவே பின்னர் கம்பராமாயணம் என்ற பெயரை எய்திற்று.

தமிழ்நாட்டில் ஐம்பெரும் காப்பியங்களான சீவகசிந்தாமணி, குண்டலகேசரி, வளையாபதி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை ஏலவே எழுதப்பெற்றிருந்தன. அநபாயச் சோழனின் மந்திரியான சேக்கிழாரினால் பெரிய புராணம் எனும் நூலும் எழுதப்பெற்றிருந்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

இலங்கை முழுவதையுமே அதிரவைத்த கடல் கொந்தளிப்பு வரலாறு காணாத அழிவுகளை செய்து விட்டு மீண்டு விட்டது.

இலங்கையின் கிழக்கு, தெற்கு, வடக்கு கரையோரங்கள் முழுவதையும் 'கபளீகரம்' செய்துவிட்டது சுனாமி என்ற கடல் கொந்தளிப்பு.

இலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரங்கள், துறைமுகங்கள், கிராமங்கள் என்பவற்றை தயவு தட்சன்யமின்றி கடல் அலை அடித்துச் சென்றுவிட்டது. நினைத்துப் பார்க்க முடியாத உயிரழிவுகளையும் 'உடைமையழிவுகளையும் செய்துவிட்டு இலங்கையருக்கு அவலத்தை மட்டுமே தந்த இப்பேரலைகள் இலங்கையை பெரும் சோகத்தில் ஆழ்த்திவிட்டுச் சென்றுள்ளன.

இதனால் கரையோர மக்களே பெருமளவில் பாதிக்கப்பட்



# அ லையின் ழிவுக்கு

டுள்ளனர். கடலை நம்பி வாழ்ந்த மக்களை கடைசியில் கடலே கொண்டு சென்றுவிட்டதே?.

ஒரு சில மணிநேரங்களில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்து போன வரலாற்றுச் சோகம் யாரைத்தான் அழவைக்காது? எத்தனை நூறுகோடி உடைமைகள் கடலுடன் சங்கமம் ஆகின?

மரணங்கள் மலிந்த பூமி இலங்கை என்பது சரிதானா?

இப்பேரனர்த்தத்தால் தமிழர் தாயகத்தின் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, அம்பாறை என்பன கோரமான அழிவுகளைச் சந்தித்த அதேவேளை தென்னிலங்கையின் காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை போன்ற கரையோரங்களும் பாரியளவில் அழிவுக்குள்ளாகின.

தாயகமான அம்பாறை மனித உயிரழிவின் சிகரமாக காணப்படுகின்றது. இற்றைவரை 8 ஆயிரத்து 300க்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.



அம்பாறையின் மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, மளிகைக்காடு, காரைதீவு, திருக்கோயில், பாண்டிருப்பு, ஆலையடிவேம்பு என பல கிராமங்களை கடல் அலை அள்ளிச் சென்றுவிட்டது. இவ் அனர்த்தத்தால் பெருமளவில் சிறுவர்களும், பெண்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர்.





நிந்தவூரில் குர்.ஆன் மத்ரஸாவில் ஓதிக் கொண்டிருந்த 50 சிறுவர்களை அப்படியே அள்ளிச்சென்றது கடல் அலை.

அப்படியெனில் உண்மையான உயிரழிவு? இம் மாவட்டத்தில் மாத்திரம் 13 ஆயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதாக பிந்திய தகவல்கள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

அம்பாறையில் தமிழ் - முஸ்லிம் மக்களை இந்த அனர்த்தம் பெரியளவில் பாதித்துவிட்டது. இதனால் பல ஆயிரம் குடும்பங்கள் பாடசாலைகள், பள்ளிவாசல்கள், ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளனர். தமிழ் - முஸ்லிம் மக்கள் பாகுபாடின்றி இங்கு ஒன்றிணைந்த மீட்பு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றமையும் கவனிக்கத்தக்கது.

அம்பாறையின் கரையோரக் கிராமங்கள் சுடுகாடாய் மாறிவிட்டன. கிராமங்கள் மண் மேடாய்க் கிடக்கின்றன. அம்பாறையில் ஒளியை கொடுக்கும் கீழ்த்திசை இருண்டுவிட்டது. ஒளியை தர எவ்வளவு காலம் தேவையோ?

முல்லைத்தீவு தமிழர்களின் வீரத்தின் விளைநிலம். தலைகுனியாத யாரிடமும் மண்டியிடாத மண்ணின் பேரழிவு இதயத்தை துளைக்கின்றது.

முல்லைத்தீவு நகரம் அழிந்துள்ளதுடன், கரையோரப் பகுதியான செம்மலை தொடக்கம் மாத்தளன் வரையான கரையோரக் கிராமங்களை பல அடி உயர கடலலைகள் மூழ்கடித்துவிட்டன. சில கிராமங்கள் மனிதர்களேயின்றி அழிக்கப்பட்டுவிட்டன.

போர்க்காலத்தில் பெரிய நெருக்கடிகளையும், இழப்புக்களையும் சந்தித்த இம் மாவட்டங்கள் பாரிய உயிரிழப்பைச் சந்தித்து நிற்கின்றன. ஆயிரம் வரையான சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதேவேளை உயிரிழந்து மற்றும் காணாமல்போனோர் தொகை மூவாயிரம் வரை உயர்ந்துள்ளது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை வடமராட்சிக் கரையோரப்பகுதிகள் கடல் அலைகளால் அள்ளுண்டுபோய் விட்டன. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நாகர்கோயில், மணற்காடு, செம்பியன்பற்று, மாமுனை என கரையோரக் கிராமங்கள் காணாமல் போய்விட்டன. எமது தாயகத்தில் காணாமல்போதல்தான் விதி ஆகிவிட்டது என்று ஆற்றுப்படுத்தக்கூடிய இழப்புத்தானா இது?

நாற்பது அடி வரை உயர்ந்தெழுந்த அலைகள் எத்தனை பேரை அனாதரவாக்கிவிட்டுச் சென்றுவிட்டன. அகதிவாழ்வு எமக்கு பழக்கமாகிப் போய் விட்ட போதும், எதிர்பாராமல் வந்த இயற்கையின் சீற்றம் எல்லோரையுமே சுட்டுவிட்டது.

யாழ்ப்பாணம், கீரிமலைப் பகுதியில் பிதிர்க்கடன் செலுத்தச் சென்ற மூவர் உட்பட 17 பேர் கடலலையால் அடித்துச் செல்லப்பட்டனர்.

இச் சம்பவத்துக்கு முன்னதாகத்தான் 50 சிறுவர்கள் அப்பகுதிக்கு சென்று விட்டு சென்றதாக கூறப்படுகிறது. அருந்தப்பில் சிறுவர்கள் தப்பியமை அழிவிலும் ஒரு சிறிய அதிஷ்டமேயாகும்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமியர் என எங்கு பார்த்தாலும் சடலங்களே காணப்படுகின்றன. சடலங்களுக்குள் எங்கே தமது உறவினர்கள், குழந்தைகள், காணாமல்போனவர்கள் எவரும் காணப்படுகின்றனரா என ஒவ்வொன்றாக மக்கள் புரட்டிப்பார்த்து கதறும் காட்சிகள் மனதை உருக்குகின்றன.

'என்னைக் காப்பாற்றுங்கள்' என கதறிய மனைவியை காப்பாற்றச் சென்ற கணவனும் கடலுக்கு இரையாக, அவர்களின் குழந்தைகள் அநாதைகளாக இருப்பதை காணமுடிகிறது.

தாய்மாரின் கதறல்களை கடல் அலையை விட ஆக்ரோஷமாகவும், பரிதாபகரமாகவும் கேட்கக் கூடியதாக உள்ளது.

துயரக் காட்சிகள் அங்கே நீளுகின்றன.

மட்டக்களப்பில் பேரிரைச்சலுடன் வந்த பல அடி உயரமான பேரலைகளால் நாவலடி, மூகத்துவாரம், காத்தான்குடி, கல்குடா, அமிர்தகழி, ஒந்தாச்சிமடம், கிரான்குளம், பெரியகல்லாறு, தாழங்குடா, ஆரையம்பதி, களுதாவளை, வாகரை ஆகிய பகுதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

திருகோணமலையைப் பொறுத்தவரை நகரப்பகுதி மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. மூன்று பகுதியாலும்





கடல்நீர் உள்நுழைந்து வம்சம் செய்துள்ளது.

மூதூர், கிண்ணியா என்பன முற்றாக அழிவடைந்துள்ளன. சுமார் 5 நிமிடத்தில் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு 6 அடி உயரத்தில் ஊடுருவிய கடல்நீர் பல நூறு உயிர்களைக் காவு கொண்டது. கிண்ணியா வைத்தியசாலை திடீரென எழுந்த கடல் அலையால் மூழ்கியது. அங்கிருந்த நோயாளிகள் அனைவரும் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

திருமலையில் மூவின மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்

உயிரிழந்துவிட்டனர்.

காலிப்பகுதியில் காலியின் நகரப்பகுதி, தங்காலை நகரப்பகுதி என அனைத்துமே நீரில் மூழ்கிவிட்டன. காலி பஸ்நிலையத்தில் பஸ்கள் மிதக்கின்றன. மனித அழிவும் சாதாரணமானதாக இருக்கவில்லை.

25 ஆயிரம் வரையான மக்களைக் காவு கொண்டதுடன் பல ஆயிரம் பேரைக் காயப்படுத்தி 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை அகதிகளாக்கிவிட்ட இந்தக்







# ஆளாகிய ஆன்மாக்கள்

கடல் அனர்த்தம் 'இரத்தினதீவு' என்ற இலங்கையை ஆக்கி 'இரத்தத்தீவு' விட்டதே. உறவாடி வாழ்ந்த உறவுகளை அழித்து விட்ட கடலலை இவ்வளவு அழிவுகளை செய்து விட்டு மௌனமாகிவிட்டதே.



என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை கரையோரப்பகுதி கிராமங்களை கடல் அலை அடித்துச் சென்றதில் பல ஆயிரம் உயிர்கள் பறிபோயின.

மாத்தறைப் பகுதி பெரும் அழிவை எதிர்கொண்டது. இதே வேளை கடல் அலையின் கோரத்துக்கு சான்றாக மாத்தறை நோக்கி சென்று கொண்டிருந்த ரயில் ஹிக்கடுவப் பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பயணிகளுடன் தூக்கியெறியப்பட்டது. அனைவருமே உயிரிழந்துவிட்டார்கள். குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என அனைவருமே

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்பு நிவாரணங்கள் வெளிநாடுகளில் இருந்து வரத் தொடங்கிவிட்டன. சீராக அவற்றை பகிர வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

பிங்கலன்














# நெருப்பாறு

## குறு நாவல்

**01**

ச.முருகானந்தன்

இது முதலிரவு!

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு தடவை வருகின்ற அற்புதமான ஆனந்தமான நாள். இந்த ஒரு இரவைப்பற்றி எல்லோருமே எப்படி எப்படி எல்லாம் கற்பனை பண்ணியிருப்பார்கள்.

அவளும் தான்!

நினைவுகள் நிஜங்களாகின்ற இரவுக்கே உரிய பதட்டமும், இனம் தெரியாத ஒருவித பயமும், அதீத கற்பனையுடனான எதிர்பார்ப்புமாக வசந்தமாலா பாலுடன் தனியறையுள் நுழைகிறாள்.

அவனது பாதங்களில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெற முன்னரே அவன் அவளைத் தடுத்து, "இந்தச் சம்பிரதாயங்கள் ஏதும் வேண்டாமே" என்று சிரித்தபடி அருகே அவளை அமர வைத்தான்.

"மாலா... உன்னை... உங்களை எனக்குப்பிடிச்சிருக்கு. என்னை உங்களுக்குப்பிடிச்சிருக்கா? என்று கேட்க மாட்டேன். பிடித்திருந்ததால் தானே இந்தத் திருமணம் நிறைவேறி இருக்கு. அதுமட்டுமல்ல இனிப்பிடித்துத் தானே ஆக வேண்டும்" இளங்கோ இதமாகச்சிரித்தான்.

"உங்களை எனக்குப்பிடிச்சிருக்கு. உன்னை.. நீ.. என்று என்னை ஒருமையிலேயே உரிமையோடு அழைக்கலாம்." நாணத்துடன், கன்னத்தில் குழி விழ அவள் சிரித்தாள்.

"நான் கொடுத்து வைத்தவன். இப்படி ஒரு தேவதை எனக்கு மனைவியாவாள் என்று நான் கனவில் கூட நினைத்திருக்கவில்லை...."

"நானும் தான்..." அவளின் ரோஜாப் பூப்போன்ற கன்னங்கள் நளினமாகி, இன்னமும் செம்மை படர்ந்ததை அவன் ரசித்தான். துள்ளி விளையாடும் கண்களிலும் மருட்சி தெரிவதை அவதானித்தான். "பயப்படுகிறீரா?" என்று அவளை ஊடுருவியவாறு கேட்டான்.

இல்லை என்பது போலத் தலையசைத்தாள். அவளின் அழகான பிறை நுதலில் இரு புருவங்களுக்கிடையில் அழகிய வட்ட வடிவில் இடப்பட்டிருந்த குங்குமப் பொட்டு அவளுக்குப்புதிய ஒரு அழகைப் பளிச்சென வெளிக்காட்டுவது போல தெரிந்தது.

"இந்தப் பொட்டை இவ்வளவு வடிவாக வட்டமாக எப்படி வைத்தனீர்?" என்றான். இது என்ன கேள்வி என்று ஒருகணம் நினைத்தவள் தன்னுள் சிரித்துக்கொண்டாள்.

"உன்னைக் கோயிலில் பார்த்த அன்றே நீ தான் எனது மனைவி என்று முடிவு செய்துவிட்டேன்."

உண்மை தான். அன்று கோயிலில் வைத்துப் பெண்பார்த்தபோது சொல்லாமல் கொள்ளாமல் அவனது இதயத்தைத் துளையிட்டு வசந்தமாலா உள்ளே புகுந்து விட்டாள். அன்று அவளைப் பார்த்து பிரமித்தவன் இன்னும் அந்தப்பிரமிப்பு விலகாமல் இது கனவா, நனவா என்று புரியாத நிலையில் தடுமாறிக் கொண்டிருக்கிறான்.

இளங்கோ மட்டுமா? வசந்த மாலாவும் கூட என்றைக்கு அவனைப் பார்த்தாளோ, அன்று முதல் அவனை நினைத்து உருகும் பனித்துளி போலாகிவிட்டாள்.

இத்தனை நாளாய் அவனோடு கனவில் ஊர்வலம்... நினைவுகளிலும் தான். இதனால் கடந்த ஒரு மாதத்தில் எத்தனையோ இரவுகளில் தூக்கம் பறிபோனது. தினமும் ஒரு ஊர்வலம்...

*****

"என்ன மாலா, தள்ளியே நிற்கிறீர்? கிட்ட வாரும்.."



"ம்..ஹூம்.." தலையை இடமும் வலமுமாக அசைத்தாள்.

"கிட்ட வாடி... என் செல்லக்கிளி.."

"சீ.. போடா.."

"போடான்னா வாடான்னு தான் அர்த்தம்." அவன் நெருங்கினான். அவள் போடான்னு சொன்னாலும் அவன் வரவை ரசித்தாள். அருகே வந்து அவளை மென்மையாய் இழுத்து தன்னோடு அணைத்தான்.

"சீய்... விடடா.." செல்லச்சிணுங்கலாய் விலக முற்பட்டவளை மீண்டும் இறுக்கமாக அணைத்து, அவளது மென்மையை ரசித்து, உதட்டில் உதடு பதித்தான்.

சிணுங்கிக் கொண்டிருந்தவள் இப்போது அவனோடு சங்கமமாகி கின்னஸ் சாதனை நிறைவேற்றும் வெறியுடன் இதழ்களைத் தொடர்ந்து பதித்துக்கொண்டிருந்தாள்.

*****

கிறக்கமான சில இன்ப நினைவுகளில் சங்கமித்தவள், பின் கற்பனை என உணர்ந்து, வரும் மண நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

காத்திருந்து பூத்திருந்தவளுக்கு இன்று முதலிரவு.

இதோ இங்கு முதலுறவு.. நிஜ தரிசனமாகிறது.

முதல் உறவுக்காய் அச்சம், மடம், நாணம், பயிர்ப்புடன் காத்திருக்கிறாள். இளங்கோ இன்னும் உரையாடிய படி அவளது கைகளைத் தனது கையுள் வைத்து இறுகப்பற்றியபடி அவளது விருப்பு, வெறுப்புகள், அபிலாஷைகள் பற்றி எல்லாம் ஒவ்வொன்றாகக் கேட்டறிந்து கொண்டிருக்கிறான்.

இரவு நிசப்தமாகக் கரைந்துகொண்டிருந்தது. உடலிலே சோர்வும், கண்களிலே தூக்கக் கலக்கமும் எட்டிப் பார்க்கின்றன. இவன் ஆரம்பித்துவிடுவானோ என்று அஞ்சிக் கொண்டிருந்தவள், இப்போது என்ன இவன், இன்னமும் எதையும் ஆரம்பிக்கிறான் இல்லையே என்று நினைத்து பெருமூச்சு விடுகிறாள்.

"தூக்கம் வருகிறதா?" இளங்கோ கேட்டதும் மௌனத்தில் ஒரு பார்வை பார்த்தாள். அதன் அர்த்தம் அவனுக்குப்புரிந்தது. அவளை ஊடுருவி நோக்கிய போது, அவளது கண்களுக்குள் ஒரு கங்கையைக் கண்டதும் அவனது மனது குற்ற உணர்வினால் வலித்தது.

'என்னால் இயலாதா? என்னால் எதுவுமே இயலாதா?' மனதிலே உணர்வுகளும், உடலிலே உணர்வின் வெளிப்பாடுகளும், உறுத்தல்களும் இருந்ததால் தானே திருமணத்துக்கு உடன்பட்டான்.

ஆனால் இன்று...?

துடைத்து வைத்த குத்துவிளக்குப் போல் பளிச்சிடும் அழகுடன் இதோ அருகிலே ஒரு தேவதை வீற்றிருக்கிறாள். தன்னை அவனுக்கு முற்று முழுதாக அர்ப்பணம் செய்ய முழுமனதுடனும், அவாவுடனும் மனைவி என்ற உரிமையோடு காத்திருக்கிறாள்.

ஆனால் அவன்...?

"மாலா..."

"ம்...."

"என்னால் முடியலையே..."

(தொடரும்)

# இராவணன் இராட்சதனா?....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றுள் சீவகசிந்தாமணியும் வளையாபதியும் சமண காப்பியங்களாகவும், குண்டலகேசியும் மணிமேகலையும் பௌத்த காப்பியங்களாகவும், சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியமாகவும், பெரியபுராணம் சைவத்தைப் போற்றும் பெருநூலாகவும் திகழ்ந்தமையால் விஷ்ணு பக்தரான கம்பர் வைஷ்ணவர்கள் போற்றும் வால்மீகி இராமாயணத்தை தமிழில் எழுதவிரும்பினார்.

அவ்வாறு அவர் தமிழில் எழுதியபோது அதில் சில அம்சங்களை மாற்றியமைத்தும் சில அம்சங்களைச் சொல்லாமல் விட்டமையும் மிகப் பெரும்பாலான மக்கள் இன்று வரை அறிந்திராத செய்திதான்.

தண்டகாருண்யம் காட்டில் இராம இலட்சுமணர் சூர்ப்பனகையை அடித்து அனுப்பியதாக வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கும் போது கம்பரோ அவர்கள் சூர்ப்பனகையின் மூக்கையும் காதையும் வெட்டி (மூழியாக) அனுப்பியதாகச் சொல்லியிருப்பதில் எவ்வளவு மாறுபாடு?

இராவணன் சீதையைத் தொட்டால் சுட்டெரிக்கப்படுவான் என்று நம்பவைக்கப்பட்டாலும் அவன் சீதையை கடத்தியபோது அலக்காகத் தூக்கி தன் தோளிலிருத்திச் சென்றதாகத்தான் வால்மீகி இராமாயணம் கூறுகிறது.

ஆனால், கம்பரோ இராவணன் சீதையை தொடாமல் சீதை வாழ்ந்த குடிலுடன் நிலத்தைப் பெயர்த்தெடுத்து தன் கரத்தில் கொண்டு சென்றதாக தன் கதையில் கூறுகிறார். இதில் எத்தனை வேறுபாடு?

சில அறிஞர்கள் அந்நியன் ஒருவன் இன்னொருவரின் துணைவியை கைதொட்டு தூக்குவதென்பது தமிழ்ப்பண்புக்கு ஒவ்வாதது என்பதாலேயே கம்பர் அப்படி மாற்றியமைத்தார் என்று கூறுவர்.

ஆனால், இராவணன் சீதையைத் தொட்டால் அவன் சுட்டெரிக்கப்பட்டு விடுவான் என்ற மாயையை உணர்த்தவே கம்பர் அவ்வாறு பகன்றார். வேறல்ல!

இராவணன் இராட்சதனாதலால் அவனின் பலவலிமையின்நிமித்தம் அசாதாரண கருமங்களையும்கூட நொடிப்பொழுதில் செய்யவல்லான் என்பதை கதையின் ஆரம்பத்திலேயே புனைந்துரைக்க கம்பர் எத்தனித்திருப்பதும் இதனூடு புலனாகிறது!

வால்மீகி முனிவர் திராவிடர்களை எவ்வாறு இராட்சதர்களாக காண்பித்தாரோ அவ்வாறே கம்பரும் தனது கதையில் அச்சொட்டாக சித்திரிக்கிறார். தன் தமையனாகிய இராவணனின் அழைப்பையிட்டு அவன் முன் சென்ற தம்பியாகிய கும்பகர்ணன் இராவணனை வீழ்ந்து வணங்குவதை கம்பர் வர்ணித்திருக்கும் பாங்கு அலாதியானது. காண்க.

'நிலைகிடந்த நெடுமதிட் கோபுரத்து
அலைகிடந்த விலங்கைய ரண்ணலைக்
கொலைகிடந்த வேற்கும்பகருணனோர்
மலைகிடந்தது போல வணங்கினான்.'

கொலைத்தொழில் தங்கிய வேற்படையையுடைய கும்பகர்ணன் தன் அண்ணனை மலையொன்றுபடுத்தது போல் நிலத்தில் வீழ்ந்து வணங்கினான் என்கிறார் கம்பர் (அண்ணல் என்ற சொல் அண்ணன், அரசன், இறைவன் என்றெல்லாம் பொருள் பெறும்)

அவ்வகையில் கும்பகர்ணனை ஓர் மலையை ஒத்த மேனியுடையவனாக காண்பிக்கிறார் கம்பர்! போர்க்களத்திலே கும்பகர்ணனைக் கண்டு அதிசயித்த இராமன் கும்பகர்ணனின் வலது தோள் முதல் இடது தோள் வரை தொடர்ச்சியாகப் பார்ப்பதற்கு ஒரு முழுநாள் ஆயிற்று என்றும் கூறுகிறார். கம்பரின் இக் கூற்றைப் பார்க்கும் பொழுது போர்க்களம் எங்கேயிருந்தது என்ற கேள்வி பிறக்கிறது.

(வளரும்)

# மிஸ்டர் வேதாளம்



வழக்கமாக — ரஜனி ஸ்டைலில் விசுக்.. விசுக்கென்று விஜயம் செய்யும் வேதாளத்தார்.. அன்று மிகவும் சாதுவாக... தொய்ந்து... தளர்ந்து வந்தார். முகத்திலே சோகம் அப்பி இருந்தது. ரொம்பத்தூரம் அலைந்து — களைத்து வந்திருந்தார். கடற்கொந்தளிப்பின் அழிவுகளை பார்க்கச் சென்றிருக்கிறார் என்பது விளங்கியது.

அவரது நிலைமையைப் பார்த்தால் ஓவென்று அழுதுவிடுவார்போல் தெரிந்தது. எனவே, வந்தவரை கொஞ்சம் ஆசுவாசப் படுத்தியபின் கொண்டுவந்த விடயங்களை கொஞ்சம் கொஞ்சமாக கறந்தெடுத்தோம்.

“எப்படி இருக்கிறது நிலைமைகள்...? எங்கெல்லாம் சென்று வந்தீர்?” என்று கேட்டோம். கொட்டத் தொடங்கினார்.

“வடக்கு — கிழக்குப் பகுதிக்கெல்லாம் சென்றேன். கண்களால் பார்க்க முடியவில்லை. இப்படி ஒரு அழிவு இனிமேல் எப்போதும் வரக்கூடாது” என்றார்.

“ஆம்.... இலகுவில் எழுந்திருக்க முடியாத ஒரு பாரிய அடி.. தமிழருக்கு” என்றோம்.

“ஆம்... ஆனால், மீட்புப் பணிக்கான நடவடிக்கைகளை சுறுசுறுப்பாக விடுதலைப் புலிகள் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். இது பலருக்கும் கவலையைத்தந்திருக்கிறது.”

“ஏன்? அவர்கள்தான் ஒழுங்காக செய்வார்களே!”

“அதுதான் பலருடையதும் கவலை. இவ்வளவு அனர்த்தம் என்று கேள்விப்பட்டவுடனே... யாழ்நகரில் உள்ள பல்வேறு நிறுவனங்கள், நான் நீ என்று உதவிப் பணிகளில் ஈடுபட்டது என்னவோ உண்மைதான்.”

“பிறகென்ன..?”

“ஆனால், அதே நிறுவனங்களில் சில இதே அழிவை வைத்து கொஞ்சம் காசு பார்க்கலாம் என்று கணக்குப் பண்ணியிருக்கின்றன. ஆனால், விடுதலைப் புலிகள் இதற்கெல்லாம் வைத்து விட்டார்கள் ஆப்பு.”

“ஆப்பா! என்ன ஆப்பு..?”

“அதாவது, பலரும் பல பகுதிகளிருந்தும் பொருட்கள் — நிதிகள் என்று சேர்த்து.. அவைகளை கமுக்கிவிடும் சாத்தியம் தென்பட்டதை அடுத்து... உடனடியாக புனர்வாழ்வு செயலணிக்குழு ஒன்றை அமைத்தனர். யார் எவராக இருந்தாலும் அந்த செயலணிக் குழு ஊடாகவே உதவிப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவித்துவிட்டனர். இதனால் ஊடகங்கள் மூலம் உதவி புரிவதாக பந்தா பண்ணும் சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றமாகிவிட்டது. அதனால், ‘புலிகள் தங்களது ஆட்களுக்குத் தான் உதவி செய்வார்கள். நாங்களென்றால் எல்லோருக்கும் உதவி செய்வோம். எனவே, எங்களுக்குதனியாக இடங்களை பிரித்துத் தாருங்கள்’ என்று அரச அதிகாரிகளை நச்சரித்துக் கொண்டிருக்கின்றார்களாம்.”

“எரிகின்ற வீட்டில் கூரையை பிடுங்க முயற்சிக்கும் இவர்களை கட்டிவைத்து அடிக்க வேண்டும்” என்றோம் நாம்.

“வெள்ளப்பெருக்கு இடம்பெற்ற சில நிமிடங்களிலேயே படையினர் — பொது மக்கள், விடுதலைப் புலி உறுப்பினர்கள் எல்லோரும் அங்கே விரைந்து வந்துவிட்டார்கள். காயமடைந்த படையினரை விடுதலைப் புலிகள் தூக்க.. பொதுமக்களை படையினர் தூக்க.... அங்கேயும் தமது வேறுபாடுகளை காட்டாது எல்லோரும் ஒன்றாக இணைந்து செயற்பட்டது... பார்க்க சந்தோஷமாக இருந்தது. இந்த நிலை நிலைக்காதா என்ற ஏக்கத்தைத் தந்தது.”

“அப்படி என்றால் மனிதாபிமானம் அங்கே சிறப்பாக செயற்பட்டது என்கிறீர்...”

“ஆனால், சில இடங்களில் — குறிப்பாக முகமாலை — புளியங்குளம் பகுதிகளில் படையினரின் நடவடிக்கைகள் பலருக்கும் எரிச்சலை ஏற்படுத்தி இருக்கின்றன.”

“ஏன்.... என்ன செய்தார்களாம்?”

“வெள்ளத்தால் உறவுகளை இழந்த... காயப்பட்டவர்களைத் தேடி அழுது குழறியபடி வன்னியிலிருந்து வந்தவர்களை... படையினரின் புலனாய்வுத்துறையினர் மறித்துவைத்து வன்னிப் பகுதியில் கடல்கொந்தளிப்பால் புலிகளுக்கு என்ன சேதம்... யார்... யார் இறந்தது.. எத்தனை பேர் இறந்தனர் என்று துளைத்தெடுத்தார்களாம்...”

“அடடா.... இந்த அவலத்திலும் அவர்களின் சேட்டை மாறவில்லை பார்த்தீரா....”

“அவர்கள் தரப்பில் இழப்பு அதிகமாக இருப்பதால் புலிகள் தரப்பு இழப்புகள் எந்தளவு என்று அறிந்து தங்களைவிட கூட என்றால் ஒரு குரூர திருப்தியை பெறத்தான் இந்த முயற்சியாம்..”

“அப்படி என்றால் புலிகள் தரப்பில் சேதம் அதிகமாமோ?”

“இதுவரை தமது தரப்பில் சேதங்களை அறிவித்திருக்கிறார்கள்... அவர்களைப் பொறுத்தமட்டில் படையினரைபோல் கரையோரத்தில் தொடர்ச்சியான காவலரண்கள், முகாம்கள் என்பன இல்லை... அதனால் உயிரிழப்புக்கள் குறைவாம்....”

“அப்போ... படைத்தரப்பில் நிலை என்ன? இன்னும் ஒரு வருடத்துக்கு யுத்தம் என்ற பேச்சை எடுக்கவே முடியாத அளவுக்கு இழப்புக்கள் அதிகமோ..?”

“அதிகமாம்...”

“அப்படி என்றால்?”

“இரண்டு பட்டாலியன்கள் ஏறத்தாள சர்வ நாசமாம்... இது தவிர காலியில் ஒரு போர்க்கப்பல், திருகோணமலையில் கடல் கண்காணிப்பில் ஈடுபட்ட மூன்று கப்பல்கள், வேறு பல டோரா, மற்றும் கடற்கலங்கள் என்பன மூழ்கிவிட்டன. கடற்படை தளங்கள் பல சேதம். இது தவிர இராணுவத்தினரின் கரையோரப் பாதுகாப்பு அரண்கள் எல்லாம் காலி. ஆயுதங்கள் பல கோடி பெறுமதியானவை கடலிலே சங்கமம். எல்லாம் பார்க்கும் போது.. இனி இவைகளை எல்லாம் கட்டி எழுப்ப ஒரு வருடமாவது ஆகுமாம்...”

“அட அப்படியா...? பாரிய அழிவு தான்...”

“அது மட்டுமல்ல முக்கிய பணி ஒன்றும் தற்போது படையினரிடம் சேர்ந்துள்ளது. அதாவது, வெள்ளம் வந்து போனபின் படையினரின் ஆயுதங்கள் பல கடலிலே அள்ளுப்பட்டுச் செல்ல... மிகுதியாக ஏராளமானவை ஆங்காங்கே சிதறிக்கிடந்தனவாம். அவைகளில் பலவற்றை மீட்புப் பணிகளுக்காகச் சென்ற பொது மக்களில் பலர் லவட்டிக் கொண்டு போய்விட்டனராம். அவைகளை மீட்க வேண்டிய வேலையும் இப்போ படையினரின் கைகளில்” என்று சொல்லிவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் பறந்தார் வேதாளம்.

# ‘சுனாமி’.......

(02 ஆம்பக்கத் தொடர்ச்சி)

உயரத்திற்கு இவை எழும்புவதால் கடல் மட்டத்திலிருந்து 25 அடி உயரத்திற்குட்பட்ட இடங்கள் இந்த சுனாமி அலைகளால் பாதிக்கப்படுகின்றன.


இந்த அலைகளின் சக்தி அளப்பரியது. பல தொன் நிறையுள்ள பாறைகளையே 100 யார் தொலைவுக்கு உருட்டிச் செல்லும் சக்தி வாய்ந்தவை. கடலுக்குள் சங்கமிக்கும் ஆறுகள் சிற்றாறுகளின் ஓட்டத்திற்கு எதிராக எதிர்நீச்சல் போட்டு உள்புகக் கூடியவை சுனாமி அலைகள்.

பூமி அதிர்வு 6.5 ரைட்டர் அளவீட்டுக்கு அதிகமாக இருக்கும்போதே சுனாமி அலைகள் உயர்ந்து எழுந்து 10 — 20 அடி உயரத்தில் பாரிய வேகத்துடன் கரையை நோக்கி பாய்ந்து வரும்.

கடலில் சுனாமி அலைகள் வருவதை — அவற்றின் குணநலன்களால் கண்டறியப் படுவதில்லை. கண்டறிய விஞ்ஞானக் கருவிகளும் இல்லை. ஆனால் எந்த ஒரு மூலையில் ஒரு பூமி அதிர்வு நிகழ்ந்தால் ‘சுனாமி’ அலைகள் உருவாகும் என்று எதிர் பார்க்கமுடியும்.

சுனாமி அலைகளின் வேகத்துக்கு இல[...] கையில் நடந்த அனர்த்தம் ஒரு முன்மா[...] ரியாகிறது.

சுமாத்திரா தீவில் ஏற்பட்ட அதிர்வில்[...]




உருவாகின்றன என்பது ஆய்வாளரின் கணக்கீடாகும்.

### எவரும் ஓடித்தப்ப முடியாது

சுனாமி அலைகளிலிருந்து மனிதன் ஓடித் தப்ப முடியாது. மனிதனின் ஓட்ட வேகத்தை விஞ்சியது சுனாமி அலைகளின் வேகம். அலைகளின் அதிர்வு வேகத் தின் வித்தியாசத்தால் சுனாமி அலைகள் கரையை தொடமுன்னர் கடல் நீர் உள்வாங்கப்பட்டு கடல்தரை சில மீட்டர் தூரம் வெறும் தரையாக காட்சியளிப்பதுண்டு. இதனையடுத்து உள்வாங்கப்பட்ட கடல்நீர் அவ்வளவும் உருண்டு திரண்டு வாகிய சுனாமி இலங்கை வந்து கிழக்குக் கரையைத் தட்ட 2 மணி நேரம் பிடித்தது. மேற்கு கரைக்கு தெற்கால் சுற்றிவர மேலும் 2 மணிநேரம் பிடித்தது. இந்து சமுத்திரத்தை கடந்து சென்று இதே சுனாமி அலை ஆபிரிக்காவின் கிழக்கு பகுதியான சோமாலியா, கென்யா கரையோரப் பகுதிகளில் தன் கைவரிசையை காட்ட 24 மணி நேரம் எடுத்தது.

இலங்கை ஒரு அரண் போல் இருந்ததால் — மாலைதீவு, அலையின் தாக்கத்திலிருந்து தப்பியது என்கிறார்கள். இல்லாவிடில் இன்று மாலைதீவு என்றொரு நாடே இருந்திருக்காது.

# பேரழிவுடன் விடைபெற்ற 2004.........

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாவி உயிர்களுக்கு அடித்த சாவுமணியாகிவிட்டது.

சுமத்திரா கடலில் ஏற்பட்ட சில அதிர்வினால் எழும்பிய சுனாமி அலையினால் உருவான கடல் கொந்தளிப்பு, இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, மாலைதீவு, அந்தமான், நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றை கொடுமையான தாக்கத்திற்குள்ளாகிவிட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, ஆகிய மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களில் எண்பதுவீதமானவை அழிக்கப்பட்டுள்ளன. 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். 12 லட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாகிவிட்டனர். இந்த அனர்த்தங்களை ஏற்படுத்தியதும் 2004 ஆம் ஆண்டுதான்.

இந்த அனர்த்தங்களின் போது ஏற்பட்ட சில சம்பவங்களையும் தொட்டுக்காட்டாமல் இருக்க முடியவில்லை. 2003 ஆம் ஆண்டில் தென்பகுதியில் வெள்ள அனர்த்தமும், மண்சரிவும் ஏற்பட்ட போது வன்னியில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட பொருட்களை தாமே நேரடியாகக் கொண்டு சென்று விநியோகித்தார்கள். ஆனால், இன்று நடைபெற்றது என்ன? தலைநகரிலும், மலையகத்திலும் சேகரிக்கப்பட்ட பொருட்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போது ஹபரணையிலும், திருமலை கந்தளாய்ச் சந்தியிலும் வைத்து சூறையாடப்பட்டன. மற்றும் சில பொதிகள் தென்பகுதிக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. இது ஒரு மனிதாபிமானமற்ற செயலாகும்.

வழமையாகவே இராணுவத்தினரும், புலிகளும் மோதிக் கொள்பவர்கள், கிழக்கில் தமிழர்களும் முஸ்லிம்களும் பிரச்சினைப்படுவார்கள்.

ஆனால், இன்று நிலை அப்படியல்ல. இராணுவத்தினரும் புலிகளும் இணைந்து மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.


தமிழர்களும் முஸ்லிம்களும் கைகோர்த்த வண்ணம் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். ஒரே குடும்பமாக ஐக்கியமாகிவிட்டனர்.

இப்படி எதிர்பார்க்கமுடியாத பல சம்பவங்கள் 2004 ஆம் ஆண்டில் நிகழ்ந்துவிட்டன. சர்வதேச மட்டத்தில் பேரழிவுகளையும், சீரழிவுகளையும் ஏற்படுத்திய 2004 ஆம் ஆண்டு மறக்க முடியாத பல வடுக்களை ஏற்படுத்திவிட்டு ஓடி ஒளிந்து கொண்டது. நாளை நடப்பது எப்படியோ?

# ஷங்கர் – விக்ரமின் 'அந்நியன்'

ஷங்கரின் இயக்கத்தில் வெளிவர உள்ள புதிய படம் 'அந்நியன்'. படப்பிடிப்பு ஆரம்பித்த நாள் முதலே சினிமா வட்டாரத்திலும் ரசிகர்கள் மத்தியிலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டு வரும் படம் இது.

''பிதாமகனுக்குப் பிறகு இப்படத்தில் மிகவும் சிரத்தையுடன் நடித்து வருகிறேன். கண்டிப்பாக இப் படமும் எனக்கு தேசிய விருது வாங்கித்தரும்.'' என்கிறார் விக்ரம்.



படத்தில் ஒவ்வொரு காட்சியும் சிறப்பாக வரவேண்டும் என்பதற்காக அதிக நேரம் செலவிடுகிறார் ஷங்கர். முதலில் இப்படம் தீபாவளிக்கு வரும் என தெரிவிக்கப்பட்டது. பின் பொங்கல். இப்போது தமிழ்ப் புத்தாண்டு என்கிறார்கள். ஆனால், 'அந்நியன்' படப்பிடிப்பு மெதுவாக நடப்பதைப் பார்த்தால் தமிழ்ப் புத்தாண்டுக்கு வருவதும் சந்தேகமே என்கிறது கோலிவுட் வட்டாரம்.

பரபரப்பாகப் பேசப்படும் இப்படத்தின் கதையை அறிய ஆவலா? இதோ கதை:-

படத்தில் விக்ரமுக்கு இரட்டை வேடம் என விளம்பரப்படுத்தப்பட்டது. ஆனால், கதைப்படி ஒரே விக்ரம்தான். சாதுவாக, வக்கீலாக வருகிறார் விக்ரம். அவரது சிறிய குடும்பம். சதா அவரின் ஜோடி. இந்நிலையில் எதிர்பாராமல் நடைபெறும் ஒரு சம்பவத்தால் சிறையில் தள்ளப்படுகிறார். அங்கு போலீஸ் அதிகாரியாக வரும் நாசர் அவரை கொடுமைப்படுத்துகிறார். தனது குடும்பத்தையும் விக்ரம் இழக்கிறார். சிறையிலிருந்து வெளியே வரும் விக்ரம் தனது இந்நிலைக்கு காரணமானவர்களைப் பழிவாங்க முடிவு செய்கிறார். இப்போது சாது விக்ரம் வேறு மாதிரியாக மாறியிருக்கிறார்.



நீண்ட முடி, அழுக்குத் துணி, கையில் ஆயுதம் என - நாசர், சௌரப் ஷுக்லா, பிரகாஷ்ராஜ் என ஒவ்வொருவரையும் தேடித் தேடிக் கொல்கிறார்.

இதுவே படத்தின் கதை. கதைப்படி முதலில் கொஞ்சம் அதிக முடி, பின் நீண்ட முடி விடுகிறார் விக்ரம். இதற்காக முடிகளை வளர்த்திருக்கிறார். நீண்ட முடிகளுடன் நடிக்க வேண்டிய காட்சிகளில் 'விக்' வைத்துக் கொண்டு நடிக்கிறார் விக்ரம்.

நியூசிலாந்து, தென்காசி, புதுவை, உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பு நடத்தியிருக்கிறார்கள். சென்னையில் பல்வேறு இடங்களில் பெரும்பாலும் இரவு நேரங்களில் படப்பிடிப்பு நடத்தியுள்ளார் ஷங்கர்.

படத்தின் இசைக்காக ஷங்கரின் முதல் தெரிவு ஏ.ஆர்.ரஹ்மான்தான். ரஹ்மான் பிஸியாக இருந்ததால் ஹாரிஸ் ஜெயராஜை ஒப்பந்தம் செய்துவிட்டார் ஷங்கர்.

## விஜய்–ரம்பா நடனம்!

ரவிகிருஷ்ணா—நதீஷா இளம் காதலர்கள். இந்தக் காதலர்களைச் சேர்த்து வைக்க வாக்குறுதி தருகிறார் விஜய். ஆனால், இளம் காதல் ஜோடிகளைப் பிரிக்க சிலர் சதித்திட்டம் தீட்டுகிறார்கள். எதிரிகளின் திட்டத்தை முறியடிக்க கார் மூலமாக காதலர்களை பெங்களூருக்கு அழைத்துச் செல்கிறார் விஜய்.



எதிர்பாராத விதமாக காரில் பெட்ரோல் தீர்ந்துவிடுகிறது. அருகில் அழகான பெங்களூர் தாபா ஒன்று கண்ணுக்குத் தென்பட எதிரிகளிடமிருந்து தப்பிக்க, வேறு வழியின்றி அங்கு அனைவரும் செல்கின்றனர்.

இந்த நடன அரங்கில் ரம்பா அசத்தல் உடைகளுடன் கவர்ச்சியாக நடனமாட, அவருடன் விஜய்யும் போட்டி போட்டு நடனமாடுகிறார். இவர்களுடன் ரவிகிருஷ்ணா, நதீஷாவும் நடனம் ஆடினார்கள்.

இந்த பெங்களூர் தாபா பிரமாண்டமாக, கண்ணைக் கவரும் விதத்தில் இருக்க வேண்டும் என்று டைரக்டர் எஸ்.ஏ. சந்திரசேகரன் விரும்பியதால், அரங்கத்தை வடிவமைக்க அனுபவம் வாய்ந்த ஐம்பது பணியாளர்கள் வேலை செய்துள்ளார்கள்.

நவீன நியான் விளக்குகள், தரை விரிப்புகள், அலங்கார கண்ணாடித் தூண்கள், திடீர் திடீரென கண்ணைக் கவரும் ஸ்ட்ரோப் லைட்கள், இருட்டில் மிளிரும் பிளோரா சென்ட் விளக்குகள் என இந்த ஒரு பாடலுக்கு 25 லட்சத்துக்கு மேல் செலவிடப்பட்டிருந்தது.

படத்தில் ரவிகிருஷ்ணா—நதீஷா, விஜயகுமார், நாசர், ராஜன், பி.தேவ், 'பெப்சி' விஜயன், எம்.எஸ். பாஸ்கர், சீதா, நளினி ஆகியோருடன் முக்கிய கதாபாத்திரத்தில் விஜய் நடிக்கிறார்.

வேகமாக வளர்ந்து வரும் 'சுக்ரன்', டைரக்டர் எஸ்.ஏ. சந்திரசேகரரின் 60ஆவது படம். இசை விஜய் அன்டனி, ஒளிப்பதிவு சௌந்தரராஜன், சண்டை ஜாக்குவார் தங்கம்.

ஜே.எஸ்.பிலிம்ஸ் தயாரிக்கும் இந்தப்படத்தின் கதை—திரைக்கதை—தயாரிப்பு —டைரக்ஷன் எஸ்.ஏ. சந்திரசேகரன்.

## 'ஏய்' பட விமர்சனம்



வீடு வீடாய் பொருட்கள் விற்றுப் பிழைப்பவன் சக்திவேல். சண்டை, சச்சரவுகளை பார்த்தால் ஒதுங்குவான். தங்கை லட்சுமியை கலெக்டராக்க விரும்புகிறான்.

தபால் ஆபீசில் வேலை பார்க்கும் அஞ்சலி மீது சக்திவேலுக்கு காதல். அவள் யோசனைப்படி ஜிம் திறக்கிறான். அங்கு தாதா ராகவன் ஒருவனை விரட்டி வந்து வெட்டிக் கொல்கிறான். கொலையை நேரில் பார்த்தும் சாட்சி சொல்ல மறுக்கும் சக்திவேல் மீது மேல் அஞ்சலிக்கு கோபம். ஒரு கட்டத்தில் சக்திவேலின் தங்கை ராகவன் மீது ஆசைபட ஆவேசம். ராகவன் கூட்டத்தை துவம்சம் செய்கிறான் சக்திவேல். பிறகு பிளாஸ் பேக்கில்... கதை நகர்கிறது.

ராணுவ வீரனாக சக்திவேல், விடுமுறையை கழிக்க, நண்பன் மணி வீட்டுக்கு வரும் போது ரவுடி பொலிஸ் அதிகாரி ஈஸ்வர பாண்டியன் இளம்பெண்ணை கடத்த முயல தடுக்கிறான். இருவருக்கும் மோதல். பிறகு சக்திவேல் வாழ்க்கையில் மாற்றம்.

நண்பன் மணியுடன் மாறுவேடத்தில் லஞ்சம் வாங்கும் அதிகாரிகளை கடத்தி உதைத்து திருத்துகிறான். பள்ளிக்கூடம் எதிரில் இருக்கும் நாச்சியாரை கட்டு நொண்டியாக்கி விட்டு மணி, தங்கை லட்சுமியுடன் பழனி வந்து தங்குகிறான்.

சக்திவேலை பழிவாங்க நாச்சியார் பழனிக்கு வர ரவுடிகள் ஈஸ்வரபாண்டியன், ராகவன் ஆகியோரும் நாச்சியாருடன் சேர்ந்துகொள்ள கிளைமாக்ஸ்....

சக்திவேலாக சரத்குமார் முதல்பாதியில் அப்பாவி. மறுபாதியில் புயல். மணியிடமும் அவன் தங்கை லட்சுமியிடமும் அன்பை பொழிவது நெகிழ்ச்சி. நண்பன் கொல்லப்பட்டதும் ஆவேசப்படுவதில் அனல். அஞ்சலி காதலை பெற ஸ்டாம்புகளை வாங்கிக் குவிப்பது காமெடி.

பிரச்சினைகளை விட்டு ஒதுங்கும் அவர், தங்கை மீது ஆசைப்படும் ராகவன் கூட்டத்தை நொருக்குவது இடிமுழக்கம், கிளைமாக்ஸ் சண்டையில் அனல் பறத்துகிறார். ரவுடிகளை ஒவ்வொருத்தராய் குத்தி சாய்ப்பது திகில்.

அஞ்சலியாக வரும் நமீதா கவர்ச்சியில் தாராளம். குறைவான ஆடைகளில் இளசுகளை சூடேற்றுகிறார். அஞ்சலி, மஞ்சரி என தன்னை இரட்டையர்களாக்கி வடிவேலுவை கலாய்ப்பது தமாஷ்.

ராகவனாக வரும் அறிமுக வில்லன் வின்செண்ட் அசோகன் மிரள வைக்கிறார். (மறைந்த நடிகர் அசோகனின் மகன்) பல்லைக் கடித்து அரிவாளுடன் இவர் ஓடும் போது திக ... திக...

பொதுக்கூட்டத்தில் பேச்சாளரை தாக்குவது ... சரத்குமார் 'ஜிம்'முக்குள் புகுந்து ஒருவரை வெட்டிச் சாய்ப்பது... கல்லூரியில் ரித்திக்காவை அறைக்கதவுகளை பூட்டி மானபங்கம் செய்வது... சரத்குமாரை வெட்டி ஆற்றில் வீசுவது... குலைநடுங்கும் காட்சிகள்.

பெரிய தாதாக்களை தூக்கி சாப்பிடும் அசகாய வில்லனாக மிரட்டியுள்ளார்.

ஒரு பாட்டுக்கு மும்தாஜ் ஆடுகிறார். வடிவேலு காமெடியில் சிரிப்பலை.

சரத்குமாரின் நண்பனாக வரும் கலாபவன்மணி நட்பின் பிரதிபலிப்பாய் மின்னுகிறார். முடிவு சோகம்.

ஸ்ரீகாந்த்தேவாவின் இசை ஆட்டம்போட வைக்கிறது.

தைப்பூச விழாவில் நடக்கும் சண்டை ஆங்கிலப் படத்திற்கு இணை. ஏய்... விறு விறுப்பான படம்.

## 'ரவுடி' பார்த்திபன்

நடிகர் பார்த்திபன் 'ரவுடி' என்ற படத்தில் நடிக்கிறார். பட பூஜை வடபழனி பிரசாத் ஸ்டுடியோவில் நடந்த போது வழி நெடுக 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் வரிசையாக நிறுத்தப்பட்டு இருந்தனர்.

அவர்கள் கையில் 6 அடி உயர டம்மி கத்தி, வீச்சரிவாள், சைக்கிள் செயின், உருட்டுக்கட்டை போன்றவற்றை வைத்திருந்தனர். சில குழந்தைகள் மீசை, தாடி வைத்து லுங்கியை மடித்துக் கட்டி இருந்தனர். அருகில் மருக்கோப்பைகள் இருந்தன.

குழந்தைகளிடம் ஆயுதம் கொடுத்து வன்முறையை தூண்டுவது போல் பட பூஜையை நடத்தலாமா என்று பார்த்திபனிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:—

எனக்கு அது அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஸ்டுடியோவுக்குள் நுழைந்ததும் அவர்களைப் பார்த்ததும் அதிர்ந்தேன். எனக்கு தெரியாமல் இது நடந்துவிட்டது. டைரக்டரைத்தான் நீங்கள் கேட்கவேண்டும் என்று கூறினார்.

## வரப்போகும் சூரியனே

நிர்மலராஜன் வழங்க திவ்யஷேத்ரா பிலிம்ஸ் என்ற புதிய பட நிறுவனம் மிகப் பிரமாண்டமான முறையில் தயாரிக்கும் படம் ''வரப்போகும் சூரியனே''

இந்தப் படத்தில் திரி விக்ரம் என்ற புது முகம் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக பிரியாஞ்சனி என்ற புதுமுகம் அறிமுகமாகிறார்.

மற்றும் ரமேஷ் கன்னா, கூடு ராமமூர்த்தி, பிரசாத், சீதா, துரைபாண்டியன், சத்யப்பிரியா, வைதேகி, திவ்ய பாரதி, அஜெய் ரத்தினம், செல்லதுரை, ஜெகன், கோபி, சத்யப்பிரியா ஆகியோர் நடிக்கிறார்கள்.

பா.விஜய், சினேகன், கலைக்குமார், விஜய் சாகர் பாடல்களுக்கு தேவா இசையமைக்கிறார். பெப்ரவரி மாதம் படத்தைத் திரைக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளார்கள்.

## சினித் துளிகள்

ஆயுத எழுத்தில் மொட்டைத் தலையுடன் வந்த மாதவன் தம்பி படத்தில் பழைய 'ஹிப்பி' ஸ்டைலில் நடிக்கிறார்.

◆◆◆◆◆

'சந்திரமுகி' நாயகி நயன்தாரா பிரசாந்த் ஜோடியாக ஒரு படத்திலும் மாதவன் ஜோடியாக இன்னொரு படத்திலும் நடிக்க உள்ளார்.

◆◆◆◆◆

ஜெயம் ரவி நடிக்கும் 'மழை' படத்தை எஸ்.பி.பி.சரண் தனது மனைவி பிஜோயா பெயரில் தயாரிக்கிறார்.

◆◆◆◆◆

ஈஸ்வர் நாயகனாக நடிக்க 'தாய்மண்ணே வணக்கம்' என்ற படத்தை இயக்க உள்ளார் அயோத்தியா டைரக்டர் ஜெயப்பிரகாஷ்.

◆◆◆◆◆

சீதா, பானுப்பிரியா, ஐஸ்வர்யா மூவரும் 'அந்த நெனப்பு' என்ற படத்தில் நடிக்கிறார்கள்.

◆◆◆◆◆

நடிகை அசின் கிறிஸ்தவராக இருந்தாலும் படப்பிடிப்பு இல்லாதபோது மயிலை கபாலீஸ்வரர் கோயிலுக்கு சென்று வழிபடுகிறார்.

## விபசார விடுதியில் கவுண்டமணி!



நகரின் ஒதுக்குப்புறமான பகுதியில் அந்த விபசார விடுதியிருந்தது. அந்த வழியாக கவுண்டமணி போய் வரும் போது அவருக்குள் சபலம் ஏற்படும். ஆசையை அடக்க, அடக்க அவருக்குள் காமத்தீ கொளுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

உணர்ச்சியை அடக்கமுடியாமல் கவுண்டமணி, ஒருநாள் அந்த விபச்சார விடுதிக்குள் நுழைந்தார். விடுதித் தலைவியான அனுராதா வாயெல்லாம் பல்லாக அவரை வரவேற்றார்.

அழகிகளை அழைத்து வரிசையாக நிறுத்தி, இவர்களில் யார் வேண்டும்? என்று கேட்டார்.

கவுண்டமணி ஒரு அழகியை தெரிவு செய்தார். உடனே அவரிடம் அனுராதா பணம் கேட்டார்.

கவுண்டமணி ஸ்டைலாக தனது 'கிரெடிட் கார்டை' எடுத்து நீட்டினார். அடிஉதை இதெல்லாம் இங்கே செல்லாது. பணமா கொடுங்க என்றார் அனுராதா.

இது, உலகம் முழுவதும் செல்லும்ன்னு சொன்னாங்களே என்று கவுண்டமணி, அவருடன் வாக்குவாதம் செய்தார்.

பணம் இருந்தால் கொடு. இல்லைன்னா வெளியே போடா என்றபடி அனுராதா கவுண்டமணியை அடித்து உதைத்தார்.

மேற்கண்ட காட்சி, ஸ்ரீசெந்தூர் பிலிம்ஸ் தயாரிக்கும் 'காதல் திருடா' படத்துக்காக படமானது.

## கானின் அழைப்பை மறுத்த சியான்




ஏ.வி.எம். ஸ்டுடியோவில் நடைபெற்ற படப்பிடிப்பு இடைவேளையில் இந்தி பட இயக்குனர் ப்ரியதர்ஷனின் ஹீரோ சல்மான்கானும் அந்நியன் சியானும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்.

சல்மானுக்கு சியான் (விக்ரம்) மீது ஒரு வாஞ்சை. இவரின் 'சேது' படத்தின் ரீமேக்கான 'தேரே நாம்' சல்மான் கானுக்கு இந்தியில் ஒரு பிரேக் ஏற்படுத்திக் கொடுத்த படம். அந்த நன்றியில் சல்மான்கான் பாலிவுட்டுக்கு வரும்படி விக்ரமை கேட்டிருக்கிறார். ஏற்கனவே அமிதாப்புடன் இந்தியில் நடிக்க வந்த வாய்ப்பிற்கே நோ சொன்னவர் இந்த முறையும் நாகரிகமாக தலையசைத்திருக்கிறார்.

எனக்குத் தமிழ் போதும். இங்கேயே நான் சாதிக்கவேண்டியது நிறைய இருக்கிறது என்று மறுத்துவிட்டார் சியான்.

பொதுசன நூலகம்

# முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட்வீரர் உசைன் ஹிந்தி நடிகை அம்ரிதாவுடன் காதல்?


-உசைன்-

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் நசீர் உசைன். இவரது குடும்பத்தினர் சென்னையில் வசித்தவர்கள். பின்னர் அவர்கள் அனைவரும் இங்கிலாந்தில் குடியேறிவிட்டனர். திருமணமாகி குழந்தைகளும் நசீருக்கு இருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் நடந்த கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ள வந்தபோதுகூட நசீர் தனது உறவினர்களைச் சந்தித்து பேசி மகிழ்ந்தார்.

இந்த நிலையில் நசீருக்கும், ஹிந்தி நடிகை அம்ரிதா அரோராவுக்குமிடையே காதல் மலர்ந்துள்ளதாகவும் இருவரும் திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் தகவல்கள் வெளியானது. மேலும் அம்ரிதா சமீபத்தில் லண்டன் சென்றிருந்தார் என்றும் அங்கு நசீருடன் தங்கி இருந்தார் என்றும் கூறப்பட்டது. இது தவிர இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் பயிற்சி செய்யும் இடத்துக்கும் அம்ரிதா சென்று நசீர் மற்றும் பிற வீரர்களுடன் அரட்டை அடித்தார் என்றும் கிசுகிசுக்கப்பட்டது.

கிரிக்கெட் வட்டாரத்திலும், ஹிந்தி சினிமா வட்டாரத்திலும் இது பரபரப்பை ஏற்படுத்தியது. இது குறித்து அம்ரிதா அவராகவே முன் வந்து சில தகவல்களை வெளியிட்டு இருக்கிறார். இது குறித்து அவர் கூறியதாவது:—

"நசீரை நான் சந்தித்ததே இல்லை. அவர் திருமணமானவர். குழந்தைகளும் அவருக்கு இருக்கிறார்கள். என்னை ஏன் திருமணமான ஒருவருடன் இணைத்துப் பேசுகிறார்கள் என்றுதான் தெரியவில்லை. நான் யாராவது ஒருவருடன் பழகும் போது உடனே அதை இன்னொருவருடன் சம்பந்தப்படுத்திக்கூறுவது தான் வேதனையாக இருக்கிறது.

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் உஸ்மான் என்பவருடன் தான் எனக்கு பழக்கம் உண்டு. லண்டன் சென்றிருந்த போது அவருடன் தான் பேசிப்பழகினேன். அதுவும் நட்பு ரீதியில்தான் இந்த சந்திப்பும் நடந்தது. அதைத் தான் சிலர் தவறாக புரிந்து கொண்டு ஆளை மாற்றி கிசுகிசுத்து விட்டனர். எனது காதலரை விட்டுப் பிரிந்த பிறகு இப்படி பல 'கதைகளை என்னைப்பற்றி கிளப்பி விடுகிறார்கள்" என்று கூறினார் அம்ரிதா.


-அம்ரிதா-

# டென்டுல்கருக்கு கவாஸ்கரின் வித்தியாசமான பரிசு



இந்திய கிரிக்கெட் அணியின் ரன் குவிப்பு எந்திரம் என்று புகழப்படுபவர் சச்சின் டெண்டுல்கர். சமீப காலமாக துடுப்பாட்டத்தில் தடுமாறி வந்த சச்சின் பங்களாதேஷிற்கு எதிரான போட்டியில் இரட்டைச் சதம் அடித்ததுடன் அதிக சதம் அடித்த இந்தியர் என்ற புதிய சாதனையையும் நிகழ்த்தினார்.

இதற்கு முன்பு வரை இந்தச் சாதனைக்கு கவாஸ்கர் சொந்தக்காரராக இருந்தார். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறும் போது கவாஸ்கர் 34 சதங்கள் அடித்திருந்தார். அதன் பிறகு அவர் லண்டனில் உள்ள சுவாமி நாராயண கோவிலுக்கு சென்றிருந்த போது அங்குள்ள கோவில் குருக்களிடம் பேசிக் கொண்டிருந்த போது தனது 34 சதங்கள் சாதனையை ஒரு இந்தியர் முறியடித்தால் மிகவும் சந்தோஷப்படுவேன் என்று கூறினார்.

அவரது விருப்பப்படியே அவரது 34 சதங்கள் சாதனையை இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமான டெண்டுல்கர் முறியடித்தார்.

இதைத் தொடர்ந்து டெண்டுல்கருக்கு ஒரு வித்தியாசமான பரிசை அளித்துள்ளார் கவாஸ்கர். அது ஒவ்வொரு சதத்துக்கும் ஒரு ஷாம்பெயின் மதுபோத்தல். மொத்தம் 34 ஷாம்பெயின் போத்தல்களை டெண்டுல்கரின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார் கவாஸ்கர். இந்த நூதன பரிசு டெண்டுல்கரின் மனைவி அஞ்சலியை வியப்பில் ஆழ்த்தியது.

# ஷெனாயா செய்திகள்

(ஷெனாயா)

## சூனியக்காரியிடம் குறிகேட்ட ருமேனிய கால்பந்து அணி


-மெர்சிட்கோ-

ருமேனியா நாட்டில் 'யூனிவர்சிட்டி டர்ட்டி கிளைவோவா' என்ற கால்பந்து கழக அணி உள்ளது. இந்த கழக அணி லீக் போட்டியில் 16 ஆவது இடத்தில் உள்ளது.

இந்த அணி விளையாடுவதை பார்க்கும் போது இன்னும் மோசமான சூழ்நிலையை எட்டலாம் என்று தெரிகிறது. இந்த மோசமான நிலைக்கு காரணம் என்ன? அந்த அணி வீரர்களிடமோ, பயிற்சியாளர்களிடமோ யாரும் கேட்கவில்லை. கேட்டது வேறு யாரிடம் தெரியுமா? ஒரு சூனியக்காரியிடம்.

அந்த சூனியக்காரியின் பெயர் மெர்சிட்கோ.

"கவலைப்படாதீங்க யாரும் உங்கள் அணியை சபிக்கலை. கெட்ட நேரத்தினால் தான் இப்படி நடக்கிறது. அடுத்த சாம்பியன் போட்டியில் உங்கள் அணி வென்று சாம்பியன் ஆகிவிடும். இந்த கெட்ட நேரம் தற்காலிகமானதுதான்" என்று தெரிவித்துள்ளார் அந்த சூனியக்காரி.

# பிரெட் லீயின் நிலைமை பரிதாபம் 'ஏ' அணிக்கு திருப்பி அனுப்பப்பட்டார்

அதிவேகப் பந்துவீச்சாளர் பிரெட் லீயின் நிலைமை பரிதாபமாக மாறிவிட்டது. அவுஸ்திரேலிய 'ஏ' அணிக்கு அவர் அனுப்பப்பட்டுவிட்டார். அவுஸ்திரேலிய கிரிக்கெட்டில் வேகப்பந்துவீச்சாளர்கள் கிளென் மெக்ராத், ஜேசன் கிலெஸ்பி, மைக்கல் கஸ்பரோவிக்ஸ் ஆகியோர் தூள் கிளப்புகின்றனர். இவர்களை மீறி பிரெட் லீ அணியில் நுழையமுடியவில்லை.



சொயிப் அக்தருக்குப் பிறகு, உலகின் இரண்டாவது அதிவேகப்பந்து வீச்சாளரான பிரெட் லீ ஏழு டெஸ்ட் ஆட்டங்களில் 12 ஆவது வீரராகவே உட்கார்ந்திருக்கிறார். இப்படியே விட்டால், அவருக்கு ஆட்டமே மறந்துவிடும் என்று நினைத்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் 'ஏ' அணியில் பிரெட் லீயை சேர்த்திருக்கிறது. மேற்கிந்தியத் தீவுகள் (ஜனவரி 8 மற்றும் 9), பாகிஸ்தான் (ஜனவரி 12) அணிகளுக்கெதிராக அவுஸ்திரேலிய 'ஏ' அணி மூன்று ஒருநாள் ஆட்டங்களில் விளையாடுகிறது. இந்த அணியில் பிரெட் லீ சேர்க்கப்பட்டுள்ளார். இதன் மூலம் அவர் கொஞ்சம் பயிற்சி எடுத்துக் கொள்ளமுடியும் என்கிறது அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம்.

மெக்ராத் கிலெஸ்பி, கஸ்பரோவிக்ஸ் இவர்களில் யாருக்காவது காயம் ஏற்பட்டாலே பிரெட்லீக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

# இராணுவ வீரர்களுக்கு டேவிட் பெக்காம் வாழ்த்து

நாட்டுமக்களுக்கு, இராணுவ வீரர்களுக்கு பிரதமர், அதிபர்கள்தான் வாழ்த்துச் சொல்லுவது வழக்கம். ஆனால், ஒரு விளையாட்டு வீரர் வாழ்த்துச் சொல்லும் அளவிற்கு அந்த நாட்டில் கால்பந்து மோகம் அதிகமாக உள்ளது.

ஈராக்கில், அமெரிக்கப் படையினருடன் இங்கிலாந்து இராணுவ வீரர்களும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அங்குள்ள வீரர்களுக்கு பிரபல கால்பந்து வீரர் டேவிட் பெக்காம் கிறிஸ்துமஸ் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் பிரதமர், அதிபர்களின் புகழைப் போல் பெக்காமின் புகழும் இங்கிலாந்து நாட்டில் பரவி உள்ளது என்பதைத் தானே இது காட்டுகிறது.



இங்கிலாந்து — தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே டெஸ்ட் தொடர் தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதற்காக இங்கிலாந்து வீரர் திரஸ்கொத்திக் உடற்பயிற்சிக் கூடத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். அதுசரி.... அவருக்குப் பக்கத்தில் இருக்கிறவர் யார் என்கிறீர்களா?... அது கண்ணாடியில் தெரியும் அவரது விம்பம் என உங்களுக்குத் தெரியாதா என்ன?

## சொற்சிலம்பம் போட்டி இல.141

சொற்சிலம்பம் 141 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஜனவரி 09ஆம் திகதி ஆகும். விடைகள் ஜனவரி 16ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 23ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.139க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.141

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | ■ | 13 | | |
| 14 | | | ■ | 15 | | | ■ |
| 16 | | | 17 | ■ | | ■ | 18 |
| | ■ | 19 | | 20 | ■ | 21 | |
| ■ | 22 | | ■ | 23 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.139

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 உ | 2 ப | 3 வா | 4 ச | ம் | ■ | 5 ச | 6 ப |
| 7 ப | ட் | ட | ம் | ■ | 8 கோ | ■ | தி |
| 9 கா | டு | ■ | 10 ப | 11 க | ல | வ | ன் |
| ரி | ■ | 12 ச | ந் | த | ம் | ■ | மூ |
| ■ | 13 மொ | த் | த | ம் | ■ | 14 உ | ன் |
| 15 அ | ந் | த | ம் | ■ | 16 மி | ட | று |
| 17 ச | த | ம் | ■ | 18 பு | த | ம் | ■ |
| 19 தி | ன் | ■ | 20 க | ரு | ம் | பு | லி |

## சொற்சிலம்பம் போட்டி இல.141

**இடமிருந்து வலம்**

1. கர்வம்/ செருக்கு.
6. பிழை அல்ல.
7. சமய.
8. மென் அல்ல.
9. கைப்பிடி.
11. புலவன்/ கவிஞன்.
13. உசத்தி/ உயர்ந்த தரம்.
14. நஞ்சு.
15. ஒரு வசனத்தில் நிபந்தனை வைக்கும் சொல்.
16. கணவன்– மனைவி.
19. உபகரணம்.
21. தாயின் சகோதரன்.
22. தரையிலிருந்து விண்ணுக்குச் செலுத்தும் ஏவுகணை.
23. பிசாசு/ பேய்.

**மேலிருந்து கீழ்**

1. நிகழக் கூடாத சம்பவம்.
2. எரிந்தால் மிஞ்சுவது.
3. ஏழை/எளியவன்/ அறிவிலான்/ அப்பாவி.
4. அழித்தல்.
5. எப்போதும்/ எந்நாளும்.
8. காய்ந்து வருவது.
9. ஒரு பிரபந்த வகை.
10. ஈரெட்டு.
12. (தேர் இழுக்கும்) கயிறு.
17. செல்வம்.
18. செல்வச் சிறப்பு உடையவன்/ பிரபு.
20. சக்தியின் வெளிப்பாட்டு முறைகளுள் ஒன்று.
21. தாய்.

## சொற்சிலம்பம்-138 பரிசு பெறுவோர்.

1. திருமதி. பீ.எஸ்.ராணி,
   பொது நூலகம்,
   சங்கானை.
2. திருமதி.ரபீக்கா முஹமது யூசுப் ஜான்,
   31, கல்லூரி வீதி,
   திருகோணமலை–3100.
3. செல்வி. சி.பவானி,
   இல. 48/15,
   பண்டாரநாயக்க டவுண்,
   அட்டன்.

**பாராட்டுப் பெறுவோர்**

1. வி. கைலைசாந்,
   இல.76,
   புளியங்குளம்,
   திருகோணமலை.
2. திருமதி. றெஜினா செந்தூரன்,
   364/4, மத்திய வீதி,
   திருகோணமலை.
3. திருமதிவை.டி. மூர்த்தி,
   ஹெவ்லொக் றோட்,
   கொழும்பு–06.
4. பா.ஜெயபால ராஜா,
   பொலிஸ் அலுவலகம்
   வவுனியா.
5. எஸ்.சிற்றம்பலம்,
   இல–07, பிரதான வீதி,
   கொட்டகலை.
6. தெ. டிலோஜன்,
   127, மத்திய வீதி,
   திருகோணமலை.
7. எஸ்.தர்சினி,
   மயிலணி,
   சுன்னாகம்.
8. எஸ்.ஜெயச்சந்திர ராசா,
   இராசேந்திரம் குளம்,
   வவுனியா.
9. சு.மகாலட்சுமி,
   புதுக்குடியிருப்பு,
   முல்லைத்தீவு.
10. ஏ.எச்.எம். ரம்ழான்,
    160, காமினிபுர,
    அட்டன்.

---

## இவ்வார 'ராசிபலன்' 03–01–2005 , 09 –01–2005

பொ. சந்திரன்

# ராசி பலன்

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | | | |
| | | | |
| புதன் சூரியன் | செவ் சுக்கிரன் | கேது | குரு |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | அனுஷம் | சனி |
| சுக்கிரன் | கேட்டை/மூலம்/புதன்+கேது | |
| புதன் | மூலம் | கேது |
| சூரியன் | பூராடம் | சுக்கிரன் |
| குரு | சித்திரை | செவ்வாய் |
| சனி | புனர்பூசம் | குரு |

மார்கழி19 முதல் 25 வரை

சந்திரன் கன்னி முதல் தனு வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் எட்டில் ஆட்சியாக இருப்பது பிரயோசனமில்லை. மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் செயல்திறன் குறைந்த நிலைதான். எடுத்த முயற்சி தாமதமாகும். மன அமைதி இருக்காது. ராசியில் ராகு இருப்பது தோசமான நிலை. (2,7) உரிய சுக்கிரன் எட்டில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. சொல்லுக்கு மதிப்பு இருக்கும். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வாகன சுகம் உண்டு. தாய் நலம். இனபந்துக்கள் விசுவாசமாக இருப்பர். (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். தொழில்துறை முன்னேறும். கணிசமான லாபம் உண்டு. லாபமும் நல்ல முறையில் பயன்படுத்தலாம். குரு 6 இல் மறைவது குறை. நல்ல பல வாய்ப்பு வீணாகலாம்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 7இல் இருப்பது கூடாது. ஆனால் ஆரம்பத்தில் புதனின் நட்சத்திரத்திலும் அதனைத் தொடர்ந்து கேதுவின் நட்சத்திரத்திலும் இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5) உரிய புதன் 8 இல் (எட்டில்) இருப்பது கூடாது. கையில் பணம்இருக்காது. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது. குழந்தைகளின் செயல்பாடுதிருப்தி தராது. நாலுக்குரிய சூரியன் எட்டில் மேலும் சனியின் பார்வை பெறுவதால் வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் கூடாது. (7,12) உரிய செவ்வாய் 7 இல் இருப்பது தோசம், திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் குறையலாம். (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. தொழில் துறை பாதிக்க வாய்ப்பு உண்டு.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 7 இல் இருப்பது கூடாது. மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் கூடாத காலம் ராசியில் சனி இருப்பதும் மன அமைதி இருக்காது. இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு நாலாம் வீட்டில் இருப்பது கேந்திராதிபத்திய தோசம் உண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (8,9) உரிய சனி ராசியில் இருப்பது பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. அதிஷ்டம் இருக்காது. (6,11) உரிய செவ்வாய் 6 இல் ஆட்சியாக இருப்பது நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் கன்னி முதல் தனுவரை சஞ்சரிப்பது வார பிற்பகுதியில் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். இரண்டுக்கு உரிய சூரியன் ஆறில் இருப்பதால் கையில் பணம்இருக்கும். சொன்ன சொல்லை காப்பாற்ற முடியும். அறுசுவை உணவு உண்ண வாய்ப்புள்ளது. (4,11) உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பதால் தாய் நலம், வாகன சுகம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்லது. (5,10) உரிய செவ்வாய் ஐந்தில் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகள் சோர்வர். (7,8) உரிய சனி 12 இல் மறைவது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்ப உறவு பாதிக்கலாம். மகிழ்ச்சி இருக்காது. குருவும் மறைவதால் ஆறுதல் இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் ஐந்தில் இருப்பது கூடாது. எடுத்த முயற்சி தடைப்படலாம். மன அமைதி பாதிக்கலாம். (2,11) உரிய புதன் ஐந்தில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரத்துக்கு நல்லது. நண்பர்கள் உதவுவர். (3,10) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் நாலில் இருப்பது தோசமான நிலை. வாகன சுகம் இருக்காது. பெற்றோருக்கு போதாத காலம். (6,7) உரிய சனி 11 இல் இருப்பது மிகச் சிறப்பானது. திருமணபலன் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர். திருடர் பயம் இருக்காது.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் நாலில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது பாதகம் இல்லை. எடுத்த முயற்சி தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (2,9) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. கையில் பணம்இருக்கும். பிதாவுக்கு நல்லது. அதிஷ்டம் இருக்கும். (4,7) உரிய குரு ராசியில் இருப்பது கேந்திராதிபத்திய தோசம் உண்டு. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்லபலன் இல்லை. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். மன அமைதி பாதிக்கலாம். (5,6) உரிய சனி10இல் இருப்பது உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவிலகும். திருடர் பயம் இருக்காது. குழந்தைகளைப் பராமரிப்போர் அவதானமாக இருக்க வேண்டும். ராசியில் குரு இருப்பது சோதனையான காலம்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. மேலும் ஆரம்பத்தில் புதனின் நட்சத்திரத்திலும் பின்பு கேதுவின் நட்சத்திரத்திலும் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,7) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோசமான நிலை. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். 7 இல் ராகு இருப்பது குடம்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9ல் இருப்பது தீய பலனைக் கொடுக்கலாம். மாதாவுக்கு கூடாது. குழந்தைகளின் செயற்பாடு திருப்தி தராது. வாகன சுகம் இருக்காது. பத்தாம் இடம் சுத்தமாக இருப்பது தொழில் துறையில் பிரச்சினை வர வாய்ப்பு இல்லை. (3,6) உரிய குரு மறைவது பகைவிலகும். இளைய சகோதரத்துக்கு கூடாது.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது தோசமான நிலையாயினும் ராசிக்கு ஆதிபத்தியம்பெறுவதால் அரைப்பங்கு நன்மை செய்வார். சனியின் நட்சத்திரத்தில் இருப்பது பலன் குறையலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 8 இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. மாதாவுக்கும் நல்ல பலன் இல்லை. இளைய சகோதரத்துக்கு கூடாது. (7,12) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழிலுக்கு உரிய சூரியன் இரண்டில் இருப்பது கூடாது. தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு பத்தில் இருப்பது கேந்திராதிபத்திய தோசம் உண்டு. ஆனால், செவ்வாயின் சாரத்தில் இருப்பது பறவாயில்லை. எடுத்த முயற்சி தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் கூடாத காலம். (2,3) உரிய சனி 7இல் இருப்பது கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (7,10) உரிய புதன் ராசியில் தனியாக இருப்பின் பலன் செய்யாது. ஆனால், சூரியனுடன் கூடி இருப்பதால் நல்ல பலனை செய்யும் திருமண வாய்ப்பு உண்டு. ஆனல் 7 இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. அபிப்பிராய பேதம் நிலவும். தொழில்துறை முன்னேறும். மேலும் 9க்குரிய சூரியன் ராசியில் இருப்பது பிதாவுக்கு நல்ல பலன் உண்டு. அதிஷ்டம் உண்டு.

**மகரம்: உத்தரடாம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது சிறப்பானது. மேலும் குருவின் சாரத்தில் இருப்பது நல்ல பலன் செய்யும். எடுத்த முயற்சி நல்ல பலனைத் தரும். கையில் பணம் இருக்கும். சொன்ன சொல்லுக்கு மதிப்பு இருக்கும். சென்றஇடம் எல்லாம் சிறப்பு இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 11இல் ஆட்சியாக இருப்பதால் வாகன சுகம் உண்டு. தாய்க்கு நல்ல பலன் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய சுக்கிரன் 11 இல் இருப்பது தொழில்துறை முன்னேறும். குழந்தைகள் பல வழிகளிலும் முன்னேறுவர். பூர்வீக சொத்து சேரும். 7 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. 9 இல் குரு இருப்பது சிறப்பானது. அதிஷ்டம் உண்டு. நல்ல பலனைச் செய்வார்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. ஆனால், குருவின் நட்சத்திரத்தில் இருப்பதால் ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். சயன சுகம் இருக்காது. (2,11) உரிய குரு, எட்டில் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களால் தொல்லை வரலாம். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (4,9) உரிய சுக்கிரன் 10இல் இருப்பது பெற்றோருக்கும் கூடாது. வாகன சுகம் இருக்காது. அதிஷ்டம் இருக்காது. (3,10) உரிய செவ்வாய் 10இல் ஆட்சியாக இருப்பதால் தொழிலில் லாபமும் இல்லை, நஸ்டமும் இல்லை. 7க்குரிய சூரியன் 11 இல் இருப்பது திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். குரு மறைவது ஆறுதல் குறைந்த வாரம்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது ஆனால், கேந்திராதிபத்திய தோசம் உண்டு. செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. (2,9) உரிய செவ்வாய்9 இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்ல பலன் இல்லை. அதிஸ்டம் இருக்காது. (4,7) உரிய புதன் 10இல் இருப்பது சிறப்பு இல்லை. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. திருமண பலன் பாதிக்கலாம். ராசியை சனி பார்ப்பதால் ஏற்படும் தோசம் குருபார்வையால் நிவர்த்தியாகும். 6க்குரிய சூரியன் 10இல் இருப்பதால் பகைவிலகும். உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

# மாயமாய் மறைந்த மாணவிகள்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்




1978ஆம் ஆண்டு. நவம்பர் மாதம் 15ஆம் திகதி காலை. அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் அமைந்துள்ள பெண்கள் தங்கும் விடுதி ஒன்றில் சனக்கூட்டம் நிறைந்து காணப்பட்டது.

அங்கு தங்கியிருந்த மேரி என்ற இளம் பெண் முன்னிரவு கொலைசெய்யப்பட்டு விடுதியின் முன்பாக சடலமாகப் போடப் பட்டிருந்தாள்.

தகவல் அறிந்து கொலிஸார் விரைந்து வந் தனர். உடலை வைத்திய பரிசோதனைக்கு அனுப்பிவிடடு விசாரணையை மேற்கொண் டனர்.

மேரி கடந்த இரண்டு வருடங்களாக அந்த விடுதியில் தங்கியிருந்தாள். வேலைக்குப் போய் வந்தாள். அது வேலைக்குப் போகும் பெண்கள் தங்கும் விடுதி. மேரிக்கு எதிரி யென எவரும் கிடையாது. மேரியுடன் படித்த மூன்று தோழிகளும் அங்கேதான் தங்கியிருந் தனர்.

சம்பவதினம் வேலைக்குச் சென்ற மேரி சற்று தாமதமாகத்தான் வந்தாள். நள்ளிரவில் அவள் மாயமாக மறைந்து விட்டாள். எல்லா இடங்களிலும் தேடியும் தகவல் இல்லை. காலையில் பிணமாகத்தான் கண்டோம் என மேரியின் தோழிகள் கூறினர்.

மேரியின் உடல் முழுவதும் அசிட் வீசப் பட்டு இருந்தது. அவளுடன் மிகவும் கோப மாக இருந்த ஒருவரே இக்கொலையைச் செய்திருக்க வேண்டும் என பொலிஸார் ஊகித்தனர். இரகசிய விசாரணை இடம்பெறத் தொடங்கியது.

******

ஒரு நாள் மாலை ஜெக்வினின் தொலை பேசி அலறியது.

''ஹலோ, சேர் நான் பீற்றர்''

''என்ன விடயம் சொல்லு?.''

''சேர் ஒரு சந்தோசமான செய்தி. நீங்க தேடிக்கொண்டிருக்கின்ற உங்கட காதலி பிரீசியா இருக்கிற இடத்தை நான் கண்டு பிடிச்சிட்டேன்.''

''என்ன சொல்ற?''

''ஆமாம் சேர், சிட்னியில் உள்ள ஒரு பெண்கள் விடுதியில்தான் அவள் தங்கியி ருக்கிறாள்.''

மறுநாள் காலை ஜெக்வின் பீற்றரையும் அழைத்துக்கொண்டு அந்த விடுதிக்குச் சென்றான். அங்கே பிரீசியா இருந்தாள். பிரீ சியாவைத் தன்னோடு வருமாறு அவன் அழைத்தான். அவள் மறுத்துவிட்டாள். இதனால் அவளை பலவந்தமாக இழுத்துச் செல்ல முயன்றான். அங்குள்ளவர்கள் ஒன்று கூடித் தடுத்துவிட்டனர். இதனால் அவன் ஏமாற்றத்து டனும், கோபத்துடனும் திரும்பிச் சென்றான்.

பிரீசியாவும் ஜெக்வினும் பல வருடங்க ளாகக் காதலித்து வந்தனர். ஜெக்வீனின் தகாத நடத்தை காரணமாக அவள் அவனை விட்டுப் பிரிந்துவிட்டாள். ஆனால், ஜெக்வின் அவளை அடைய வேண்டும் என்ற ஆர்வத் தில் அவளைத் தேடித்திரிந்தான்.

இச்சம்பவம் இடம்பெற்று ஒரு மாதம் கழித்து ஒரு நாள் இரவு வழமைபோல் பிரீ சியா வேலைவிட்டு ஸ்கூட்டரில் வந்து கொண்டிருந்தாள். அவள் வந்து கொண்டி ருந்த வீதியில் வேறு எவரது நடமாட்டமும் இல்லை. மின்விளக்குகளும் ஆங்காங்கே எரிந்துகொண்டிருந்தன. அவளது கெட்ட நேரம் ஸ்கூட்டரில் பெற்றோல் முடிந்துவிட் டது. அவள் மிகவும் அச்சமடையத் தொடங் கினாள். என்ன செய்வது என யோசித்துக் கொண்டிருந்த சமயம் அவளுக்குப் பின்னால் ஏதோவொரு சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினாள். ஏதும் தென்படவில்லை.

மெதுவாக இறங்கி ஸ்கூட்டரைத் தள்ளிக் கொண்டு நடந்தாள். அப்போது அவளின் பின்னால் யாரோ நடந்துவருவது போன்ற சத்தம் கேட்டது. திரும்பினாள் எவரும் இல்லை. மீண்டும் நடக்கத் தொடங்கினாள்




மீண்டும் அதே சத்தம் கேட்டது.

அவளது உடம்பு நடுங்கத் தொடங்கியது. பயம் அவளை ஆக்கிரமிக்க ஸ்கூட்டரையும் விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தாள். இருந்தும் அவளால் தப்பமுடியவில்லை. உடல் முழு வதையும் மறைத்து கறுப்பு அங்கி அணிந்த உருவம் ஒன்று அவள் முன்னே வந்து நின் றது. அவள் திடுக்கிட்டுப் போனாள். தப்ப முயன்றாள். முடியவில்லை. அந்த உருவம் அவளை மடக்கிப்பிடித்தது. கதறக்கதற அவளை தூக்கிச் சென்றது.

மறுநாள் காலை அவள் அதே வீதியில் பிணமாகக் காணப்பட்டாள். பொலிஸார் அவளது விடுதியில் விசாரணை நடத்தினர். அப்போது ஒரு வாரத்துக்கு முன் ஜெக்வின் என்பவர் வந்து கலாட்டா பண்ணிவிட்டுப் போனதை அங்குள்ளவர்கள் கூறினர்.

இதனையடுத்து ஜெக்வின் கைது செய் யப்பட்டான். ஆனால், ஜெக்வின் இதனைச் செய்யவில்லையென மறுத்து விட்டான். ஜெக்வினைத் தடுப்புக்காவலில் வைத்துத் தொடர்ந்து விசாரணை நடத்தினர்.

ஒரே விடுதியைச் சேர்ந்த இரண்டு பெண் கள் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு பேரும் நண்பிகள். ஒரே கல்லூரியைச் சேர்ந்தவர் கள். இவர்கள் இருவரும் கற்பழிக்கப்பட்டு படுமோசமாகக் கொல்லப்பட்டுள்ளனர். கொலைகாரர்கள் இவர்கள் மீது கடும் வெறுப்புக் கொண்டிருக்கவேண்டும். அல் லது மனநோயாளியாக இருக்க வேண்டும். எப்படியிருப்பினும் ஒருவனே இக் கொலை யைச் செய்துள்ளான்.

இவனின் அடுத்த இலக்கு ஏனைய இரண்டு நண்பிகள் மீது இருக்கலாம். குறிப்பாக ஏனைய இரண்டு நண்பிகளையும் கண் காணித்தால் கொலைகாரரைப் பிடித்து விட லாம் என பொலிஸார் எண்ணினர். அவ்வாறே செயற்படவும் தொடங்கினர்.

****

1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி இரவு. ஹரி தன் நண்பர் விக்டரைச் சந்திப்பதற்காக அவனது வீட்டுக்கு வந்தார். சுமார் இரண்டு மாதங்களின் பின் அன்றுதான் அவர்கள் சந்தித்தனர். இருவரும் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். இரவு பன்னிரெண்டு மணியானதும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டனர்.

இரவு இரண்டு மணிக்கு ஹரி திடீரென கண்விழித்தான். அருகில் படுத்திருந்த விக் டரைக் காணவில்லை. வீட்டில் எல்லாப் பக்க மும் தேடிப்பார்த்தான். எங்கும் இல்லை. இந்த நடுஜாமத்தில் எங்கு சென்றிருப்பான் என யோசித்தான். அதே நேரம் மேசைமேல் கிடந்த விக்டரின் டயரி மேல் பார்வையைச் செலுத்தினான். அதை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். அதிர்ந்து போனான்.

''உயர்படிப்புக்காகக்கல்லூரியில்நுழைந்த போது நான் மிகவும் சாதுவாகவே இருந் தேன். அது எனது இயல்பு. எவரிடமும் அதி கம் பேசுவதில்லை. படிப்பிலேயே முழுக்கவ னத்தையும் செலுத்தினேன்.

இப்படியிருக்கையில் அதே கல்லூரியில் படித்த ரீட்டா என்ற ஒரு பேரழகியிடம் காதல் கொண்டேன். அவளுக்கு மேரி, பிரிசீலா, ஜூலி ஆகிய மூன்று நண்பிகள் இருந்தனர். அவர்களிடன் ஊடாக என் காதலைச் சொன் னேன்.

ஒரு நாள் ரீட்டா என்னைச் சந்திக்க வரச் சொன்னதாகக் கூறி ஒரு இடத்துக்கு அழைத் தாள். அங்கு போனதும் நான் ஏமாந்து போனேன். உண்மையில் என்னை ரீட்டா காதலிக்கவில்லை. என் முக அவலட்சணத் தைச் சுட்டிக்காட்டி என்னை மிகவும் கேலி செய்தாள். நான் மிகவும் மனமுடைந்து போனேன். அதனால் அந்த நான்கு பேரையும் கொலை செய்யத் தீர்மானித்தேன். அவர் களில் இரண்டு பேரைக் கொலை செய்து விட்டேன். மீதி இரண்டு பேரையும் கொல்லா மல் விடமாட்டேன். இந்த இரவு எப்படியும் ஒருத்தியின் கதையை முடித்துவிடுவேன்'' என அதில் எழுதப்பட்டிருந்தது.

உடனே இந்தக் கொலையை நிறுத்த வேண்டும். எனென்றால் அவன் கொலை செய்யவிருக்கும் இரண்டு பெண்களில் ஒருத்தி ஹரியின் காதலி ரீட்டாவாகும்.

உடனடியாக ஹரி பொலீஸ் நிலையத் துக்கு அறிவித்தான். பொலிஸார் விரைந்து சென்றனர். அப்போதுதான் விக்டர் அந்த விடுதியை நோக்கி மாறுவேடத்தில் மோட் டார்சைக்களில் போய்க்கொண்டிருந்தான்.

பொலிஸார் அவனை மடக்கிப் பிடித் தனர். எவ்வித சிரமமுமின்றி தான் செய்த இரண்டு கொலைகளையும் அவன் ஏற்றுக் கொண்டான். அத்தோடு மீதி இரண்டு பெண் களையும் கொலை செய்ய அனுமதி தருமா றும் அதன் பின் தானாக வந்து பொலிஸில் சரணடைவேன் என்றும் பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டான்.

இது வேடிக்கையாக இருந்தாலும் அவ னொரு மனநோயாளியெனப் பொலிஸா ருக்குத் தெரிந்தது. உடனே விக்டர் மனநோய் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனும திக்கப்படான். அதன்பின் அவனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்து விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த ஜெக் வின் விடுதலை செய்யப்பட்டான்.

# பூமித்தாயின் கருவறையில் கந்தகம்

—எம்.ஐ.முபாறக—

வளர்ந்த-தொழில்வள நாடுகள், தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் கதிரியக்கத்தன்மை கொண்ட நச்சுக்கழிவுகளை ஆபிரிக்கா போன்ற வளர்முக நாடுகளில் கொட்டிக் குவிப்பதில் ஆர்வம் காட்டிவருகின்றன. நச்சுக்கழிவுகளை இருகரம் நீட்டி வரவேற் கும் நாடுகளுக்குத் தகுந்த சன்மானமும் வழங்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டு களில் மட்டும் 115 கப்பல்களில் நச்சுக்கழி வுகள் மெக்ஸிகோ, ஆர்ஜெண்டீனா, பிரே சில், பனாமா, மொராக்கோ, செனிகல், ஸிம் பாப்வே மற்றும் சில தெற்கு ஆபிரிக்க நாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

பிடெல்பியா (அமெரிக்கா) விலிருந்து யூனியன் தீவுகளுக்கு 15,000 தொன் நச்சுச் சாம்பல் கழிவுகள் கப்பலேற்றி அனுப்பப் படுகின்றன. இக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்த தொன்னுக்கு 1,000 அமெ ரிக்க டொலர் செலவிட வேண்டும். மேற் கண்ட தீவுகளுக்கு அனுப்புவதற்கு ஆகும் செலவு தொன்னுக்கு 40 டொலர் மட்டுமே. நச்சுக்கழிவுகளின் பரவலால் யூனியன் தீவுக ளின் தாவர இனங்கள் பல அழிந்துபோய் விட்டன.

இத்தாலியிலிருந்து நைஜீரியாவின் கோகோ துறைமுக சேமிப்புக்கிடங்கில் 4,000 மெட்ரிக் தொன் வேதியல் (ரசாயனக்) கழிவு கள் குவிக்கப்படுகின்றன. கொடிய நச்சுத் தன்மை மிக்க டையாக்சின் பாலி குளோரோ பைடானில் என்னும் கழிவு பெரிய பீப்பாய் களில் அங்கு சேமிக்கப்படுகிறது. இத்தா லிய-நைஜீரிய வணிகக் கும்பலால் மாதம் ஒன்றுக்கு 250 டொலர், துறைமுகத்துக்குத் தரப்படுகிறது.

இங்கிலாந்து நிறுவனம் ஒன்று 5 மில் லியன் தொன் நச்சுக்கழிவுகளைச் சேமிப்புக் கிடங்கில் வைத்துக்கொள்வதற்காக, மேற் காசிய நாடு ஒன்றுடன் ஒப்பந்தம் செய்துள் ளது. அதற்காக அது செலவிடும் தொகை டன்னுக்கு 2.50 டொலர் மட்டுமே.

கினி பிசாவு என்னும் மேற்கு ஆபிரிக்க நாடு நச்சுப்பொருட்களைத் தனது நாட்டில் அனுமதிப்பதற்காக ஆண்டுக்கு 120 மில்லி யன் அமெரிக்க டொலரை ஈடாகப் பெறுகி றது. இது அந்த நாட்டின் ஒட்டுமொத்த ஆண்டு வருமானத்துக்குச் சமமாகும்.

வளர்ந்த செல்வ வளமிக்க நாடுகளிலி ருந்து கழிவுகளைப் பெற்று, அவற்றை வள ரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதையே பெரும் தொழிலாகக் கொண்டு, செயல் படும் பல நிறுவனங்கள் உலகில் உள்ளன. கோபெல்ட் என்ற நிறுவனம், பல்வேறு நாடு களிலிருந்து நச்சுக்கழிவுகளைப் பெற்று தனது நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதி யில் குவித்து வைத்துள்ளது. பின்னர் அக் கழிவுகளுக்குப் புதிய பெயர் சூட்டி, நவீன வேதிப்பொருளாக -புதிய லேபளில் இந் தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு நல்ல விலைக்கு விற்பனை செய்து விடுகி றது. தனியார் தொழில்சாலைகள் மட்டுமல் லாது, பல்வேறு அமெரிக்க அரசு நிறுவனங் களும் கூட தங்களிடம் உற்பத்தியாகும் கழிவுகளைக் கோபெல்ட் நிறுவனத்திடம் விற்றுவிடுகின்றன.

உலக அளவில் நச்சுக்கழிவுகளின் வெளி யேற்றம் ஒரு மாபெரும் சவாலாகும். கதிரி யக்கக் கழிவுகளை -அணுக்கதிர் வீச்சுப் பொருட்களை எந்தக்காலத்திலும் பாதுகாப் பாக வைத்திருக்க இயலாது. காரணம் அதன் கதிர் இயக்கம் பல மில்லியன் ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடியது. கழிவுகள் அடைத்து வைக்கப்பட்டுள்ள பீப்பாய்கள் சொற்ப காலத்திலேயே இற்றுப்போய்விட, கதிர்வீச் சுக்கழிவுகள் நிலத்தையும், நிலத்தடி நீரை யும், காற்றையும் மாசுபடுத்திவிடும். நச்சுத் தன்மை மனிதனின் உணவுச்சங்கிலியில் கலந்துவிடுகிறது. இதனால் மனிதனின் ரத்த ஓட்டத்தில் நஞ்சு சேர்ந்துவிடுவதோடு, விடுகிற மூச்சுக்காற்றும் மாசுபட்டுப்போகி றது.

இதுபோன்ற கழிவுகளை முறையாக அப்புறப்படுத்த, அதிகம் செலவிட வேண் டிய சூழலில், ஏழை நாடுகளில் இக் கழிவு களைக் குறைந்த செலவில் வளர்ந்த நாடுகள் கொட்டிக் குவித்துவிடுகின்றன.

ஏழ்மையாக உள்ள மூன்றாம் உலக நாடுகளுக்கு நச்சுப்பொருட்களைக் கையா ளுகின்ற விதம் பற்றித் தெரிய வாய்ப் பில்லை. வசதி இல்லை. இக்கழிவுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவோ அப்புறப் படுத்தவோ - மாற்றுப்பொருளாக்கவோ போதுமான தொழில்நுட்ப அறிவை மூன் றாம் உலக நாடுகள் பெற்றிருக்கவில்லை. குறுகியகால லாப நோக்கில் செயல்படும்- ஏழை மூன்றாம் உலக நாடுகளின் மண் ணும், காற்றும், நீரும், ஒட்டமொத்தச் சூழ லும் மாசுபட்டுப்போவது ஒரு துயர நிகழ்வே.

நவீன அறிவியல் தொழில்நுட்பத்தின் போக்கு தாயின் வயிற்றில் நஞ்சை வார்க்கும் நிலைக்கு இட்டுச்செல்ல வேண்டுமா? இயற்கைக்கும், மனிதனுக்கும் இடையி லான உறவில் இணக்கமான சூழல் ஓர் உட னடித்தேவை. இயற்கை நம் எதிரி அல்ல. அதுதான் நமது சத்தும், சாரமும் ஆகும். கரு வறையில் கந்தகம். இது நாமே விதைக்கும் குந்தகம்.

# மீண்டும் நெப்போலியன்!

ஒரு நகராட்சி மன்றத் தலைவி ஊரில் சொல்ல முடியாத அடாவடித்தனம் பண்ணுகிறார். இராணுவத்திலிருந்து திரும்பும் வீரண்ணா, தலைவியின் கொட்டத்தை அடக்குகிறார். இது தான் வீரண்ணா படத்தின் கதை!


-நெப்போலியன்-

தி.மு.கழக. எம்.எல்.ஏயான நெப்போலியன் ஆளும் கட்சியை இந்தப் படத்தில் கடுமையாக தாக்கு கிறார். தலைவி பாத்திரத்தில் நடித்தால் பிரச்சினை வருமோ. எனப் பயந்து நடிகைகள் பலரும் மறுத்திருக்கிறார்கள். முதல் நாள் படப்பிடிப்பில் கலந்து கொண்ட நடிகை புவனேஸ்வரி மறுநாள் எனக்கு உடம்பு சரியில்லை எனச் சொல்லி படத்திலிருந்து விலகிக் கொண்டார்.

அதன் பிறகு ஸ்ரீப்பிரியாவை தலைவி கேரக்டரில் நடிக்க கேட்டனர். அவரும் மறுத்துவிட்டார். அப்புறம் லட்சுமியைத் தேடிப்போனார்கள். சிலவருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் ஐயா படத்தில் நடித்து வரும் லட்சுமி முதலில் சம்மதித்தார். கதையை கேட்ட பிறகு 'நோ' சொல்லிவிட்டார்.

இறுதியாக சந்திரமுகியில் நடித்துவரும்செம்மீன் ஷீலா தலைவியாகியுள்ளார்.

# "டான்சர்"ல் கிரபிக்ஸ் நடனம்

குட்டி, ஒரு காலை இழந்த ஊனமுற்ற இளைஞர். ஆனாலும் ஒற்றைக்காலுடன் நடனம் ஆடக்கூடிய அபார திறமை அவருக்கு இருந்தது. இதை பொது மக்கள் மத்தியில் நிரூபிக்க ஆசைப்பட்டார். சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக, அவர் ஆடுவதற்கு மேடை கிடைக்கவில்லை. சோர்ந்து போன அவர் தனது அறைக்குள் வெறித்தனமாக ஆடுகிறார். இதை பக்கத்து வீட்டு பெண் கனிகா பார்த்து விடுகிறார். குட்டிக்கு உதவ முன்வருகிறார். அவருக்கு தெரிந்த எம்.எல்.ஏ. மூலம் குட்டியின் நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறார். ஒரு கோவிலின் திறந்தவெளியில் மேடை அமைக்கப்படுகிறது. குட்டி நடனம் ஆட தொடங்கும்போது மழை வந்து விடுகிறது. நடனத்தை பார்க்க வந்த பொதுமக்கள் கலைந்து விடுகிறார்கள். ஆத்திரம் – அவமானம் அடைந்த குட்டி கோவிலில் இருந்து நடராஜர் சிலை முன்பு நின்று தேம்பி தேம்பி அழுகிறர். கடவுளின் அருளால் நடராஜர் சிலை ஒற்றைக் காலுடன் குட்டியுடன் சேர்ந்து நடனமாடுகிறது. இப்படி ஒரு காட்சி கிரபிக்ஸ் மூலம் 'டான்சர்' படத்துக்காக படமாக்கப்பட்டது.

புதுமுகங்கள் குட்டி, கனிகா மற்றும் மணிவண்ணன் எம்.எல்.ஏ. வாசு ஆகியோர் நடிக்கின்றனர்.


'திருப்பாச்சி'
-விஜய், த்ரிஷா-

# அஜித்தின் அதிரடி பேட்டி!

எனது ரசிகர் மன்றங்களை புனரமைத்து புது ரத்தம் பாய்ச்ச வேண்டும் என்ற ஆசையில் சில அவசர முடிவுகளை எடுத்திருக்கிறேன் என சஸ்பென் வைத்துப் பேசுகிறார் அஜித். அந்த சஸ்பென்ஸுக்கு மேலும் சஸ்பென்ஸ் சேர்க்கிறது அஜித் ரசிகர் மன்றம். அது அஜித் ரசிகர் நற்பணி இயக்கமாக மாறியிருக்கிறது.

ஏன் இந்த மாற்றம்? என்ன செய்யப் போகிறீர்கள்? இயக்கம் என்பது அரசியலுக்கான அத்திவாரமா? கேள்வி மேல் கேள்விகளாய் அஜித்தை துளைத்தோம். அசராமல் பேசினார் அஜித்.

நாங்கள் சில நன்மைகளை மக்களுக்கு செய்து வருகிறோம். இதன் பலன் எல்லா மக்களையும் போய்ச் சேரவேண்டும். அத்தோடு பிறந்த நாள், பட வெளியீட்டு நாள் என குறிப்பிட்ட நாட்களில் மட்டுமல்லாமல் தினசரி நற்பணிகள் செய்யப்போகிறோம்.

அதனால்தான் தனி அலுவலகம் அமைத்து, மன்றத்தை ஒழுங்குபடுத்தி வருகிறோம்.

**என்னென்ன நற்பணிகள் செய்யப் போகிறீர்கள்?**

சுகாதார விழிப்புணர்வு, மழைநீர் சேகரிப்பு, சுற்றுச் சூழல், குப்பைகளை ஒழுங்குபடுத்துதல், இதோடு மிக முக்கியமாக மரம் நடுதல் ஆகியவை மன்றத்தின் தலையாய பணிகள். எனக்கு கட்–அவுட் வைப்பதைவிட ஒவ்வொரு ரசிகனும் ஒரு மரக்கன்று நட்டு வைத்தால் பத்து வருடங்களுக்குப் பிறகு அதன் பலன் மிக பிரமாண்டமாக இருக்கும். அதனாலேயே மரக்கன்று நடுதலை ஹைலைட்டாக செயல்படுத்தப் போகிறோம்.

**இயக்கமாக மாறி இருக்கிறீர்களே, ஒரு வேளை அரசியல்?**

சினிமா வேறு, அரசியல் வேறு, இரண்டையும் ஒன்றாகக் கலப்பதில் எனக்கு உடன்பாடு கிடையாது. ஜாதி, மத வேறுபாடுகளின்றி ரசிகர்களை ஒன்றிணைப்பது சினிமா. சினிமாவால் மட்டுமே சாத்தியமாகக் கூடிய மிகப்பெரிய விஷயம் இது. அப்படிப்பட்ட ரசிகர்களை வைத்துக்கொண்டு அரசியல் என்ற பெயரில் குழப்படி பண்ண நான் விரும்பவில்லை.


'அட்டகாசம்'
-அஜித்-


-அஜித்-

**ரசிகர் மன்ற மாநாடு நடத்தப் போவதாக தகவல் வருகிறதே?**

நான் தொடர்ந்து தோல்விப் படங்களை கொடுத்தாலும் அதை சகித்துக்கொண்டு என்னை நேசிக்கிற ரசிகர்களுக்கு நான் காலம் பூராவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ரசிகர்களை சென்னைக்கு வரவழைத்து அனாவசிய செலவு கொடுக்க விரும்பவில்லை. நான் படப்பிடிப்புக்கு போகும் போது அந்தந்த பகுதி ரசிகர்களை சந்தித்து பேசுகிறேன். அதுவே போதும். எனக்கும், அவர்களுக்கும் இடையே நெருக்கத்தை உண்டாக்கும்.

**தோரணம்கட்டி, மாலை போட்டு, கட்அவுட் வைத்து பாலாபிஷேகம் பண்ணுகிற ரசிகர்களுக்கு மரம் நடு, குப்பையை பிரி எனச் சொன்னால் செய்வார்களா?**

நான் நல்ல படங்கள் கொடுக்கவேண்டும் என்றும், தம்மைத் திருப்திப்படுத்த வேண்டும் என்றும் என் ரசிகர்கள் என்னிடம் எதிர்பார்க்கிறார்கள். அதே போல் எனது ரசிகர்களிடம் நான் இந்த மாதிரி நல்ல விஷயங்களை எதிர்பார்க்கிறேன். அதற்கு எனது ரசிகர்கள் நிச்சயம் கைகொடுப்பார்கள் என்றே நம்புகிறேன்.

**அஜித் அதிகம் பேசுகிறார் என்ற குற்றச்சாட்டு வருகிறதே?**

உண்மைதான். மனதில்பட்டதை படக்கென பேசி விடுகிறேன். ஆனால், இனி பேசப்போவதில்லை, செயல்தான்.

# 'பொன்னியின் செல்வன்'

'அழகிய தீயே' படத்தின் மூலம் அனைவர் மனத்திலும் கர்ச்சீப் போட்டு உட்கார்ந்த இயக்குனர் ராதாமோகன் அடுத்த படத்திற்கு தயாராகிவிட்டார். படத்தின் பெயர் 'பொன்னியின் செல்வன்'.

'அழகிய தீயே' படத்திற்குப் பிறகு அடுத்து என்ன என்று யோசித்துக் கொண்டிருந்தவரை 'பொன்னியின் செல்வன்' பக்கம்திருப்பியவர் ஜோதிகிருஷ்ணா. இவரது சிபார்சில் ஏ.எம்.ரத்தினத்திடம் கதை சொல்லி அவரது இளைய மகனை படத்தின் ஹீரோவாகவும் ஆக்கிவிட்டார். இந்த குடும்ப கும்பமேளாவின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவிருக்கிறது.

எழுத்தாளர் கல்கி எழுதிய சரித்திர நாவலின் பெயரை படத்திற்கு வைத்தாலும் இது சரித்திர படம்அல்ல. பக்கா காதல் படம். ரவிகிருஷ்ணாவுடன் காதல் செய்பவர் கோபிகா. 'அழகிய தீயே' போல் இதுவும் ஆர்ப்பாட்டமில்லாத அழகான நீரோடை போல இருக்கும் என உத்தரவாதமளிக்கிறார் ராதாமோகன்.

# சினி டிப்ஸ்

கிரண் தன்மனேஜர் கமிஷனுக்கு ஆசைப்பட்டு அதிக சம்பளத்தை உயர்த்தியதால் வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. அட்டகாசம் படத்தில் நடிப்பதாக இருந்த வாய்ப்பை அவரை அறிமுகப்படுத்திய குருநாதர் சரணே கடைசியில் அவரைக் கழட்டி விட்டார். இதனால் இப்போது தானே நேரடியாக வாய்ப்புத் தேடிச் சென்று சம்பளத்தை பேசுகிறார்.

கிரிவலம் படத்தில் ரிச்சட்டும், ஷாமும் இரண்டு கதாநாயகர்களாக நடிக்கிறார்கள். ஒரு சண்டைக்காட்சியில் ஷாம் கவனக் குறைவாக இருந்ததால் ஷாம் விட்ட குத்து ரிச்சடின் மூக்கைப் பதம்பார்த்துவிட்டது. இதனால் பயங்கர கடுப்பில் உள்ளார் ரிச்சர்ட்.

# நதியா அலைவா?

**இப்போது என்ன படத்தில் நடிக்கிறீர்கள்?**

தெலுங்கில் நாகர்ஜூனாவுடன் 'படம் வியூகம்' என்ற படத்தில் மூன்று கதாநாயகிகளுள் ஒருவராக நடித்து வருகிறேன். சந்திரமுகிக்காக ரஜினியை சந்தித்தீர்களா? அவர்கள் என்னிடம் கேட்கவில்லை. ஆனால், மகளின் திருமணத்திற்கு பத்திரிகை அனுப்பியிருந்தார் ரஜினி. ஆனால், அப்போது நான் லண்டனில் இருந்ததால் வரமுடியவில்லை. கூடிய விரைவில் ரஜினியை சந்தித்து மணமக்களை வாழ்த்துவேன்.


-நதியா-

**அப்படியென்றால், ரஜினியுடன் நடிக்கவில்லையா?**

எம்.குமரன் தயாரிப்பாளர் எடிட்டர் மோகன் சார் அடுத்த படத்திலும் நடிக்கக் கேட்டிருக்கிறார். அதேபோல் மோகன் சாரின் அடுத்த படம் ரஜினியை வைத்து என்றும் ஒரு பேச்சு இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் ரஜினியுடன் நான் நடிக்கிறேன். என்ற தகவலும் கிளம்பியிருக்கிறது போலிருக்கிறது. ஒருவேளை ரஜினிசாருடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் கண்டிப்பாக நடிப்பேன்.

''நாங்க, ரொம்ப சந்தோஷமா இருக்கோம். என் புருஷன் தரையில் பாதம் படவிடாமல் தாங்கிப் பிடிக்கிறாரு. அவரை மாதிரி புருஷன் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும்.'' என்றெல்லாம் பேட்டி கொடுக்கும் நடிகைகள் அடுத்த மாதமே ''என்னைக் கொடுமைப்படுத்தினார், என்னை சித்திரவதை பண்ணினார் என் கணவர்'' என்று கோடுகளுக்கு அலைகின்றார்கள்.

**உங்கள் வாழ்க்கை எப்படி?**

என் கணவர் சிரீ, லண்டனில் உள்ள டான் லி மார்கன் வங்கியில் பணிபுரிகிறார். நான் அவரோடு கடந்த 15 வருடங்களாக சந்தோஷமாக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அந்த சந்தோஷத்தின் ஆதாரம் ஷனம், ஷசனா என இரண்டு குட்டி நதியாக்கள் பெற்றிருக்கிறேன். எனவே எனது வாழ்க்கையில் எந்த கசப்பும் இல்லை.

நதியாவின் புன்னகையிலும், பேச்சிலும் சிறுதுளி கூட பொய் தெரியவில்லை.

# மீண்டு மௌநு நியூவா?

நிலாவுடன், சூரியனும் சேர்ந்து உங்களை அழைக்கிறது என்கிற வாசகத்தோடு எஸ்.ஜே. சூர்யாவின் அடுத்த பட அழைப்பிதழ்கள் தயாராகின்றன.

**இதில் விசேஷம் என்ன?**

அதாவது, பென் பிரண்ட் எனப் பெயரிடப்பட்ட இந்தப் படம் 'ப்ரியமுள்ள தோழி' என மாறவிருக்கிறது. சூர்யா ஹீரோ, நிலா என்கிற புதுமுகம் ஜோடி.

**இந்தப் படத்திற்கான போட்டோ செஷன் சமீபத்தில் மிக ரகசியமாக நடந்தது. ரகசியமாய் நடக்கிற அளவிற்கு என்ன வில்லங்கம்?**

சூர்யாவும், நிலாவும் முழு நிர்வாணமாக போஸ் கொடுக்க புகைப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

நியூ படத்தில் 20 வயசு உடம்பு, எட்டு வயசு மனசு என பம்மாத்து பண்ணிய செக்ஸ் காட்சிகளை சென்சாரே வெட்டமுடியாதபடி நியாயப்படுத்திய சூர்யா, இந்தப் படத்தில் தனது செக்ஸ் லீலைகளை நியாயப்படுத்த என்ன காரணம் வைத்திருக்கிறாரோ?


'ப்ரியமுள்ள தோழி'
-எஸ்.ஜே.சூர்யா, நிலா-

# சிறார்களின் கைவண்ணம்















# மருத்துவ கண்டுபிடிப்புகள்

| | |
|---|---|
| 1. புகைப்படச்சிகிச்சை | என்.ஆர்.பின்சன் |
| 2. நீரிழிவு நோய் | பேண்டிக்கெஸட் |
| 3. இரத்தம் உறைதல் | பால் எர்ல்ச் |
| 4. புற்றுநோய் | றொபேர்ட்வெய்னபெரி |
| 5. வெறிநாய்கடி சிகிச்சை | லூயி பாஸ்ரர் |
| 6. கொலரா, காசநோய்க் கிருமிகள் | றொபேட்கோச் |
| 7. மயக்க மருந்து | ஜேம்ஸ் சிம்பஸன் |
| 8. அம்மை குத்தும் முறை | எட்வேட் கென்னர் |

இ.பிரதீப்
தரம்11
யா/சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி
ம.மா.வித்தியாலயம்.

# இலங்கை பற்றிய தகவல்கள்

01.இலவசக் கல்வி எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1945
02.இலவசப்பாடநூல்எப்போதுவிநியோகம்செய்யப்பட்டது? 1980
03.பாடசாலைகள் எப்போது தேசிய மயமாக்கப்பட்டன? 1960
04.இலங்கை பல்கலைக்கழகம் எப்போது எங்கே ஆரம்பிக்கப்பட்டது? 1942 கொழும்பு
05.கட்டாயக் கல்வியின் வயதெல்லை யாது? 05–14 வயது வரை
06.இலங்கையின் பரப்பளவு யாது? 65,610 சதுர கி. மீ.
07.பல்கலைக்கழக முதல் உபவேந்தர் யார்? சேர் ஐவர் ஜென்னிங்ஸ்
08.தேசிய கல்வி ஆணைக்குழு எப்போதுஅமைக்கப்பட்டது? 1990

ந.சிவஜசன்.–தரம் –11
வள்ளிபுரம் க.உ.வித்தியாலயம்.

# நாம் வாழ்வில் எதிர் நோக்குபவை

1. கோபம் கொள்வது பலவீனத்திற்கு அடையாளம்
2. சோம்பேறி அரைப்பிணத்திற்கு சமம்
3. தன்னலமில்லாத சேவை மகிழ்ச்சி தரும்
4. மனிதன் தன் வயிற்றுக்கு அடிமை
5. மிக நெருக்கமான பழக்கம் வெறுப்பூட்டும்
6. செல்வத்தைத் தேடி நட்பு வரும் ஏழ்மை அந்த நட்பை சோதிக்கும்
7. உலகில் எதுவும் நிரந்தரமானதல்ல
8. பெருந்தன்மையைக் காட்ட பணம் தேவையில்லை
9. உன் கண்ணியத்தின் மீது பிறருக்கு முழு நம்பிக்கை வேண்டும்.
10. உழைக்காமல் உண்பவன் திருடி உண்பவனாவான்.

இ.பேபிநிஷாந்தினி
தரம்–10
கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்.

# உலகின் அதிசயம்

[illegible]

# வேட்டை

''அம்மா... அம்மா...'' என்று கூவிக் கொண்டே மகன் தினேஷ் ஓடி வருவதைக் கண்ட கமலம் திடுக்கிட்டு கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்தாள்.

''என்ன கண்ணு இப்படி வேகமாக ஓடிவாறே? என்னாச்சு?''

''அம்மா! முதலாளி நாகராஜனின் மகன் மகேஷ் என்னைப் பார்த்து, 'உன்ட அப்பா ஏதோ தப்பு பண்ணி விட்டு சிறையிலே இருக்கிறார் என்றுஎல்லோர் முன்னிலையிலும் கேவலமாய் பேசிறான் அம்மா. அப்பா சிறையிலா இருக்கிறார், வெளியூரில சம்பாதிக்கப் போய் இருக்கிறார்? சீக்கிரம் வந்திடுவார் என்றுதானே சொன்னே?''

''தினேஷ்...! முதலாளி மகன் குறும்புக் காரப்பையன். அவன் கிட்டே சேராதே என்று சொன்னேனே கேட்டியா? அப்பாவை பற்றி என்ன சொன்னாலும் பதில் பேசவேக்கூடாது என்று தானே சொன்னேன். உன்னோட படிப்புத்தானே முக்கியம். புரிஞ்சுதா?''



''அம்மா... அப்பா எங்கே போயிருக்கிறார் என்பதை ஏனம்மா மறைக்கிறே? நீ அதை சொல்லாட்டி நான் உன்னுடன் பேசமாட்டேன்! சாப்பிடமாட்டேன்! பள்ளிக்கூடம் போகமாட்டேன், ஆமா...!'' என்று முகத்தில் கோபம் கொப்பிளிக்க ஒரு மூலையில்போய் உட்கார்ந்துகொண்டான். ஏழாம் வகுப்பு படிக்கும் தினேஷின் பிடிவாதத்தைப் பார்த்து 'இந்த வயதிலையே இப்படியா?' என்று அம்மா வியந்தாள்.

குழந்தைக்கு என்ன பதில் சொல்லி சமாளிப்பது? இத்தனைக்கும் கணவன் மாடசாமி பரிதாபப்பட்டு மேற்கொண்ட ஒரு காரியத்தால் வந்தவினைதானே இது!

இனி பையனிடம் மறைத்துப் பயனில்லை என்பதை உணர்ந்த கமலம் அவனைச் சமாதானமாய் தன்னருகில் அழைத்து கட்டிலில் உட்கார வைத்து மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்ததை கதைபோல சொல்ல ஆரம்பித்தாள்.

இதுதான் அந்தக் கதை...

பத்து வருடங்களாக பண்ணையார் நாகராஜனின் தோட்டத்தில் குடியிருந்து கொண்டு மாடசாமியும், அவன் மனைவி கமலமும் நேர்மையாகப் பணிபுரிந்து வந்தனர். மாடசாமி மிகவும் பணிவுடையவன். எதிர்த்துப் பேசாத குணம்தான் அவனிடம் பண்ணையாருக்கு பிடித்தது. அவனிடம் மிகவும் பிரியம்கொண்டு வேலையாள் என்ற பாரபட்சமின்றி நடத்திவந்தார். அவர் மனைவி விஜயலட்சுமியும் நல்லவிதமாக மாடசாமி குடும்பத்தோடு பழகி வந்தாள்.

நாகராஜனின் தோட்டத்திற்கு தெற்கே இரண்டு, மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் காட்டுப்பகுதி உள்ளது. அதனால் மிருக பயம். பாதுகாப்புக்காக துப்பாக்கி வைத்துக்கொள்ளும் உரிமை பெற்றார். துப்பாக்கியும் இருக்கவே மாதத்திற்கு ஒருமுறை காட்டுக்குள் புகுந்து இரவு நேரங்களில் வேட்டையாடக் கிளம்பிவிடுவார். துணையாக மாடசாமி உடன் செல்லுவான்.

ஒருநாள் பௌர்ணமி வெளிச்சத்தில் மாடசாமியுடன் இரவு வேட்டைக்கு கிளம்பிவிட்டார். இருவரும் சந்தோஷமாக காட்டுக்குள் புகுந்து விட்டனர். சுமார் ஒரு மணிக்கும் மேலாக காட்டுக்குள் சுற்றியும் ஒரு மிருகமும் கண்ணில் படவில்லை.

ஆற்றை நெருங்கினர்.வெள்ளியை உருக்கி வைரத்தோடு கலந்து ஆற்றில் விட்டால்போன்று பௌர்ணமிவெளிச்சத்தில் மின்னியபடி அழகாக ஆறு ஓடிக்கொண்டிருந்தது.

இக்காட்சியைப் பார்த்து ரசித்த பண்ணையார், ''துப்பாக்கியை கீழே வைத்துவிட்டு தண்ணியை குடி. மாடசாமி'' சொன்னவர் ஒரு பாறையில் காலை வைத்து தண்ணீரை இரு கைகளாலும் மொண்டு குடித்தார்.

துப்பாக்கியை கரையில் வைத்துவிட்டு அக்கரையை எதேச்சையாக பார்த்த மாடசாமிக்கு, 'பகீர்!'என்றது. மறுகரையில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது ஒரு சிங்கம். உடனே மாடசாமி துப்பாக்கியை கையில் எடுத்து, ''முதலாளி! அந்தக் கரையிலே பாருங்க. ஒரு சிங்கம் தண்ணீர் குடிக்குது. இந்தாங்க துப்பாக்கியைப் பிடிங்க'' என்று அவசரமாக கொடுத்தான்.

அதேகணம் சிங்கம் தலையைத் தூக்கி இக்கரையைப் பார்த்து ஒரு உறுமல் போட்டது. அதன் சத்தத்தைக் கேட்டு கைகால் உதறல் எடுக்கவும், ''முதலாளி அதுக்குக் குறி வச்சிருங்க... இல்லாட்டி நாம தீர்ந்தோம்...'' என்று மெதுவாக, அதே சமயம் அழுத்தமாக அவர் காதில் விழும்படி கூறினான்.

(தொடரும்)


# விடுகதைகளும் விடைகளும்

1.பரட்டைத் தலை மாமியாருக்கு பவளம்போல் மருமகள் அவள் யார்?
2.வீட்டைச் சுற்றி வேட்டை நாய் அது என்ன?
3.நீரிலே நீந்துவான் மீனும் அல்ல நிலத்திலே நடப்பான் மனிதனுமல்லஇறக்கை கொண்ட பறவைதான் அவன் யார்?
4.நீரிலே பிறந்து நீரிலே அழிவான் அவன் யார்?
5.வாள்நாள் முழுக்க வாயை மூடாதவன் அவன் யார்?
6.எங்கள் தம்பி வித்துவான் காதை முறுக்கினால் கத்துவான் அவன் யார்?
07.செக்கைச்சிவந்திருக்கும் செவ்வாழை பூத்திருக்கும் வாலும் முளைச்சிருக்கும் வந்திருக்கிறார் சந்தைக்கு அவர் யார்?
08.ஊசி நுழையாத கிணற்றிலே தண்ணீர். அது என்ன?
09.கல் வீட்டுத்தாத்தா மெதுவாக நடப்பவர் அவர் யார்?
10.ஊசி போட்ட வைத்தியர் பாடிக்கொண்டு போகிறார் அவர் யார்?

1.சோளம்
2.கருக்கு மட்டை
3.வாத்து
4.உப்பு
5.ஈர்க்கு
6.வானொலி
7.செத்தல் மிளகாய்
8.தேங்காய்
9.ஆமை
10.நுளம்பு

வி.விதுசாந்தன்
மருதங்கேணி
தாளையடி
செம்பியன்பற்று
அ.த.க.பாடசாலை
தரம்5 மாணவன்

# குழந்தைகள் மீது அதிக அக்கறை செலுத்தலாமா...?



'உன்னுடைய உடைகளை நீதான் துவைக்க வேண்டும். உன்னுடைய அறையை சுத்தமாக வைத்துக்கொள்வது உன் பொறுப்பு' என்று பெற்றோர் பிள்ளைகளுக்கு வேலைகளைப் பழக்குவதில் தவறில்லை. ஆனால், சில பெற்றோர் பிள்ளைகளுக்குப் பொறுப்பை உணர்த்துவதாக எண்ணி தாங்கள் பொறுப்பற்றவராய் மாறும் நிலையே பெரும்பாலும்காணப்படுகிறது.

தங்களது வயதுக்கு மீறிய காரியங்களைச் செய்யக் கற்றுக்கொண்ட பிள்ளைகள் பின்பு தாமும் வயது வந்தவர்களைப் போல் நடந்துகொள்ளவும் ஆரம்பித்துவிடுகிறார்கள். பெற்றோரின் அன்பும்,பரிவும் கிடைக்காத நிலையில் அவர்களின் புகலிடம் தவறான செயல்களையும் செய்யத் தூண்டிவிடும்.

குழந்தைக்குத் தேவை மகிழ்ச்சியும், பாதுகாப்பான சூழ்நிலையும்தான். பெற்றோர் நாயும், பூனையுமாய் சண்டை போட்டுக்கொண்டு வீட்டை நரகமாக்குவதை எந்தக் குழந்தையாலும் சகித்துக்கொள்ள முடியாது. தன்னால் சகித்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் அந்தக் குழந்தை வீட்டை விட்டு வெளியேறக்கூடத் தயங்க மாட்டாது.

மூன்று பெண் குழந்தைகளை அடுத்தடுத்துப் பெற்ற தாய்க்கு, நான்காவதாக ஆண் குழந்தை பிறந்தால், அந்த ஆண் குழந்தையிடம் தாய்க்கு அளவற்ற பாசம் இருக்கத்தான் செய்யும். ஆனால் அது மற்றக் குழந்தைகளைப் பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும். இந்தச் சூழ்நிலையே பிள்ளைகள் மனதில் வெறுப்பு ஏற்படுவதற்கான காரணமாக அமைந்துவிடக் கூடாது.

சில பெற்றோரின் இப்படியான விபரீதமான நடத்தைகளும் குழந்தைகளைப் பாதிப்பதாக மாறிவிடும்.




உணர்வு பூர்வமாக வளர்ச்சியடையாத பெற்றோர் குழந்தை வளர்க்கும் பொறுப்பை தங்களின் தோள்களில் சுமக்க விரும்புவதில்லை. குழந்தையை வளர்ப்பதும், படிக்க வைப்பதும் பணம் கொடுப்பதும் மட்டும் தான் தமது கடமை என்று தந்தையர் நினைப்பர். குழந்தைக்கு சமைத்துப்போடுவதோடு தன் வேலை முடிந்திதென்றுதாய்நினைப்பாள். இத்தகைய பெற்றோர், தங்கள் குழந்தையிடம் இரக்கமற்ற மனோபாவத்தையே கடைப்பிடிப்பர்.இப்படியானவர்கள் எப்படி உணர்வுபூர்வமான பாதுகாப்பை தங்கள் குழந்தைகளுக்கு வழங்க முடியும்?

குருவி தலையில் பனங்காயாக கூடுதலான பொறுப்புகளை சுமக்க நேரும் குழந்தைகள், குழந்தைப்பருவ உல்லாசத்தை இழந்துவிடுகிறார்கள். அவர்கள் சுயநலத்தோடும், பரபரப்போடும் இயங்க முற்படுகிறார்கள். அதன் காரணமாகவே அவர்கள் தங்கள் பெற்றோர் மீது வெறுப்பை வளர்த்துக்கொண்டு விடுகிறார்கள்.

பிள்ளை மீது கவனம் வைக்காத பெற்றோரை விட கூடுதல் கவனம் வைக்கிற பெற்றோரினாலேயே தான் குழந்தைகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படுகிறது என்றும் கூறப்படுகிறது. அவர்கள் தங்கள் குழந்தையின் ஆரோக்கியம், உணவுப்பழக்கம், வளர்ச்சி, கல்வி மற்றும் அற்ப காரணங்களுக்கும் அநாவசியமாகக் கவலைப்படுகிறார்கள்.

கூடுதல் கவனம் வைக்கிற பெற்றோரின் பிள்ளைகள் நல்ல விதமாக நடப்பது எப்படி என்றே அறியாதவர்களாக இருக்கிறார்கள். ஓர் இக்கட்டான நிலை ஏற்படும்போது அதை, எப்படிச் சமாளிப்பது என்றும் அவர்களுக்குத் தெரிவதில்லை.

அதீத அக்கறை செலுத்தி வளர்க்கப்படும் பிள்ளைகள், தேக வலிமையற்றவர்களாகவும், பயந்தவர்களாகவும் இருப்பார்கள். வாழ்க்கை முழுவதும் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டுவிடும்.

உணர்ச்சி வசப்படுகின்ற பெற்றோராலும் சிலவேளைகளில் குழந்தையின் இயல்பான வளர்ச்சி பாதிக்கப்படும். தங்கள் குழந்தையின் எதிர்காலம் பற்றி அவர்கள் அதிக கனவுகளை வைத்துக்கொண்டிருப்பார்கள். கல்வியிலும், விளையாட்டிலும், எல்லாவற்றிலுமே குழந்தை முதலாவதாக வர வேண்டும் என்று விரும்புவார்கள். அப்படி அந்தக் குழந்தை சாதிக்க முடியாது போனால் மனம் சோர்ந்து விடுவார்கள். அதற்காக குழந்தையைத் தண்டிக்கவும் செய்வார்கள்.

ஒவ்வொரு குழந்தையும் தனக்கென்று விருப்பு, வெறுப்புகள் வைத்திருக்கும். வளர்ந்த பிள்ளை வாழ்க்கையில் தான் விரும்பிய பாதையைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதை அனுமதிப்பதே நல்லது. தங்கள் பெற்றோருடைய விருப்பத்துக்கு மாறாக தமது விருப்பத்துக்கேற்ற துறையைத் தேர்ந்தெடுத்து அதில் பிரகாசிக்கின்ற பிள்ளைகள் கூட எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

குழந்தைகளை மனோதிடமும், ஆரோக்கியமும் உடையவர்களாக வளர்க்க விரும்பும் பெற்றோர் புத்திசாலித்தனமும், மன முதிர்ச்சியும் கொண்டிருக்க வேண்டும். மன முதிர்ச்சி என்பது யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்கிற, அபிவிருத்தி செய்துகொள்கிற மனநிலை ஆகும். மனப் பக்குவம் உள்ள பெற்றோருக்கு ஒருபோதும் குழந்தைகள் பிரச்சினையாக இருப்பதில்லை.

# அலுவலகத்தில் தேவை மன உறுதி

அடக்கம், அமைதி, பொறுமை போன்ற குணங்களை காலங்காலமாக எம் முன்னோர்கள் பெண்களின் மனதில் வேரூன்றச் செய்துள்ளனர். அடங்கிப் போவது என்பது பெண்களுக்கே உரிய ஒரு குணம் என்று எண்ணப்படுகிறது. இந்த நவீன யுகத்தில் ஆண்கள் மட்டுமே செய்ய முடியும் என்று எண்ணப்பட்ட பல சவாலான நுணுக்கம் மிக்க வேலைகளை இன்று பெண்களும் ஆண்களோடு சேர்ந்து செய்ய ஆரம்பித்து விட்ட நிலையில், பெண்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டுவதில் உறுதியாக இருப்பதே இன்றைய காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

உறுதியாக இருப்பது என்பது சண்டை போடுவது அல்ல. ஆனால், பல சமயங்களில் இந்த இரு வேறு வார்த்தைகளுக்கும் அர்த்தம் தெரியாததால் பலர் நீங்கள் உறுதியாகப் பேசும்போதும் கூட உங்களை சண்டைக்காரர் என்று கூறலாம். உறுதியாகப் பேசும்போது நீங்கள் நேர்மையானவர், உங்கள் உரிமையை நிலைநாட்ட விரும்புபவர் என்பதையும் அதே சமயம் மற்றவர்களின் உரிமையை நீங்கள் பறிக்க முயற்சிக்கவில்லை என்பதையும் உங்கள் பேச்சு உணர்த்த வேண்டும்.

நாம் ஏன் உறுதியாக இருக்க வேண்டும்? மற்றவர்கள் சொல்வதை எல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்ளும் பலரைப்போல் நாமும் நடந்துகொண்டால், நாம் பலராலும் விரும்பப்படுபவராக இருக்கலாம். அது எளிதானதும் கூட. ஆனால், உறுதியாக இருப்பது என்பது எதிலும் உங்களின் தனிப்பட்ட நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகும். நீங்கள் உறுதியாக இருக்கவில்லை என்றால் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பல வாய்ப்புகள் உங்களுக்குக் கிடைக்காமல் போகலாம். நீங்கள் ஏதாவது ஒரு பிரச்சினையில் இருந்தால், நீங்கள் உறுதியாக இருந்தால் மட்டுமே மற்றவரின் கவனத்தை உங்களால் ஈர்க்க முடியும்.

பெரும்பாலான நேரங்களில் நாம் உறுதியாக இருக்கத் தயங்குகிறோம். காரணம் அதிகாரி வருத்தப்படுவார் அல்லது தொழிலில் பிரச்சினைகள் ஏற்படும் என்று பயப்படுகிறோம்.

உறுதியாக இருப்பது என்பது அடங்கிப் போவதற்கும், சண்டை போடுவதற்கும் இடைப்பட்ட ஒரு நிலை. சண்டை போடாமல் அதே சமயம் உறுதியாக இருப்பதும் சற்று சிரமமான காரியம் தான். அதற்கு தைரியம், அனுபவம் மற்றும் சுய கட்டுப்பாடு ஆகியவை தேவை. நீங்கள் உறுதியாக இருப்பதற்கு முன் மற்றவர்களின் நிலை என்ன என்பதை அறிந்துகொள்ளுங்கள். உங்கள் அதிகாரி அல்லது உங்களின் கீழ் வேலை செய்பவர் கோபமாக இருந்தால் முதலில் அவர்கள் கூறுவதை அமைதியாகக் கேளுங்கள். மற்றவர்கள் சில சமயம் சண்டை போட்டால் கூட அவர்கள் கூறுவதில் சிலவற்றை ஏற்பதும், தலை அசைப்பதும் சில சமயங்களில் பலனளிக்கும். உங்கள் எதிராளி பேசி முடித்த பின் அவர்கள் சொல்வதை கேட்டுக்கொள்ளும்



மன நிலையில் இருப்பார்கள்.

*நீங்கள் உறுதியாகப் பேசுவதற்கு மூன்று வழிகள் உள்ளன.

*நீங்கள் கூறுவதை நான் புரிந்து கொண்டேன் என்று முதலில் கூறவும்.

*ஆனாலும் நான் இதைப்பற்றி இப்படித் தான் நினைக்கிறேன் என்று விளக்கவும்.

இந்த விடயத்தை இப்படி செய்து மு[illegible]தால் நல்லது என்று விவரிக்கவும்.

மேற்கூறப்பட்ட இந்த மூன்று வழிகளைப் பயிற்சி செய்யுங்கள். இதன் மூலம் நீங்கள் ஒரு திறமையான கருத்துப் பரிமாற்றம் செய்பவராக மாறலாம். நீங்கள் பேசும் போது உங்கள் முகபாவம் வேறு விதமாக– குறிப்பாகக் கோபமடைந்தவராகக் காட்டக் கூடாது. தேவைப்படும்போது நீங்கள் உறுதியாக இருக்கத் தயக்கம் காட்டாதீர்கள்.

அமைதியாக இருந்துகொண்டு உங்கள் உள்ளத்திலேயே உணர்ச்சிகளை அமுக்கிப் போடாதீர்கள். ஏனென்றால் ஒரு நாள் அது உங்களையும் மீறி பயங்கரமாக வெளிப்படக்கூடும்.

# உடல் எடையைக் குறைக்க சிறந்த வழி

இன்று எங்கு பார்த்தாலும் உடல் பருமனால் அவதிப்படுபவர்களின் புலம்பல் தான் அதிகம்.

உலக அளவில் பத்தில் ஒரு நபருக்கு இந்த உடல் பருமன் பிரச்சினை இருப்பதாக உலக சுகாதார நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கை கூறுகிறது.

உலகில் உள்ள 600 கோடி மக்களில் 100கோடிக்கு மேற்பட்டோர் உயரத்துக்கு பொருந்தாத எடையும், உடல் பருமனும் கொண்டிருப்பதாக இந்த ஆய்வில் தெரிய வந்திருக்கிறது.

இப்பிரச்சினைக்கு முக்கிய காரணம் வாழ்க்கை முறை மாற்றங்கள் தான். அதிலும் குறிப்பாக இளைஞர் மத்தியில் அதிகரித்து வரும்வேக உணவுக்கலாசாரம் ஒரு முக்கிய காரணம் ஆகும். இதுதான் பல்வேறு பிரச்சினைகளுக்கு அடித்தளமிடுகிறது.

வேக உணவு கலாசாரத்தால் எமது உடலில் மாச்சத்து,கொழுப்புச்சத்து அதிகரிக்கிறது. அதே நேரம் உடல் உழைப்பு குறைகிறது. இதன் விளைவாக இரத்த அழுத்தம், இரத்தத்தில் கொழுப்பு சேர்தல், உடலின் இன்சுலின் ஏற்புத்தன்மை குறைதல் என பல ஆபத்தான சிக்கல்கள் பெருகுகின்றன. இதய நோய், இரண்டாம் நிலை சர்க்கரை நோய் போன்றவற்றுக்கும் அளவு மீறிய உடல் பருமனுக்கும் நேரடித்தொடர்பு இருக்கிறது.

இன்று சிறுவர் சிறுமியருக்குக் கூட சர்க்கரை நோய் இருப்பது சகஜமாகிவிட்டது. பொதுவாக உடற்பருமனை மருத்துவர்கள் 'உடற்திண்மக் குறியீடு' என்ற அளவால் அளக்கிறார்கள்.

உடல்எடையைக்குறைக்க சமச்சீர் உணவு மட்டும் தான் சிறந்த வழி. அதே போல் கொழுப்புச்சத்து 15 சதவிகிதத்துக்கும் குறைவாக உள்ள உணவுப் பொருட்களை சாப்பிட வேண்டும். மாச்சத்து எனப்படும் காபோஹைட்ரேட் உடலில் 55 இலிருந்து 70 சதவீதம் வரை இருக்கலாம். அயோடின் கலந்த உப்பு, பழங்கள், புத்தம் புதிய காய்கறிகள் போன்றவை அன்றாடம் அவசியமானது.


# டிப்ஸ்

நீங்கள் வைக்கும் மீன் குழம்பு மணக்க வேண்டுமா? அடுப்பிலிருந்து குழம்பை இறக்கியதும் நான்கு சிறு வெங்காயத்தை தோல் உரிக்காமல் போடவும். அல்லது சிறிது வெந்தயத்தை வறுத்துப் பொடியாக்கி குழம்பில் போட்டால் மீன் குழம்பு மணமாக இருக்கும்.

மிக்சர் செய்யும்போது கொஞ்சம் அரிசி மிட்டாயைச் சேர்த்து கலந்து கொண்டால், மிக்சரின் சுவை கூடும்.


முருங்கைக் கீரையைப் பொரியல் செய்து அடுப்பிலிருந்து இறக்கும்போது ஒரு கோழி முட்டையை உடைத்து ஊற்றி கிழறி எடுங்கள். இப் பொரியல் நல்ல சத்துணவாகும்.

# குழப்பம்



இந்தப் படத்தை சுழித்து - நிமிர்த்தி - உருட்டி - புரட்டி எல்லாம் பார்த்தோம். எது மேல்பக்கம் - எது கீழ்ப்பக்கம் என்று எமக்குப் பிடிபடவில்லை, கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

# நெட் குறும்பு



ஒரு கணினியைத் தயாரிக்க ஒன்றரை இறாத்தல் பாண் மட்டும் இருந்தால் போதும் போலிருக்கிறது.

# ஐடியா



நடமாடும் தொலைபேசி, நடமாடும் வீடு (Caravan), நடமாடும் கனினி என்று எல்லாம் வந்து விட்ட நிலையில் அடுத்து இதனையும் நடமாடவிட்டால் அவசரத்துக்கு உதவியாக இருக்குமல்லவா? எப்படி ஐடியா?

# ஜோக்

அந்த வயது முதிர்ந்தவருக்கு.. இளம் பெண் ஒருவரை திருமணம் முடித்து வைத்தனர். அதனால், அவருக்கு நிச்சயமாக குழந்தை பிறக்காது என்று எல்லோரும் பந்தயம் வைத்திருந்தனர்.

ஆனால், திருமணம் நடைபெற்று ஒரே ஆண்டில் அந்த பெண் கர்ப்பவதி ஆனாள்.

வயோதிபருக்கோ பெரிய சந்தோஷம். இனிப்பு வாங்கி எல்லோருக்கும் கொடுத்து... தனது சந்தோஷத்தைக் கொண்டாடினார்.

அவர் தன்னுடைய நண்பர் ஒருவருக்கு இனிப்பை கொடுத்து.. தனது சந்




தோஷத்தை தெரியப்படுத்தியபோது... அந்த நண்பர் கேட்டார்... "உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா?"

# விந்தை உலகம்




இந்தச் செய்தியை வாசித்துவிட்டு... அடடா.. சமூக சேவை செய்வது என்பது வரவேற்கப்பட வேண்டியதுதான், ஆனால்... அதற்காக.... இப்படியா... சீ... தூ.... என்று நீங்கள் திட்டித் தீர்த்துக் கொண்டால் அதற்கு நாம் பொறுப்பாளிகலல்ல....

சரி இனி விடயத்துக்கு வருவோம். விடயம் இதுதான். உங்கள் ஊரில் ஒரு சமூக சேவை செய்ய விரும்புகிறீர்கள்... அதற்கு காசு தேவைப்படுகிறது. என்ன செய்வீர்கள்? ஒன்றில் உண்டியல் குலுக்குவீர்கள் அல்லது ஏதாவது நிதியுதவிக் காட்சிகளை நடத்துவீர்கள்.

ஆனால், பிலிப்பைன்ஸ் நாட்டிலே அல்பா - பி. ஒமேகா என்ற நிறுவனத்தை சேர்ந்த 20 பேருக்கு குறுக்கு வழி ஒன்று தென்பட்டது. புயல் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய விரும்பிய அவர்கள் கியூசான் நகரின் மையப்பகுதியில் - சன நெரிசலான பகுதிஊடாக தமது உடம்பிலே ஒட்டுத் துணிகூட இல்லாமல் - நிர்வாணமாக ஓடியபடி.. நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர். ஆனால், அந்த நடவடிக்கை அவர்களுக்கு நிதியைச் சேர்த்துக் கொடுத்ததை விட ஏகப்பட்ட சிக்கல்களை சேர்த்துக் கொடுத்துவிட்டது.

பல்கலைக் கழகம் ஒன்றின் முன்னால் அவர்கள் ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டு மாணவிகள் மிரண்டு ஓடத் தொடங்கிவிட்டனர். இதனால் அங்கேயுள்ள மாணவர்களுக்கும் - ஓட்டக்காரர்களுக்கும் வாக்குவாதம் - கைகலப்பு ஒன்று ஏற்பட்டு ஏக களேபரம் ஆகிவிட்டதாம்.

# கண்ணாமூச்சி



அன்பே... உன் தலை முடியைக் காயவைக்க Hair Dryer கேட்டாயே....! இந்தா பிடி....

# 40 வருடங்களுக்குபின் ஏற்பட்ட பாரிய அதிர்வு

வடக்கு சுமாத்திரா பிரதேசத்தில் கடலுக் கடியில் ஏற்பட்ட நில நடுக்கம் ஆசியாக் கண்டத்தில் பல நாடுகளை அதிர வைத்தது.

இது இந்த நூற்றாண்டின் 5ஆவதும், மிகப் பெரியதுமான நில நடுக்கம் ஆகும். அதேவேளை 40 வருடத்துக்குப்பிறகு ஏற்பட்ட பாரிய அதிர்வும் கூட.

இந்த நில நடுக்கத்தினால் கடலடிப் பிரதேசத்தில் ஏற்பட்ட தாக்கம் 1,000 மைல்களுக்கு அப்பாலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

'சுனாமி' அலையானது உலகம் பூராவும் பரவியிருக்கலாம் என்று பிரித்தானியாவை தளமாகக் கொண்டுள்ள புவி ஆராய்ச்சியாளர் கலாநிதி டேவிட் பூத் கூறுகிறார்.

இந்த இராட்சத அலையானது முதலில் கடல்நீரை உட்கொண்டு அதன் பின் மிகப் பெரிய அலையாக உருவெடுக்கும். கடலுக்கடியில் ஏற்பட்ட 9.0 ரிச்டர் அளவானது 5,000 மைல்களுக்கு அப்பாலுள்ள பிரித்தானியாவிலுள்ள, கடலுக்கடியில் ஏற்படும் அதிர்வுகளை பதியும் கருவியில் பதிந்துள்ளது.

அமெரிக்க புவியியல் மையத்தினால் இந்த அதிர்வு ஆரம்பத்தில் 8.5 என பதியப்பட்டிருந்தது. பின்பு 8.9 என மீளஅறிவிக்கப்பட்டது.

1964ஆம் ஆண்டு அலாஸ்கா நாட்டில் பிரின்ஸ் வில்லியம் பிரதேசத்தில் 9.2ரிச்டர் அளவில் பாரிய அதிர்வு ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் மையம் அறிவித்தது.

நில நடுக்கமானது வழக்கமாக பாறைகளின் அதிர்வுகளினால் ஏற்படுகிறது. இந்த நடுக்கத்தினால் ஏற்பட்ட அதிர்வு கற்பாறைகளின் வழியே செல்லும்.

அனைத்து விதமான நில நடுக்கங்களினாலும் 'சுனாமி' ஏற்படுவதில்லை. ஆனால், செங்குத்து வழியாக ஏற்படும் மாறுபாடுகளால் ஆழத்தின் அளவைப் பொறுத்து கடல் அலையின் வேகம் வித்தியாசப்படும்.

மிகவும் ஆழமான கடல் அடி தாக்கத்தினால் மணித்தியாலத்துக்கு 880 கிலோ மீற்றர் வேகத்தில் கடல் நீர் பாயும். அமெரிக்க ஆய்வு நிறுவனத்தின்படி இந்த அலைகள் கடுமையாகவும், வேகமாகவும் இருப்பினும் இதனை துல்லியமாக கருவியில் இனங்காண முடியுமென்று தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறு நிலநடுக்கம் ஏற்படுகிறது என்பதையும், எந்தப் புள்ளியில் உருவாகிறது என்பதையும், இதன் மூலம் பூகோளத்தில் ஏற்படும் தாக்கங்களையும் செயற்கை கோள்மூலம் துல்லியமாக அறிய முடியும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பிரித்தானிய விஞ்ஞானியான கலாநிதி பூத் தெரிவிக்கையில், ''பசுபிக் பிராந்தியத்தில் ஏற்படும் மாறுதல்கள் பற்றி நான் அறிந்து கொண்டாலும் இந்து சமுத்திரத்தில் ஏற்படுவதை பற்றி அறிந்திருக்கவில்லை'' எனத் தெரிவித்தார்.

'சுனாமி' அலைகள் ஆரம்பத்தில் நீரை உள்ளெடுத்துவிடும். கடல்பகுதி வெறும்தரை நிலமாகத் தென்படும்.

பின்பு நீர் நிலை உயர்ந்த வண்ணம் திடீரென உயரும். ஆழ் கடல் மட்டத்தில் மிகப் பெரிதாக இல்லாவிடினும் கரையோரத்திற்கு வரும் போது 30 அடி வரை கடல்நீர் உயரும். அதனால் தான் நடுக்கடலில் இந்த இராட்சத அலைகள் தோன்றினாலும் நடுக்கடலில் உள்ள கப்பல்கள் இந்த அலைகளினால் பாதிப்படைவதில்லை.

சுனாமி அலையின் அதிர்வுகள் பாரிய வலுவான சக்தியை ஏற்படுத்தும். இது கரையோரங்களைப் புரட்டி எடுக்கும். கற்களைத் தூக்கி எறியும். வானளாவிய மரங்களை முறிக்கும். அது மட்டுமா! நகரங்களையும், கிராமங்களையும் அழித்துவிடும்.

சுனாமி அலை தரையை மோதும் பே[illegible] அலைகள் மீண்டும் அதே வேகத்தில் கடலை நோக்கிச் ,சென்று மீண்டும் வருவதால் பாதிப்புகள் அதிகமாகின்றன. ஒரு பாரிய அலையின் வேகம் பல அலைகளை உருவாக்கும் தன்மை கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட இவ்வாறான ஒரு சுனாமி அலையின் தாக்கம் பல் அலைகளை தோற்றுவித்தமையே பெரும் அழிவுகளுக்குக் காரணமாகியது. இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட இந்த நிகழ்வுக்கு சில நாட்களுக்கு முன்பு அவுஸ்திரேலியா, அந்தாட்டிக்கா பகுதியில் 8.1 அளவில் ஏற்பட்ட அதிர்வினால் கட்டடங்கள் ஆடினாலும் சிறிதளவு பாதிப்பே ஏற்பட்டது.

இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட சுனாமி அலைக்கு இன்னுமொரு காரணம், இந்தியா அவுஸ்திரேலியா நிலப்பரப்பு வடபிராந்தியத்தை நோக்கி நகர்வதும் ஆகும்.

26 ஆம் திகதி சம்பவத்துக்கு பின்பு [illegible]வதேச அளவில் விஞ்ஞானிகள் ஒன்று[illegible] கடல் நீரடித் தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்வதற்கு முன்னுரிமை வழங்க முடிவு செய்துள்ளனர்.

-வியாஸா-


பண்டிகைக் கால பரிசு மழை!




முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20 கிராம், 10 கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக் குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கிகாரம் பெற்ற MMBL உபமுகவர்கள் ஊடாக பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!.

விபரங்களுக்கு MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள் 011 2372 333

ரூபாய் 250,000ற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்.

WESTERN UNION
பணப் பரிமாற்றம்
- நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
- இச் சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப் பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

AUTHORISED AGENT
MMBL
Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
- அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

FLEX Graphic
License No: C/130/2004



திருகோணமலையில்... சுடர்ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

திருகோணமலையில் தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



உங்களின் இக்காலத் தெரிவுக்கேற்ப மீண்டும் புதுப்பொலிவுடன் வன்னியில்...



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுன், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

KUMARAKURU TEXTILE & FANCY HOUSE
Yarl Road, Kilinochchi.
Tel: 021 228 5971

குமரகுரு
புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ் சாலை, கிளிநொச்சி



EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies...
வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் - கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com




இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஜன. 02 ஆம் திகதி வெளியிடப்பட்டது.